உ

சிவமயம்





அமரர்

வைத்திய கலாநிதி - வைத்திய ரத்னா

# Dr.சுப்பிரமணியம் ஸ்ரீவிக்கினேஸ்வரா

(சிவசக்தி வைத்தியர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்து

# சிவதீபம்

19-12-2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர்

# Dr.சுப்பிரமணியம் ஸ்ரீவிக்னேஸ்வரா

(சிவசக்தி வைத்தியர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# சிவதீபம்

19.12.2015


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



எமது குடும்பத்தின்
ஒளி விளக்காய்த் திகழ்ந்து
எம்மை அன்போடும் பரிவோடும்
ஆற்றுப்படுத்தி வானுறையும்
தெய்வமாகிவிட்ட எம் அன்புத்
தெய்வத்தின் திருவடிக்கு
காணிக்கையாக இம்மலரினை
சமர்ப்பணம் செய்கின்றோம்.

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அன்னை மடியில்
30.11.1943

சிவன் சேவடியில்
19.11.2015

அமரர்

# Dr.சுப்பிரமணியம் ஸ்ரீவிக்கினேஸ்வரா

(சிவசக்தி வைத்தியர்)

## திதி நிர்ணய வெண்பா

கலிநிறை மன்மத ஆண்டு கார்மேகக் கார்த்திகையாம்
வலியுறு திங்கள் மூன்றில் வல்ல வளர்பிறையில்
தண்ணொளித் திதியாம் தக்க கோஷ்டாஷ்டமி தனில்
மண்புகழ் மேலோன் ஸ்ரீவிக்கினேஸ்வரா சென்றனன் சிவனடிக்கீழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாளத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

## தேவாரம்

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழு தெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடரினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமாறு
ஈவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ உனதின்னருள்
ஆவடு துறை அரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத் தலைப் புனலயனேன் தனக்குச்
செம்மையே யாய சிபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரன் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தனர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய பெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணாங்ந்தார் அந்நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

அகரமுமாகி அதிபனுமாகி
அதிகமுமாகி - அகமாகி
அயனென வாகி அரியென வாகி
அரனெனவாகி - அவர்மேலாய்
இகரமுமாகி எவைகளுமாகி
இனிமையுமாகி - வருவோனே
இருநில மீதில் எளியனும் வாழ
எனது முன் ஓடி - வரவேணும்
மகபதியாகி மருவும் வளாரி
மகிழ்களி கூரும் - வடிவோனே
வனமுறை வேடனருளிய பூஜை
மகிழ் கதிர் காம - முடையோனே
செக்கண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடு - மயிலோனே
திருமலிவான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு - பெருமாளே

## திருமந்திரம்

யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே

## வாழ்த்து

மறையொடு சைவம் வாழ்க மானிலம் செழித்து வாழ்க
கறைமிடற் றண்ணலாம் தம் அடியவர் இனிது வாழ்க
பொறையொடு வாய்மை போற்றிப் புவனியில் மாந்தரெல்லாம்
பிறைதவழ் சடையனாரின் அருளினால் நீடு வாழ்க.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்

அன்னை யெத்தனை யெத்தனை அன்னையோ
அப்பனெத்தனை யெத்தனை அப்பனோ
பின்னையெத்தனை எத்தனை பெண்டிரோ
பிள்ளையெத்தனை எத்தனை பிள்ளையோ
முள்ளை யெத்தனை எத்தனை சன்மமோ
மூடனாயடி யேனு மறிந்திலேன்
இன்ன மெத்தனை எத்தனை சன்மமோ
என் செய்வேன கச்சி ஏகம்ப நாதனே.

## பாடல்

ஊரெல்லாங் கூட்டி ஒலிக்க அழுதிட்டுப்
பேரிளை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினுள் மூழ்கி நினைப் பொழித்தார்களே!

## திரு அங்க மாலை

திருநாவுக்கரசு அருளியது

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக் கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

கண் காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்தோள் வீசிநின் றாடும் பிரான் தன்னைக்
கண்காள் காண்மின்களோ

செவிகாள் கேண்மின்களோ - சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப் பிரான் திறம் எப்போதும்
செவிகாள் கேண் பின்களோ

மூக்கே நீ முரலாய் - முது
காடுறை முக்கண்ணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீ முரலாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயே வாழ்த்து கண்டாய் - மத
யானை உரிபோர்த்து
பேய்வாழ் காட்டகத் தாடும் பிரான் தன்னை
வாயே வாழ்த்து கண்டாய்

நெஞ்சே நீ நினையாய் - நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய்

கை காள் கூப்பித் தொழீர் - கடி
மாமலர் தூவி நின்று
பை வாய்ப் பாம்பரை ஆர்த்த பரமனைக்
கை காள் கூப்பிப் தொழீர்

ஆக்கையாற் பயனென் - அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இவ்
ஆக்கையாற் பயனென்

கால்களாற் பயனென் - கறைக்
கண்டன் உறைகோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக்
கால்களாற் பயனென்

உற்றார் ஆருளரோ - உயிர்
கொண்டு போம் பொழுது
குற்றாலத் துறை கூத்தனல்லால் நமக்கு
உற்றார் ஆருளரோ

இறுமாந் திருப்பன் கொலோ - ஈசன்
பல் கணத் தெண்ணப் பட்டுச்
சிறுமான் ஏந்திதன் சேவடிக் கீழ்ச் சென்றங்கு
இறுமாந் திருப்பன் கொலோ

தேடிக் கண்டுகொண்டேன் - திரு
மாலொடு நான் முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## திருவாசகச் சிறப்பு வெண்பா

தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே -எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.

## சிவபுராணம்

நமச்சி வாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசன் அடிபோற்றி சிவன்சே வடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்றஇத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறு நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்மைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
முருகன்துணை

# கந்த சஷ்டி கவசம்



### காப்பு
### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமல னருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

### நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செய்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை

கீதம் பாட கிண்கிணி யாட
மைய நடஞ்செய்யும் மயில் வாகனனார்
கையில்வேலா ல்எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நீறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்குகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ சணமும் பதக்கமுந் தரித்து
நண்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடையழகும் இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல்முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருடன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தனடயறத்தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஸ்டிகப் பேய்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக்கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனை வரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளங்ரகளும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாரெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டதுவோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமார
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப்பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக் குறமகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவநீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திடவருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்க தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவார்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறித்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துணை வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயினட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணம் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ
சக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்தாக
வுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அழிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப்பி தந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமு மவதானமுங்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதன் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்
நிலந் தோய்ப்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்வாய்
படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவராத்திரிப் பாடல்கள்

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள்.

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத் தாங்கி
குலவுச் சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள்.

வஞ்ச மற்ற தொழில்புரிந் துண்டு
வாழும் மாந்தர் குலதெய்வ மாவாள்
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லா
வித்தை யோர்ந்திடு சிற்பியர், தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்
வீர மன்னர் பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடுந் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
　　தீமைகாட்டி விலக்கிடுந் தெய்வம்
உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
　　உயிரி னுக்குயி ராகிய தெய்வம்
செய்வ மொன்றொரு செய்கை யெடுப்போர்
　　செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்
　　கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம்.

செந்த மிழ்மணி நாட்டிடை யுள்ளீர்!
　　சேர்ந்தித் தேவை வணங்குதும் வாரீர்!
வந்த னம்இவட் கேசெய்வ தென்றால்
　　வாழி ய∴திங் கெளிதன்று கண்டீர்!
மந்தி ரத்தை முணுமுணுத் தேட்டை
　　வரிசை யாக அடுக்கி அதன்மேல்
சந்த ணத்தை மலரை இடுவோர்
　　சாத்தி ரம்இவள் பூசனை யன்றாம்.

வீடு தோறும் கலையின் விளக்கம்
　　வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
　　நகர்க ளெங்கும் பலபல பள்ளி
தேடு கல்வியி லாததொ ரூரைத்
　　தீயி னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
　　கேண்மை கொள்ள வழியிவை காண்டீர்

ஊணர் தேசம் யவணர்தந் தேசம்
　　உதய ஞாயிற் றொளி பெறுநாடு
சேண கன்றதோர் சிற்றடிச் சீனம்
　　செல்வப் பார சிகப்பழந் தேசம்
தோண லத்த துருக்கம் மிசிரம்
　　சூழ்க டற்கப் புறத்தினில் இன்னும்
காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்
　　கல்வித் தேவியின் ஒளி மிகுந் தோங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சித்தி விநாயகனே வா வா வா

சித்தி விநாயகனே வா வா வா
சித்தம் தெளிய அருள் தா தா தா
அத்தி முகத் தோனே வா வா வா
அஞ்ஞானம் போக்கி அருள் தா தா தா

ஓங்கார மெய்ப் பொருளே வா வா வா
ஆங்காரம் போக்கி அருள் தா தா தா
மாங்கனியைக் கொண்டோனே வா வா வா
மமகாரம் தீர அருள் தா தா தா

வேலவர்க்கு முன்னவனே வா வா வா
வேண்டும் வரமெனக்குத் தா தா தா
மேலவர்க்கு மேலானாய் வா வா வா
மீண்டும் பிறவா வரம் தா தா தா

நீர் நொச்சித் தாழ்வோனே வா வா வா
நிர்மலனே நித்யானந்தம் தா தா தா
தேவர்க் கருள் புரிவோய வா வா வா
தெவிட்டாத பேரின்பம் தா தா தா

கஜமுகனைச் சங்கரித்தோய் வா வா வா
அபயம்: எனைக் காக்க அருள் தா தா தா
சிவனார் முதற் கொழுந்தே வா வா வா
தினமும் உனைத் துதிக்க அருள் தா தா தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அபிராமி அம்மையை வேண்டி

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி யிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழவும்
துய்ய நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்!
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே!
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுக பாணி!
அருள்வாமி! அபிராமியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைப் பாதை...

"தந்தூரும் செஞ்சாலி நாற்புறமும் சூழ் கரவை
பாவலரும் பூசுரரும் பண்ணிசைக்கும் வண்டினமும்
காவலரைச் சூழும் கரவை"

என்று வர்ணிக்கப்படும் ஈழவள நாட்டின் வடமராட்சி பிரதேசத்தில் கரவெட்டி கிழக்கு எனும் இடத்தை சொந்த இடமாகவும், யாழ் நகரிலே அரியாலை மத்தி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் வைத்திய கலாநிதி, வைத்திய ரத்னா டாக்டர் சு.ஸ்ரீவிக்கினேஸ்வரா அவர்கள் 1943ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் முப்பதாம் திகதி சுப்பிரமணியம் செல்வமலர் தம்பதிக்கு ஹொறவ பொத்தானை எனும் ஊரிலே ஐந்தாவது செல்வமாக வந்துதித்தார்.

இவருக்கு இராஜவேலு இராமச்சந்திரராஜா, இந்திராவாதி, பரமேஸ்வரி, யசோவதி, விமலாவதி, பிறேம்குமார், அருந்ததி, நந்தீஸ்வரன், தமயந்தி, ஆகியோர் சகோதர சகோதரிகளாவார்கள்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை மன்னார் பேசாலை எனும் இடத்திலும் பின்பு தந்தையின் ஆயுள் வேத வைத்திய தொழில் நிமித்தம் மாற்றலாகி மன்னார் விடத்தல் தீவிலும் பின்பு ஓமந்தையிலும் இறுதியாக தனது உயர் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் கற்றார்.

கல்லூரிக் காலத்தில் இவர் ஒரு துடிப்புமிக்க மாணவனாக திகழ்ந்ததோடு சாரணீய படையிலிருந்து பல சமூக சேவைகள் ஆற்றினார். ஒரு சமயம் சாரணீயப் படையில் சேவையின்போது தோள்பட்டையில் என்பு முறிவு ஏற்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருந்தார்.

பின்பு இவர் ஆயுர்வேத வைத்தியத்தில் ஈடுபாடு கொண்டு தனது தந்தையை போல் ஆயுர்வேத வைத்தியராகி மக்களிற்கு சேவை செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற நோக்கோடு 1961ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்த லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவ கல்லூரியில் இணைந்து மருத்துவம் கற்றார் பின் இராஜகிரிய ஆயுர்வேத வைத்தியசாலையில் தன் ஆரம்ப மருத்துவ பயிற்சியை முடித்துக்கொண்டு 1965ஆம் ஆண்டு ஆயுர்வேத பட்டதாரியாக வெளியேறி அவ்வாண்டிலேயே அரியாலை கண்டி வீதியில் புங்கன் குளம் சந்தியில் "சிவசக்தி வைத்திய நிலையம்" எனும் வைத்திய சாலையை நிறுவி மக்களிற்கு சேவையாற்றி வந்தார்.

பின்னர் 1975ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் ஆறாம் திகதி அரியாலை யில் வசித்துவந்த ஆசிரியையான சிவக்கொழுந்து யோகம்மா என்பவரை தனது இல்லத் துணைவியாக கைப்பிடித்தார்.

நாற்பது ஆண்டு காலமாக இவர் ஆற்றிய இல்லற வாழ்க்கையின் நற்பேறுகளாக அபிராமி, அரவிந்தன் என்னும் புத்திரச் செல்வங்களைப் பெற்று மகிழ்ந்தார்.

இக் காலப்பகுதியிலே யாழ் நகர் கிழக்கு பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளராகவும் கடமையாற்றிய இவர் மக்களிற்கு அளப்பரிய சமூக சேவைகளையும் ஆற்றிவந்தார். இதனால் மக்களின் வேண்டுகோளிற்கு அமைய அரியாலை சனசமூக நிலையத்திலும் தலைமைப்பதவி ஏற்று அக் காலத்தில் சேவையாற்றினார்.

வைத்தியராக மட்டுமன்றி ஒவ்வொருவருடைய சுக துக்கங்களிலும் மிகுந்த ஈடுபாட்டுடனும் உரிமையுடனும் நடந்து கொள்ளுதல் இவரது இயல் பான குணமாகும் அதனால் தான் எல்லோர் மனதிலும் நீங்காத இடம் பிடித் திருந்தார். பின் நாட்டுப்பிரச்சனைகள் இடம் பெயர்வுகள் போன்றவற்றில் மக்களிற்கு அளப்பரிய சேவைகள் செய்தது மட்டுமல்லாது தர்மபுரம் எனும் இடத்திலும் தனது வைத்திய சாலையை நிறுவி மக்களிற்கு சேவை செய்தார். அவ்வகையில் வன்னி வாழ் மக்களின் பெருமதிப்பையும், நட்பையும் பெற்றிருந்தார் பின் 2002ஆம் ஆண்டளவில் மீண்டும் யாழ்ப் பாணம் வந்து தனது சேவையினை அரியாலையில் தொடர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பிள்ளைகள் கல்வியில் உயர்நிலைக்குக் கொண்டுவர அரும்பாடுபட்டார். உயர் பதவிகளில் இவர்கள் இருப்பதைக்கண்டு மனம் பூரித்தார். பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைத்தும் பெரு மகிழ்ச்சி அடைந்தார்.

மகள் அபிராமிக்கு, இராஜ்குமார் என்பவரை திருமணம் செய்து வைத்தார் தற்போது மகள் அபிராமி யாழ் பல்கலைக்கழகத்தில் உளவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளராகவும் மருமகன் இராஜ்குமார், இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியாக கட்டு நாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் கடமையாற்றுகின்றனர். இவர்கள் ஆதிஷ், ஆதர்ஷ் எனும் இரு புத்திரச் செல்வங்களை பெற்றுள்ளனர்.

மகன் அரவிந்தனுக்கு நளினி என்பவரை திருமணம் செய்து வைத்தார் அவர்கள் இருவரும் தற்போது அவரது சிவசக்தி வைத்திய நிலையத்தில் வைத்தியர்களாக கடமை ஆற்றுகின்றனர் இவர்கள் ஆகாஷ் எனும் செல்வ மகனை பெற்றுள்ளனர்.

பின் 2010ஆம் ஆண்டளவில் புதிதாக சிவசக்தி வைத்திய நிலையம் ஒன்றை கட்டுவித்து அதன் மூலம் வைத்திய சேவையாற்றிவந்தார். மேலும் வட இலங்கை சுதேச மருத்துவசபையின் தலைவராகவும் பின் வட இலங்கை சுதேச மருத்துவசபையின் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும், இலங்கை காச நோய் தடுப்பு சங்கத்தின் வட இலங்கை கிளையின் உபதலைவராகவும் செயற்பட்டு மருத்துவத்தை வளர்க்கும் அளப்பரிய சேவைசெய்து இறுதிவரை ஆயுர்வேத மருத்துவத்திற்காக அரும் பாடுபட்டார். இக்காலப்பகுதியிலே நல்லூர் பிரதேச செயலக ஆயுர்வேத பாதுகாப்பு சபையின் தலைவராகவும் செயற்பட்டார்.

"மக்கள் சேவையே மகேசன் சேவை"

"செய்யும் தொழிலே தெய்வம்" என்பன வைத்தியர் ஶ்ரீவிக்கினேஸ்வரா அவர்களுக்கென்றே எழுதப்பட்ட தாரக மந்திரங்கள் என்றே சொல்லவேண்டும். சிவசக்தி டாக்டர் என்றால் ஊரில் அவரைத் தெரியாதவர்கள் யாருமே இருக்கமாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் J/92 அரியாலை மத்தி மேற்கு கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினராக செயற்பட்ட அமரர் 2013ஆம் ஆண்டு சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று அமரத்துவம் அடையும் வரை சிறப்புற நிர்வகித்து வந்தார்.

தான் வகித்த பதவிகளிலும், சேவைகளிலும் இறுதிவரை முழுமூச்சுடன் செயற்பட்டு வந்த அமரர் Dr.சு.ஸ்ரீவிக்கினேஸ்வரா அவர்கள் "காலன்" ஏற்படுத்திய நோயின் காரணமாக அவதிப்பட்டு வந்த போதிலும் தனக்கு மக்கள் கொடுத்த அனைத்து பணிகளையும் சிறப்புற இறுதிவரை செய்தார்.

அன்னார் தீர்க்க தரிசனமாக தனது பதவிகளையும் பொறுப்புக் களையும் கார்த்திகைமாதத்தின் ஆரம்பத்தில் ஒப்படைத்துவிட்டு 2015ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் பத்தொன்பதாம் திகதி பாசமிகு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர் ஊர் மக்கள் ஆகியோரை வேதனையிலாழ்த்தி சிவனடி சேர்ந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அலுவலரின் இரங்கல் செய்தி...

நேரமுகாமைத்துவமோ, பணப்பாதீடோ, உடல் உழைப்போ, கட்டுப் படுத்த முடியாத முற்றிலும் மனிதநேயமும், அன்பான அணுகுமுறையும் கொண்டதுதான் வைத்தியத் தொழில். வைத்தியத்தொழில் என்று கூறு வதை விட வைத்திய சேவை என்பதே சாலப் பொருத்தமாகும். இத்தகைய வைத்திய சேவையை இச் சேவைக்குரிய இலட்சியங்களுடன் ஆற்றி, எம் கிராம மக்களின் அன்பையும், ஆதரவையும், ஆசியையும் பெற்று தன் வாழ் வியலை வாழ்ந்து நிறைவேற்றிய பண்பாளன் திரு.சுப்பிரமணியம் ஸ்ரீ விக்னேஸ்வரா என்பதில் நான் பெருமையடைகிறேன்.

"உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச் செல்வானென்று
அப்பால் நாற் கூற்றே மருந்து"

என்ற வள்ளுவனின் கருத்துக்கிசைய நோயாளி, மருத்துவன், மருந்து, துணையாளி என்ற இந் நான்கையும் தன் கூறுகளாய்க் கொண்டு நோயாளிகளின் நிலையையும், நோயின் நிலையையும், காலத்தையும் அறிந்து செயற்பட்ட இவரின் செயற்பாடே தனி.

மனிதம், மண்பற்று நிறைந்த இம் மாமனிதனின் மறைவு எம் கிராமத்துக்கு மட்டுமல்ல எம் இனத்திற்கு ஓர் இழப்பாகும். மருத்துவ சேவையுடன் மட்டுமல்லாது மக்கள் சேவையாக J/92 கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக இருந்து, இக்கிராமத்தின் அபிவிருத் திப் பணிகளிலும் தன்னை முற்றுமுழுதாக இணைத்துக் கொண்டவர். தற் போதய தலைவராக இருந்துவரும் இவர், சென்ற மாதம் தான் 'கிராமத் துக்கான ஒரு மில்லியன் ரூபா' அபிவிருத்தி வேலைத்திட்டத்தை வெற்றிகர மாக இக் கிராமத்தில் நிறைவேற்றி முடித்துக்கொடுத்திருந்தார். அத்துடன் எமது கிராம மக்களின் நலன்கருதி பிறப்பு, இறப்பும் பதிவாளராக யாழ்.நகர் கிழக்குப் பகுதிக்கு பல வருடகாலமாக செயற்பட்டுவந்தார். அத்துடன் து/92 பிரிவுக்கான டெங்கு கட்டுப்பாட்டுக்குழு, அனர்த்த முகாமைத்துவக் குழுவிலும் உறுப்பினராக இருந்து எனக்குப் பல அறிவுரைகளையும் செயற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டயோசனைகளையும் கூறிவந்தார். இவ்வாறாக சுய பொருளாதார நோக்கற்ற, மக்கள் மயப்படுத்தப்பட்ட சேவைகளையாற்றி ஓர் சமூக சேவை யாளராகவும் தன்னை உருவாக்கிக் கொண்டார்.

இந்த உத்தமரது இழப்பு எனக்கும் எம் அரியாலைக் கிராமத்துக்கும் பேரிடரைத் தந்தபோதும் ஒவ்வொருவரதும் நெஞ்சத்திரையில் என்றும் நிழலாக இவர் நிற்பார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அவரின் ஆத்மா சாந்திபெற இறைவனை என் சார்பாகவும் என் பிரிவு மக்கள் சார்பாகவும் வேண்டிக் கொள்கிறேன்.

நன்றி

**P.T.P.தஜீதரன்**
**கிராம அலுவலர்**
**J/92, அரியாலை மத்தி மேற்கு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை மனப்பாங்குடன் திகழ்ந்த செம்மல்

கடந்த 19.11.2015 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எம்மூர் மக்களின் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவராக விளங்கிய வைத்தியர் சுப்பிரமணியம் ஸ்ரீ விக்கினேஸ்வரா அவர்களைப் பற்றிய இவ் இரங்கல் செய்தியை சமர்ப்பிப்பதில் பெருமை அடைகின்றேன்.

அமரருடனான எனது தொடர்பு அன்னார் அரியாலையில் காலடி வைத்த 1965ஆம் ஆண்டில் ஆரம்பமாகியது.

ஆயுர்வேத வைத்திய வசதி குறைந்த நிலையில் வாழ்ந்த எமது ஊர் மக்களின் மனக்குறையை அறிந்து, உணர்ந்து அவ் வெற்றிடத்தை அற்றுப் போகச் செய்து, அமரர் நடாத்திய 'சிவசக்தி வைத்திய நிலையம்' ஊடான மக்கள் சேவை பாராட்டுதற்குரியது. இவ் வைத்திய நிலையத்தை நடாத்திய தன் பிரதிபலிப்பாக, அமரர், எம்மூரவர்களின் குறிப்பாக வசதி குறைந்தவர் களின், நல் மதிப்பைப் பெற்றவராக விளங்கினார்.

அமரர் ஆற்றிய மக்கள் சேவை மருத்துவத்துறைக்கு மட்டுப்படுத்தப் பெற்று இருக்கவில்லை. ஊரில் இயங்கும் சமூக நலன் சார்ந்த அமைப் புக்களின் செயற்பாடுகளில் ஈடுபாடு காட்டி நிதி உதவி வழங்கி தன்னாலான ஒத்துழைப்பை நல்கி வந்தமையையும் ஈண்டு குறிப்பிட விரும்புகின்றேன்.

எனது அயலில் நிரந்தர குடிமகனாக இடம்பிடித்த அமரர் எமது கிராம உத்தியோகத்தர் பிரிவில் இயங்கிய ஜே/92 அரியாலை மத்தி மேற்கு கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினராக இணைந்து எமது கிராம உத்தியோகத்தர் பிரிவு மக்களுக்கு ஆற்றிய சேவையையும் ஈண்டு நினைவு கூர விரும்புகின்றேன். 2013ஆம் ஆண்டு இச் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை என்னிடமிருந்து ஏற்றுக்கொண்ட அமரர் இறைவனடி சேரும் வரை இப் பொறுப்பை சிறப்பே ஆற்றி வந்த பெருமைக்கு உரியவர்.

'சிவசக்தி' என்று மக்கள் அனைவரலாறும் அன்பாக அழைக்கப்பெற்ற அமரர் சுப்பிரமணியம் ஸ்ரீ விக்கினேஸ்வரா அவர்கள் சமீப காலமாக உடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலக் குறைவுடன் இருந்தமை எம் எல்லோரையும் துயரத்தில் ஆழ்த்தி இருந்தது. அமரரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தின ருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அன்பிற்கும் பண்பிற்கும் அனிகலனாக விளங்கிய அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனின் திருவருளை வேண்டி எனது இவ் இரங்கல் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

ஓம் சாந்தி

**S.T.பத்மநாதன்**
**(சமாதான நீதிவான்)**

**169, கண்டி வீதி,**
**அரியாலை,**
**யாழ்ப்பாணம்.**
**07.12.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறர்க்கு ஒளியூட்டிய
# வைத்திய ஜோதி ஸ்ரீவிக்கினேஸ்வரா

Dr.சிவசக்தி என அன்பாக அழைக்கப்படும் சித்த வைத்தியர் சுப்பிரமணியம் ஸ்ரீவிக்கினேஸ்வரா அவர்களின் மரணச் செய்தி கேட்டதும் மிகவும் வேதனை அடைந்தேன். நினைவலைகள் உடனே 1965 ஆண்டுக்கு இழுத்துச் சென்றது. அப்பொழுதுதான் நான் அவரை முதன்முதலில் கொழும்பில் சந்தித்திருந்தேன். கொழும்பு பொரளையில் உள்ள அரசாங்க சுதேச வைத்திய நிறுவனத்தில் கற்றுக்கொண்டிருந்தார். அவருடன் அரியாலையில் இயங்கிய பூரணா டிஸ்பென்சரி வைத்தியர் Dr.சுந்தரலிங்கம், யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் பவானி போன்றோர் கற்றுக்கொண்டிருந்தனர்.

பின்பு Dr.ஸ்ரீவிக்னேஸ்வரா அவர்கள் எமது ஊரைச் சேர்ந்த திரு.திருமதி.சிவக்கொழுந்து சின்னம்மா அவர்களின் புதல்வி ஆசிரியர் யோகம்மா அவர்களை மணம்புரிந்து எமது ஊர் வாசியாக வந்தது மாத்திரமன்றி எமது ஊரிலேயே சிவசக்தி வைத்திய நிலையம் ஒன்றை நடாத்தி ஊர் மக்களுக்கு சிறந்த மருத்துவ சேவையாற்றி மக்கள் மனதில் நிறைவான இடத்தைப் பிடித்திருந்தார். மேலும் பதிவாளராகவும் சிறந்த பணியாற்றி வந்தவர்.

சுதேச மருத்துவத்தில் எனக்கு நல்ல விருப்பங் காரணமாக ஸ்ரீவிக்னேஸ்வரா அவர்களிடம் வைத்தியமும் ஆலோசனைகளையும் பெற்று வந்தேன். சென்ற மாதம் 3ம் திகதி காலை 7.00 மணியளவில் Dr.ஸ்ரீவிக்னேஸ்வராவை அவரின் வீட்டில் சந்தித்து எமது முன்னாள் புயு திரு.பத்மநாதனின் மனைவி இறந்ததை அறிவித்து மரணச் சான்றிதழ் பற்றிக் கதைத்த போது நவம்பர் 10ந் திகதி முன்பாக சான்றிதழைப் பெற்றுக் கொள்ளும் படியும் அதன் பின்பு அப்பணியிலிருந்து தான் ஓய்வு பெற்று நவம்பர் 19ம் திகதி இறைவனடி சேர்ந்தது எவ்வளவு தீர்க்க தரிசனமாகி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dr.ஸ்ரீவிக்கினேஸ்வராவைப் போன்றே அவரது பிள்ளைகளும் மனைவி மற்றும் உறவினர்களும் தொடர்ந்து நல்ல பணிகளை ஆற்றி வருகின்றனர். அவருடைய வைத்திய பணிகளும் சிகிச்சை நிலைய சேவைகளும் தொடருகின்றன. அன்னாரது ஆன்மா சாந்தியடைய இறை வனை பிரார்த்திக் கிறேன்.

**கலாநிதி சு.மோகனதாஸ்**
**முன்னாள் துணைவேந்தர்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

## பொன் மொழிகள் பத்து

| | | |
|---|---|---|
| வருவது போவதும் இரண்டு | - | இன்பம் துன்பம் |
| வந்தால் போகாதது இரண்டு | - | புகழ், பழி |
| போனால் வராதது இரண்டு | - | மானம், உயிர் |
| தானாக வருவது இரண்டு | - | இளமை, மூப்பு |
| நம்முடன் வருவது இரண்டு | - | பாவம், புண்ணியம் |
| அடக்கமுடியாதது இரண்டு | - | பசி, தாகம் |
| தவிர்க்க முடியாதது இரண்டு | - | ஆசை, துக்கம் |
| நம்மால் பிரிக்கமுடியாதது இரண்டு | - | பந்தம். பாசம் |
| அழிவைத் தருவது இரண்டு | - | பொறாமை, கோபம் |
| எல்லோருக்கம் சமமானது இரண்டு | - | பிறப்பு, இறப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலைக் கோர் பேரிழப்பு

**மனித நேயம் மிக்க பண்பாளன் வைத்தியர் சு.ஸ்ரீவிக்கினேஸ்வரா அவர் களின் மறைவு.**

இயற்கையின் கொடுமைகளில் முதன்மையானது மரணம் வைத்தியர் சுப்பிரமணியம் ஸ்ரீவிக்கினேஸ்வரா இயற்கையெய்தினார் என்ற செய்தி கேட்டதும் சிறிது நேரம் ஒன்றும் செய்ய முடியாது இருந்துவிட்டேன். காரணம் நான் மிக நெருக்கமாகப் பழகியவர்களில் வைத்தியர் சு.ஸ்ரீவிக்னேஸ்வரா ஒருவர்.

இவர் கரவெட்டியில் உள்ள பூர்வீக வைத்திய குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தையாரும் ஒரு வைத்தியர். வைத்தியக் கல்வியை நிறைவு செய்ததும் இறைவனுக்கு மட்டுமே நன்றாகத் தெரிந்த காரணத் தினால் ஒரு இளைஞனாக வைத்தியம் செய்வதற்கு அரியாலை மண்ணை தெரிவு செய்தார். என்றைக்கு அரியாலை மண்ணில் காலடி எடுத்து வைத்தாரோ அன்றில் இருந்தே எமது குடும்பமும் அவரும் இனிய குடும்ப நண்பர்களானோம்.

அவர் தன்னுடைய வைத்திய நிலையத்துக்கு "சிவசக்தி வைத்திய நிலையம்" என்று பெயர் சூட்டினார். அன்றிலிருந்தே அரியாலை மக்கள் அவரை அவருடைய ஸ்ரீவிக்கினேஸ்வரா என்ற இயற் பெயரிலும் பார்க்க "சிவசக்தி" என்றே அறிந்திருந்தனர். வைத்தியத்தைப் பொறுத்த அளவில் நல்ல பெயருடனும், புகழுடனுமும் விளங்கினார். அரியாலை மக்கள் மட்டு மல்ல வெளியூர்களில் இருந்தும் வைத்தியத்திற்காக மக்கள் அரியாலையில் குவியத் தொடங்கினார்கள்.

வைத்தியர் என்பதற்கு அப்பால் இயற்கையாகவே, இவரிடம் சாதாரண மனிதரைவிட அதிகமாக மனித நேயம் இருந்தது. இதனால் சமூக சேவையிலும் தன்னை இனைத்துக்கொண்டார். எங்கே பிரச்சனை என்றாலும் முதல் மனிதராக அங்கே பிரசன்னமாக இருப்பார். நலிவடைந் தோருக்கு உதவுவது இவரிடம் இயற்கையாக அமைந்த பிறவிக்குணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை கிராமம் யாழ் மாநகரசபையின் ஐந்து வட்டாரங்களை உள்ளடக்கிய பகுதி. அந்த ஐந்து வட்டரா மக்களையும் அவர் தனிப்பட்ட முறையில் நேரிடையாக அறிந்திருந்தார். மக்களும் அவரை "சிவசக்தி" என்றே அன்பாக அழைத்தனர்.

வைத்தியத்துக்காக அரியாலை வந்த அவர் இந்தக் கிராமத்தை தன்னுடைய கிராமமாக சுவீகரித்துக் கொண்டார். அரியாலையில் நடாத்தப்படும் எந்த ஒரு விழாவுக்கும் அவருடைய பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாக இருக்கும். அவருடைய சேவையை அங்கீகரிக்கும் வகையில் மக்கள் அவரை அரியாலை சனசமூக நிலைய தலைவராக்கி மகிழ்ந்தார்கள்.

அவர் அரியாலை மண்ணை எந்த அளவுக்கு நேசித்தார் என்பதற்கு சான்று அரியாலையில் கல்வித்துறையில் சிறந்து வழங்கிய பெண்ணை தனது வாழ்க்கைத்துனைவியாக தேர்ந்தெடுத்தது மட்டுமல்ல தனது தந்தையாரின் அந்திமக் கிரிகைகளையும் அவருடைய பிறந்த ஊராகிய கரவெட்டியில் நடத்தாமல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் நடாத்தியது.

என்னுடைய பார்வையில் அவருடைய இழப்பு அரியாலை மண்ணுக்கு ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மகா மாரி அம்பாளை பிரார்த்திக்கின்றேன்.

**ந.குகதாசன்**
**ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர்,**
**இலங்கை மின்சார சபை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி
## அமரர் சு.ஸ்ரீவிக்கினேஸ்வரா அவர்களுக்கு

அமரர் Dr.சு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் அவர்களின் (தலைவர் யா/அரியாலை மத்தி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம்) பிரிவையிட்டு எமது சங்கம் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த துயரினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னார் நோயுற்று இருந்த போதும் எமது சங்கத்தின் செயற்பாடு களில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி எமது பிரிவில் எமது சங்கத்தினால் செயற்படுத்த வேண்டிய செயற்றிட்டங்களை செவ்வனே முழு மனத்துடனே. அன்னாரது பணி என்றென்றும் எம்மால் மறக்க முடியாது. அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நிர்வாகிகள்**
**யா/92 அரியாலை மத்தி மேற்கு,**
**கிராம அபிவிருத்திச் சங்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சிருக்கும்வரை நினைவுகள் பிரியாது!

அன்பாலும் பண்பாலும் எங்கள் எல்லோரது மனதிலும் நீக்கமற நிறைந்துள்ள அமரர் வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் ஸ்ரீவிக்கினேஸ்வரா அவர்கள் எம்மை விட்டு பிரிந்து ஒரு மாதம் உருண்டோடி விட்டது. அன்னார் சுகவீனமுற்று அமரத்துவம் அடைந்த செய்தி டாக்டர் ஜெ.ஜெயலன் மூலம் அறிந்ததும் பெரும் அதிர்ச்சியும் துயரமும் அடைந்தேன்.

அமரர் எனது குடும்ப நண்பர், எனது சகோதரர் டாக்டர் கே.ஜெயச்சந்திர மூர்த்தி யாழ்.லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி யில் கற்ற காலம் நான் அப்போது எட்டாம் வகுப்பில் மத்தியக் கல்லூரியில் கல்வி பயின்ற வேளை அவ்வேளைகளில் எனது சகோதரருடன் வைத்தியக் கல்லூரிக்கு செல்வேன். அமரர் ஸ்ரீ விக்கினேஸ்வராவை அன்னார் அறி முகம் செய்து வைத்தார்.

நெற்றியில் அழகே உருவாக சந்தனப்பொட்டு. மிக எளிமையாக காணப்படுவார். பின்னர் நான் யாழ்.லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் மாணவனாக சேர்ந்த போது மாணவர் சங்கத் தலைவராக, பத்திராதிபராக (வைத்தியக்களஞ்சியம் ஆசிரியர்) தெரிவானேன்.

அமரர் என்னை அணுகி வாழ்த்துத் தெரிவித்தார். எமது மன்றத்திற்கும் கல்லூரிக்கும் ஒத்துழைப்பு வழங்கினார். பின்பு 2010ஆம் ஆண்டில் நான் யாழ்ப்பாணம் வந்தேன். அமரர் ஸ்ரீவிக்கினேஸ்வராவும் டாக்டர்.ஜெயலனும் என்னை கல்லூரி இயக்குனர்சபைக்கு உபதலைவராக உறுப்பினர்களது ஒத்துழைப்புடன் தெரிவு செய்தனர்.

அமரர் வைத்திய கலாநிதி ஸ்ரீ விக்கினேஸ்வரா வட இலங்கை சுதேச வைத்தியசபை தலைவராக இருந்து லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரிக்கு ஆற்றிய சேவைகள் அளப்பெரியது.

இக்கல்லூரியின் இயக்குனர் சபையை கலைத்து பாரம்பரியம் மிக்க பழமை வாய்ந்த இக் கல்லூரியை மூடிவிட சிலர் கங்கணம் கட்டினர். அதனை கலாநிதி என்.யோகராஜன், டாக்டர் ஜெயலன் மற்றும் என்னுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து வெற்றிகரமாக முறியடித்து இன்று இக் கல்லூரி வளர்ச்சிப்பாதையில் செல்ல வழிகோலினார்.

கடந்த இரு மாதங்களுக்கு முன்பு என்னை அழைத்து கல்லூரியினதும் வட இலங்கை சுதேச வைத்திய சபையினதும் தலைமைப் பதவியை ஏற்குமாறு அன்புக்கட்டளை இட்டார். தனது சுகவீனத்தால் தான் பதவியை தொடர முடியாது எனவும் குறிப்பிட்டார். சபையின் உறுப்பினர்களான கலாநிதி யோகராஜன், டாக்டர்கள் ஜெ.ஜெயலன், செல்வலிங்கம், பரம்சோதி நாதர், போன்றோரின் வேண்டுகோளையும் ஏற்று தலைமைப் பதவியை ஏற்றேன்.

மேலும் அமரரின் கனவு நினைவாக இக் கல்லூரி மேலும் அபிவிருத்தியடைய வேண்டும். பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்று கோரி அமரர் ஆற்றிய பணி வார்த்தைகளால் சொல்ல முடியாது. மருத்துவ பதிவாளராக சமய சமூக சேவையாளராக மனித நேயம் மிக்கவராக விளங்கியமையையும் இடம்பெயர்ந்து கிளிநொச்சிக்கு வந்து மக்களுக்கு ஆற்றிய பணிகளையும் என்றுமே மறக்க முடியாது.

"நெஞ்சிருக்கும்வரை அமரரின் நினைவுகள் பிரியாது"

**இங்ஙனம்**
**டாக்டர் கே.திருலோகமூர்த்தி**
**தலைவர்**
**(வட இலங்கை சுதேச வைத்திய சபை)**
**மரண விசாரணை அதிகாரியும் அகில இலங்கை**
**சமாதான நீதிபதியும் சிரேஷ்ட**
**ஊடகவியலாளரும்**
**கௌரி வைத்தியசாலை**
**கிளிநொச்சி.**
**01.12.2015**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் மூத்த பழைய மாணவரும் வட இலங்கை சுதேச வைத்திய சபையின் நீண்டநாள் தலைவரும், சிவசக்தி வைத்தியசாலை வைத்தியரும், நல்லூர் ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் முன்னாள் தலைவரும், முன்னாள் யாழ் நகர் கிழக்கு பிறப்பு, இறப்பு மருத்துவப் பதவாளருமான Dr.சு.ஶ்ரீவிக்கினேஸ்வரா அவர்களின் இழப்பினை நினைத்து வருந்துகின்றோம். அவரது ஆன்மா இறைவனுடன் இரண்டறக்கலக்க இறைவனை வேண்டுகின்றோம்.

**Dr.திருமதி.ச.ஜெயலன் DAM-RIMP**
**முன்னாள் விரிவுரையாளர்**
**(லங்கா சித்த ஆயுள்வேத**
**மருத்துவக் கல்லூரி)**
**வைத்தியர் சுஜீவா வைத்தியசாலை.**

**Dr.ஜெ.ஜெயலன் DAM-RIMP**
**மருத்துவப்பதிவாளர் (யாழ் நகர் மேற்கு)**
**வைத்தியர் – சுஜீவா வைத்தியசாலை**
**தலைவர் – நல்லூர் ஆயுள் வேத பாதுகாப்பு சபை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

அமரர் Dr.சுப்பிரமணியம் ஸ்ரீ விக்கினேஸ்வரா (D.A.M) கல்லூரி படிப்பை முடித்ததும் தான் சித்த மருத்துவம் கற்க வேண்டும் என்ற ஆதங்கத்துடன். யாழ் லங்கா சித்த மருத்துவ கல்லூரியில் சித்த மருத்துவத்தை சிறந்த முறையில் சற்று தேறி D.A.M பட்டதாரியாக வெளியேறி இலங்கை ஆயுள் வேத வைத்திய சபையிலும் பதிவு பெற்று, சந்தியிலே சிவசக்தி வைத் திய நிலையம் எனும் பெயரிலே மருத்துவமனை ஆரம்பித்து மக்களுக்கு சிறந்த சேவையாற்றியதன் மூலம் அப்பிரதேசத்திலே பெரும் பெயருடன் வாழ்ந்து வந்த தோடு, தனது குடும்ப வாழ்வை ஆரம்பித்து அன்புத் துணை வியாருடன் மருத்துவ சேவையுடன் பொதுச் சேவை செய்ய வேண்டும் என்று எண்ணி அப்பகுதியில் பல பதவிகளை வகித்து வந்ததீர், ஆயுர்வேத பாதுகாப்பு சபை உருவான போது நல்லூர் பிரதேச ஆயுர்வேத பாதுகாப்பு சபையின் தலைவராக பணியாற்றியதோடு, யாழ்ப்பாணத்தில் பிரபல்யமாக இருந்த வட இலங்கை சுதேச வைத்திய சபையின் தலைவராகவும் பதவியேற்று சித்த மருத்துவ வளர்ச்சிக்காகவும், சித்த மருத்துவர்களின் முன்னேற்றத்திற்காக வும் பாடுபட்ட ஒரு மனிதராக திகழ்ந்து வந்துள்ளீர், அதேவேளை தான் படித்த சித்த மருத்துவ கல்லூரியை ஒரு வளமிக்க கல்லூரியாக மாற்ற வேண்டும் என்ற பரந்த எண்ணத்துடன் இச்சபை மூலம் அரும்பெரும் பாடுபட்டு வந்துள்ளீர், தனது வாழ்நாளில் சித்த மருத்துவத்தில் மக்களுக்கு பல சேவைகளைச் செய்தமையால் அப்பகுதி மக்கள் இவரை உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து பார்த்து வந்தனர். ஏழை எளியவருக்கு இலவச மருத்துவத்தைச் செய்து அவர்களின் நோய்களை நீக்கி அம்மக்களின் வாழ்த்தையும், ஆசியையும் பெற்று வாழ்ந்த ஒரு உத்தமர் தானே நீங்கள், உருவத்தில் சிறியவராக இருந்தும் தனது உள்ளத்தாலும், செயலாலும் பெயரும், புகழும் பெற்ற நற்பிறவி தானே நீங்கள், இறை நம்பிக்கையுடன் தன்னம்பிக்கை கொண்ட ஒரு மனிதராக சுமார் 50 வருடங்களுக்கு மேலாக சித்தி மருத்துவத்தை செய்து அதன் உழைப்பாலும், முயற்சியாலும் தனது குடும்பத்தை ஒரு உன்னத இடத்திற்கு இட்டுச் சென்றுள்ளீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மருத்துவப்பணியுடன் மக்களுக்கு பணியாற்றும் எண்ணத்தில் யாழ் கிழக்கு, இறப்பு பதிவாளராக சுமார் 20 வருடத்திற்கு மேலாக சேவையாற்றி மக்களுக்கு பெரும்பணியாற்றி உள்ளீர்கள். எல்லாவகையிலும் தங்களின் இடத்தை யார் நிறைவு செய்வார் என்பது தற்போதைய சித்த மருத்துவ சமுதாயத்தின் ஆதங்கமாக இருக்கின்றது. ஸ்ரீவிக்கினேஸ்வரன் ஐயா அவர்களே. தாங்கள் இவ் மண் உலகைவிட்டு விண்ணுலகம் சென்றாலும் சித்த மருத்துவ சமுதாயம் இருக்கும்வரையும் அவராலே வளர்க்கப்பட்ட யாழ் லங்கா சித்த மருத்துவ கல்லூரி மாணவர்களாலும் அவ் சமூகத்தாலும் அவரின் பெயரும், புகழும் இம்மண்ணிலே நிலைத்திருக்கும் என்பதே உறுதி. இதே அவருக்கு நாம் செய்யும் கைமாறுயாகும். ஸ்ரீ விக்கினேஸ்வரன் ஐயா அவர்களே தங்களை என் மனதால் எண்ணி வாழ்த்தி வணங்கி நிற்கின்றேன்.

இறைகளோடு இசைந்த இன்பம்
இன்பத்தோடு இசைந்த வாழ்வு.

இதய நெகிழ்வுடன்,
**சித்த வைத்திய கலாநிதி செ.செல்வமகேந்திரன்
மன்னார் மாவட்ட ஆயுள் வேத பாதுகாப்பு
சபையின் தலைவரும், ஸ்ரீலங்கா தேசிய பாரம்பரிய
வைத்தியர்களின் இணையத்தின் தலைவரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளிரும் சுடர் ஒன்று திடீர் என அணைந்ததுவே!

விக்கினங்களை தீர்க்க வல்ல விநாயகன் மனித உருவெடுத்தது போல் மக்கள் மத்தியில் தமிழ் மருத்துவம் தனில் மங்காப்புகழுடன் சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்த பெருந்தகை பாரம்பரிய வைத்தியப் பூபதி டாக்டர் "சிவசக்தி" எனும் டாக்டர் சு.ஸ்ரீவிக்னேஸ்வரா சிவனடி சேர்ந்த துயரச செய்தி 19.11.2015 அன்று அறிந்து லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி தனது துயரத்தினை சொரிந்தது.

அந்த மகானைப்பற்றி எழுதுவது என்றால் எழுத்துருவில் வடிக்க முடியாதது. அவர்கள் பொதுமக்களுக்கு ஆற்றிய மருத்துவத்துடன் கூடிய தன்னலமற்ற நல்ல காரியங்களை ஊர் வாயார வாழ்த்துகின்றது.

தன் தந்தைக்கு ஈடாக சித்த மருத்துவத்தை லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் காலடி வைத்து மருத்துவத்தை தீரக் கற்று பல்துறை களிலும் மேம்பட்டு வைத்தியராக பட்டம் பெற்று அதே கல்லூரியில் மாணவர் பிரதிநிதியாக (பழைய மாணவர்) இருந்து இளமைக் காலம் தொட்டே அக்கல்லூரியின் நல்ல முன்னேற்ற செயற்பாடுகளுக்கு எல்லாம் உறுதுணையாக இருந்து வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இதே கல்லூரியின் தலைவராகவும் (வட இலங்கை சுதேச மருத்துசபை) இருந்து கல்லூரி வளத்திற்கு தேவை யான சகல காரியங்களிலும் சளைத்துக்கொள்ளாது, தயங்காது, முன் எடுக்க வேண்டிய காரியங்களுக்கு ஈடு கொடுத்து செயற்பட்ட உத்தம மாமனிதனும் ஆவார்.

கல்லூரி நலன்களில் மிகுந்த அக்கறையும் வாஞ்சையும் கொண்டு ஓர் அழகான பிள்ளையார் சிலை ஒன்றையும் நிறுவி அதற்கான தேவைகளை யும் கல்லூரிக்கு சமூகமளிக்கும் வேளைகளிலும் செய்தும் வந்தார். மாணவர்களுக்கான கற்கை நெறிகளில் கவனமாக செயற்படுத்திக் கொள்ளும் பண்புடையவர். மாணவர்களில் நல்ல தேர்ச்சிமுறையில் சித்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்தியர்களுக்கு அன்புப் பரிசுப்பொருட்கள் வழங்கிய கதைகளும் உண்டு.

அவர்களது இறுதி மூச்சிலும் தனது இயலாத உடம்பு வேளை தனினும் கல்லூரி தூண் சரிந்துவிடாது பாதுகாப்பரன்களை விஸ்தரித்த பணி அவர்களையே சாரும். அவர்களது நற்பண்புகள், செயல்திறன்களை தோளோடு தோளாக நின்று செய்வித்த அரும்பெரும் கொடை வள்ளலும் ஆவார்.

அவர்களது இறுதி மூச்சிலும் கல்லூரியில் அக்கறையுடையவராக இருந்தார் தனது ஆன்ம இளைப்பாற்ற இயல்பாக பெற்றுக்கொண்ட ஓர் வல்ல ஜீவனும் ஆவார்.

அவர்களது ஆன்ம இளைப்பாற்றலுக்கு எல்லாம் வல்ல
தெய்வ கடாட்சம் பெறுவாராக

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவ கல்லூரி**
**முன்னாள் அதிபர், அதிபர், பதிவாளர்,**
**உபஅதிபர் அனைத்து விரிவுரையாளர்,**
**உத்தியோகஸ்தர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்ந்த கார்த்திகையில்
# வாடியது ஒரு கார்த்திகை பூ!

*அமைதியான பேச்சு*
*அழகான மனது*
*ஆழமான நட்பு*
*அன்பான அரவணைப்பு*
*அட இதெல்லாம் எங்கே?*
*அந்தகன் அறியவில்லை*
*என் விழி கலங்குவதை!*

*நாம் கூடிய தேனீர் விருந்தில்*
*நான் தேடுகின்றேன்... இன்று!*
*கல்லூரி விவாதம் புரிவதற்கல்ல*
*கள்ளமில்லா உம் இனிய பேச்சை*
*ஒருநிமிடம் கேட்பதற்கு!*
*இன்றைய நிமிடம் நீர் இல்லை!*

*ஓம் சாந்தி*

நனைந்த விழிகளுடன்
Dr.இ.சற்குருநாதன்
செயலாளர்
வட இலங்கை சுதேச வைத்தியசாலை
லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி
சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட இலங்கை சுதேச வைத்திய துறைக்கு ஒளி ஏற்றி வைத்து இன்று எம் அனைவர் இதயங்களிலும் தெய்வமாக உறைந்த எம் அன்புத் தலைவர் வைத்திய இரத்தினா சு.விக்னேஸ்வரா அவர்கள் பற்றிய ஓர் நினைவுக் குறிப்பு

வட இலங்கை சுதேச வைத்திய துறையின் வளர்ச்சிப் போக்கில் தன்னை அர்பணித்து சேவையாற்றியதன் மூலம் அனைவர் மனத்திலும் ஓர் அழியா இடம்பிடித்தவர். தமது வாழ்நாள் அனைத்தையும் வைத்தியத்திற் காக அர்ப்பணித்த, வைத்திய கலாநிதி சு.ஸ்ரீவிக்னேஸ்வரா அவர்கள் சுதேச வைத்திய அமைச்சர் சாலித்திசாநாயக்க, மற்றும் பிரதி அமைச்சர் பண்டு பண்டாரநாயக்க அவர்களினால், வைத்திய இரத்தின, வைத்திய ஜோதி, போன்ற உயர்ந்த பட்டங்களை பெற்றதுடன் அகில இலங்கை சமாதான நீதவானாகவும் பட்டம் பெற்று கௌரவிக்கப்பட்டவர்.

1925ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட யாழ்ப்பாண லங்கா சித்த ஆயுள் வேத மருத்துவக் கல்லூரியில் பயிற்சி பெற்று வெளியேறி புகழ் பூத்த வைத்தியராக பிரகாசித்தார். பின் ஆயுர்வேத திணைக்களத்தின் ஆணை யாளர் நாயகத்தினால் பரீட்சை நடத்தப்பட்டு சுதேச வைத்திய அமைச் சினால் அங்கீகரிக்கப்பட்ட DAM பட்டச் சான்றிதழ்களை எமது வைத்திய மாமணிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக தன்னை முழுமையாக அர்பணித்து சேவையாற்றியதுடன், ஆணையாளர் நாயகம் மற்றும் அமைச் சர்களை நேரடியாக பங்குபற்ற வைத்து வைத்திய பட்டதாரிகளுக்கு பட்டமளிப்பு செய்வித்த அன்பு தலைவர் ஸ்ரீவிக்னேஸ்வரா அவர்களின் நினைவுகள் அனைத்து சுதேசவைத்தியர்களின் அன்பு நெஞ்சங்களை விட்டு என்று அகலாது என்பது உறுதி.

ஆயுன்வேத மருத்துவ கல்லூரியின் னுயுஆ பட்டத்தை பூர்த்திசெய்த மாணவர்கள் அனைவருக்கும் இந்தியாவின் பல்கலைக்கழக பட்ட சான்றிதழ்களை பெற்றுக்கொடுப்பதற்கான செயல் திட்டங்களை மேற்கொண்டு வெற்றிக் கொடியினை எட்டும் நேரத்தில் இறைவனோடு இரண்டரக் கலந்துவிட்டார். எம் அன்புத்தந்தை ஸ்ரீவிக்னேஸ்வரா அவர்கள் இன்று இறைவனாக எம் திட்டங்கள் வெற்றியுடன் நிறைவுபெற என்றும் எமக்குத் துணை நிற்பார்.

**கலாநிதி ந.யோகராஜன்** SLITES Class 1
**பணப்பாளர் தொழில் நுட்பவியல் கல்லூரி யாழ்ப்பாணம்,**
**தேர்வுசபை பணிப்பாளர் வடஇலங்கை சுதேச வைத்திய சபை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதங்கம்

சிவசக்தியின் சக்தி சரிஞ்சு போச்சு!
அரியாலை ஆயுள்வேத ஆசானின் கதை
முடிஞ்சு போச்சு!
வாத நோயின் வைத்திய வசந்தம் போச்சு!
விக்கினேஸ்வரன் என்ற நாமம் போச்சு!
வைத்திய கலாநிதியின் வாசம் போச்சு!
வைத்தியத்தை எல்லாம் புத்திரனிடம்
ஒப்படைத்து நித்திரையானதை நினைக்க
சங்கடமாய்க் கிடக்கு!
திடீர் மரணம் திடுக்கிட வைத்திட்டுது!
அஞ்சலி செலுத்த நெஞ்சம்வலிக்குது!
அமரர் என்று சொல்ல அடிவயிறு கொதிக்குது!
கொஞ்சமும் நாம் நினைக்கவில்லை – இந்தப்
பஞ்சம் எங்களுக்கு வருமெண்டு!
பட்டுடுத்தி, பொட்டுட்டு, பெட்டியில் வைத்தும்மை
தொட்டு அழ ஏன் எமக்கு இந்த நிலை!
செத்துப் போனீர் என்பது சுத்தப் பொய்!
நம்ப முடியவில்லை எம்மால் இன்னும்
கொஞ்சக் காலம் வாழ்ந்திருந்தால் நாம்
சுக தேகியாய் இருந்திருப்போம்!

சந்தனப் பொட்டிட்டு சைக்கிளில் நீர் சவாரி
செய்வது கண்ணுக்குள் நிற்கிறது!
அன்பும் அரவணைப்பும் உம்மிடம்
கண்டோம்! எமக்கு பெருமை என்று அரங்குகளில்
கௌரவிப்புச் செய்தோமே, பாரதூரமாய் ஏதும்
சொன்னோமா பார்விட்டுப் போக!
வாழும் காலம் முழுக்க உம் நினைவுகளுடன்
அஞ்சலிக்கின்றேன் ஏற்றுக்கொள்ளும்

மரபுக் கலைச்சுடர்
இ.கனகரத்தினம்
அரியாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் அஞ்சலிகள்

பதிவு செய்வதன் மூலம் மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் தூர நோக்குடன் சேவையாற்றிக்கொண்டு இருக்கும் பதிவாளர் நாயகத்திணை களத்தின் செயற்பாடுகளின் ஒன்றான ஒரு மனிதனின் ஆரம்பமும் முடிவுமான பிறப்பு மற்றும் இறப்புகளை பதிவுசெய்யும் சேவையினை சிறப்பாக மேற்கொண்ட மருத்துவப் பதிவாளர் அமரர் சுப்பிரமணியம் ஸ்ரீவிக்கினேஸ்வரா அவர்களின் மறைவிற்கு முதலில் பதிவாளர் நாயகம் திணைக்களம் சார்பில் எனது அஞ்சலிகளை தெரிவித்து கொள்கிறேன்.

பதிவாளர் நாயக திணைக்களத்தின் பதிவு நடவடிக்கைகளில் ஒன்றான மக்களின் முக்கிய நிகழ்வுகளான பிறப்பு, விவாகம், இறப்பு பதிவுகளான குடியியல் பதிவுகளை மேற்கொள்ள நான்கு வகையான பதிவாளர்கள் நியமிக்கப்பட்டு நாடுமுழுவதும் சேவையாற்றி வருகின்றனர். அவை யாவன பிறப்பு இறப்பு விவாக பதிவாளர்கள், பிறப்பு இறப்பு மருத்துவ பதிவாளர் பொது விவாகப் பதிவாளர், முஸ்லீம் விவாக பதிவாளர்.

இதில் பிறப்பு, இறப்பு, வைத்திய பதிவாளர் என்பது ஒரு மாவட்டத்தின் நகரை அண்டிய வைத்தியசாலைகள் அதிகமாக உள்ள அல்லது பெரிய வைத்தியசாலை அமைந்துள்ள பகுதியை உள்ளடக்கிய ஒன்று அல்லது இரண்டு பிரிவுகளை மருத்துவ பதிவாளர் பிரிவுகளாக பிரகடனபடுத்தி அப்பிரிவுக்கு ஒரு மருத்துவரே பதிவாளராக நியமிக்க படுகிறார். அவர் அப்பிரிவில் இடம்பெறும் பிறப்புகள், இறப்புகளை மாத்திரம் பதிவு செய்வார். யாழ் மாவட்டத்தை பொறுத்தவரையில் மாநகரத்தை உள்ளடக்கியதாக யாழ் நகர் மேற்கு, யாழ் நகர் கிழக்கு ஆகிய இருபிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் அமரர் ஸ்ரீவிக்னேஸ்வரா அவர்கள் இரு பிரிவுகளிலும் கடமையாற்றியவர் என்பது இங்கு குறிப்பிடதக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவாளர் நாயகத்திணைக்களத்தின் பதிவாளர்கள் அரசாங்கத் திட்டம் வேதனம் பெறாமல் இலவசமாக மக்களுக்கு பணியாற்று வதற்காக நியமிக்கபடுகின்ற ஒரு பதவியினர் ஆகும். இப்பணியை மிகவும் சிறப் பாகவும் அர்ப்பணிபோடும் அமரர் ஸ்ரீவிக்னேஸ்வரா அவர்கள் 1978ம் ஆண்டு தொடக்கம் இருக்கும்வரை சேவையாற்றி வந்தவர். வைத்தியர் ஸ்ரீவிக்னேஸ்வரா அவர்களை காணி மேலதிக மாவட்டப் பதிவாளராக நான் பதவி ஏற்பதற்கு முன்பே நன்கறிவேன். என்றுமே புன்னகை மாறாத முகத்துடன் அகத்தியரின் தோற்றம் கொண்டவராக சுறு சுறுப்பாக கருணை உள்ளத்தோடு நட்பாக பழகும் சுபாவம் கொண்டவர் அவருடைய தொழில் சார்ந்த பதிவாளர் என்ற வகைக்கு அப்பால் குடும்ப உறவாகவும் அவ ருடைய நட்பு தொடர்ந்த எந்த வேளையிலும் மற்றவரின் உறவுகளை அன்புடன் நலம் விசாரித்து அவர்களும் சுகமாக வாழவேண்டும் என எண்ணம் கொண்டவர்.

சிவசக்தி வைத்திய நிலையத்தை மிகவும் நேர்தியான முறையிலே சேவை மனப்பான்மையுடன் நடாத்தியதோடு சித்த ஆயுர்வேத துறையிலே பல்வேறு அமைப்புகளிலும் வடமாகாண ரீதியில் பதவிவகித்து அரும் பெரும் பணியாற்றினார். இதனால் பல மக்களினதும், ஆயுள்வேத துறையினரனதும் மிகுந்த வரவேற்பை பெற்றவராக திகழ்ந்தார்.

யாழ்ப்பாண காணி மாவட்டப் பதிவகத்துடன் மூன்று தசாப்தங் களுக்கு மேலாக மிகவும் நெருக்கமான தொடர்பினை பேணியவர். 1995ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து தென்மராட்சிக்கு மக்கள் இடம் பெயர்ந்த போது கானும் இடம் பெயர்ந்து வாழ்ந்த போதும் எமது காணி மாவட்ட பதிவத உத்தியோகத்தர்களுக்கு பல்வேறுபட்ட வழிகளிலும் பல உதவிகள் புரிந்தார் என்றும் அலுவலகத்தின் பல்வேறு செயற்பாடுகளுக்கும் நிதி உதவி வழங்கி ஒத்துழைப்பு வழங்கியவர் என்றும் எனது உத்தியோகத்தர்கள் இவரைபற்றி அடிக்கடி கதைப்பார்கள்.

யாழ் நகர் கிழக்கு பிரிவுக்கான மருத்துவப் பகிவாளராக அன்னார் கடமையாற்றிக்கொண்டு இருக்கும் போது 2005ம் ஆண்டு நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண காணி மாவட்ட பதிவகத்தில் காணி மேலதிக மாவட்ட பதிவாளராக இணைந்து கொண்டேன் இதன்மூலம் இவருக்கும் எனக்குமான உறவு இன்னும் பல மடங்கு உயர்ந்து கொண்டது. இந்த அன்பின் விளைவாக 2010ம் ஆண்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிவசக்தி வைத்திய நிலையத்தை நானே திறந்துவைக்க வேண்டும் என விரும்பி என்னை அழைத்து கௌரவித்தவர்.

இத்தகைய இனிமையான நினைவுகளை கொண்ட அமரர் வைத்தியர் ஸ்ரீவிக்னேஸ்வரா அவர்களின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தனை செய்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**திரு.பரஞ்சோதி பிரபாகர்**
**காணி மேலதிக மாவட்டப் பதிவாளர்,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "புகழுடல் வாழும்"

சின்னபபா' என்று உறவினர் செல்லமாக அழைக்கும்
டாக்டர் ஸ்ரீ விக்னேஸ்வரா காலமானார் என்ற செய்தி
நான் கொழும்பில் நிற்கும்போதே என் செவிக்கு எட்டியது;
உடனே வந்து, உன்முகத்தைப் பார்த்துப்
'போய்வா' நண்பா என்று கண்ணீர் சிந்திக் கையசைத்து
விடை கொடுக்கும் பாக்கியத்தை நான் இழந்தேன்;
இரண்டு மாதத்திற்கு முன்தான், உன்னைக் கண்டு
கதைத்து உரையாடி உறவாடியது
நினைவுத் திரையில் நிழலாட
நாற்பது ஆண்டுகளுக்கு முந்திய
'காலச்சக்கரம்' கட கடவென்று ஓடத்தொடங்கியது...

சங்கிலிமாமா என்று நாங்கள் அன்புடன் அழைக்கும்
டாக்டர் ஆ.சுப்பிரமணியம்
கரவெட்டி கிழக்கிலே எங்கள் உறவுக் காரர்களிலே
'மெத்தைவீடு' என அழைக்கும் மேல்வீடு
உஙகள் வீடுதான்
கல்வீடுகளே அருந்தலாக இருந்த கிராமத்தில்
மேல்மாடி வீடுகட்டி 'இராஜாவாக' வாழ்ந்தவர்
சங்கிலி மாமா...
சங்கிலி மாமாவினதும் அவர் பிள்ளைகளினதும்
அன்புப் பாசம் எனக்கு நிறையவே கிடைத்தது;

சின்னபபா!

நீ என் நண்பணாய், தோழனாய், உறவினனாய்
என்னைப் புரக்கும் அமைச்சனாய்
வாழ்ந்த காலங்கள்...
ஓடுகின்ற மழை வெள்ளத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எகிறித்
துள்ளிப்பாயும் மீன்கள் போலத்
தோன்றி மறையும்...
கரவெட்டி கிழக்கு;
கோயிலும் குளமும் வயலுடன் சூழ்ந்த
அழகிய கிராமம்
கொங்கிறீற் காடுகள் வளரும்
யாழ்ப்பாண நகரம்
நமக்குத் 'தூரதேசம்' தான்,
அந்தத் 'தூரதேசத்திற்கு'
என்னைப் பலமுறை கூட்டிவந்து
படம் காட்டி, இடம்காட்டி
உலாவந்த நாள்களை எண்ணிப்பார்க்கிறேன்...
இதயம் கனக்கிறது...

அரியாலை புங்கன்குளம் சந்தியில்
'சிவசக்தி' வைத்திய நிலையம்...
நீ, நல்ல 'கைராசிக்காரன்'
பல தலைமுறையாக வைத்தியம் செய்த
பரம்பரையிலே வந்தவன்
டாக்டர் விக்கினேஸ்வரா என்ற இயற்பெயரை
'சிவசக்தி' என்ற தொழிற்பெயர் விழுங்கிக் கொண்டது
'சிவசக்தி' என்றால் எங்கள் சின்னப்பா தான்
நட்பும், தயையும், கொடையும் உன்னுடன்
கூடப்பிறந்ததவை
பணத்தை நல்ல 'பணியாளனாக' வைத்திருந்தவன் நீ,
உனக்குப் பணம் ஒருபோதும் எஜமானாக இருந்ததில்லை
அதனாலேதான்...
'சிவசக்தி' யென்றால் ஊரும், உறவும், உலகும், நட்பும்
உன்னை நாடித், தேடிவந்து கொண்டிருந்தது.
பல்வேறு சமூகப்பணிகளிலும் உன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைத்துக் கொண்டாய்;
பதவிகள் பல உன்னைத் தேடிவந்தன.
பண்பாய், பௌவியமாய் பதவியைப் பாலித்தாய்,
நண்ப!
நீ இன்று இல்லை...
உன்நினைவுகள் நீளுகின்றன...
உன் அன்பு மனைவி, அருமைக் குழந்தைகள்
அயலவர், சுற்றம், ஊரார் அனைவரும்,
கதறி அழுது கண்ணீர் சிந்த, நீ
காலன் கையில், காலம் ஆனாய்
போய்வா நண்ப!
உன் புகழுடல் வாழும்

**பேராசிரியர். எஸ்.சிவலிங்கராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலை சனசமூக நிலைய வரலாற்றின் தடத்தில்...

Dr.சுப்பிரமணியம் ஸ்ரீவிக்னேஸ்வரா அவர்கள் 1981ஆம் ஆண்டு எமது நிலையத்தின் தலைவராக இருந்து எமது நிலையத்திற்கும் ஊரிற்கும் பெருமை சேர்த்தார்.

இலங்கையின் முதற்தர சனசமூக நிலையமாக இன்றும் மிளிர்ந்து கொண்டு இருக்கும் எமது நிலையத்தை சிறப்புற நடாத்தி அதன் சேவைகள் உயர்தரத்தில் நடைபெறுவதற்கு வழிகாட்டியதுடன் இவரது காலப்பகுதி யிலேயே நிலையத்தில் பிரத்தியேக கல்வி வழங்கும் சேவையும் ஆரம்பிக்கப்பட்டது.

அது மட்டுமல்லாது தனது வாழ்நாள் முழுவதிலும் அரியாலை சனசமூக நிலையத்தின் ஆண்டு விழா மற்றும் முன்பள்ளிச்சிறுவர் விளையாட்டு விழா ஆகியவற்றில் விநோத ஆடைப் போட்டிக்கு அனுசரணை வழங்கி வந்துள்ளார்.

பல் விளையாட்டு வீரர்களை உருவாக்கிய எமது நிலைய மைதானத்தில் நிகழும் விபத்துக்களின் போது, காயத்திற்கு உட்படும் வீரர்களை உடனடியாக அன்புடன் கவனித்து அவர்களுக்கு இலவசமாக வைத்திய உதவிகளை வழங்கிய பேராளன்.

"சிவசக்தி" வைத்திய நிலையத்தை எமது நிலையத்தின் அருகில் நிறுவி அதனூடாக அரியாலை வாழ் மக்களுக்கு அளப்பரிய வைத்திய சேவைகளை வழங்கி சுகதேகிகளாக எம்மை வாழ வைத்தவர்.

எந்தவித நோய் உண்டானாலும் முதலில் "சிவசக்தியிடம் போங்கோ" எனும் அளவிற்கு எல்லோர் உள்ளத்திலும் இடம்பிடித்தவர். எமது ஊரில் அனேகர் அவரின் பெயர் "சிவசக்தி" எனவே தெரியும் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிற்கு அவரது வைத்திய நிலையத்தின் பெயர் எல்லோர் மனங்களிலும் பதிந்திருந்தது.

"யானை இருந்தாலும் ஆயிரம் பொன்
இறந்தாலும் ஆயிரம் பொன்"

என்பது போல் எமது நிலையத்தின் முன்னைநாள் தலைவர் இறந்தாலும் இப்பூவுலகில் இருக்கும் இறுதி அரியாலைவாசியின் மனதிலும் அவரின் கருணையுள்ளம் கொண்ட உருவம் நிலைத்திருக்கும்.

நிலையில்லா இப்பூவுலகின் நிறைவற்ற இன்னல்களில் இருந்து விடுபட்டு நித்திய இன்பத்தைப் பெறவேண்டும் என அரியாலை சனசமூக நிலையத்தின் 66ஆவது நிர்வாகசபை சார்பில் பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர்**
**பி.செந்தில்குமரன்**
**66வது நிர்வாக சபை**
**அரியாலை சனசமூக நிலையம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வமே

அம்மா, அப்பாவுக்குப் போட நீங்களும் எழுதித்
தாருங்கள் என்று மகன் கேட்க நெஞ்சு
திக்கென்றது. கனந்தது படபடத்தது.
எப்படி எழுதுவேன்? எதை எழுதுவேன்?
கை நடுங்குது, முடியவில்லை. இதை மட்டும் தான்.
மனதைப் பாதித்ததைத்தான் நெஞ்சை நெருடியதைத்
தான். பாதகர் செய்த காரியம் நோய்க்கு ஆளாக்கி
விட்டதே. விளைவு விரும்பிய சாப்பாட்டுக்குக்
கட்டுப்பாடு. ஏன்? அப்படி ஏதும் சாப்பிட்டால்
ஏற்படும் உடனடிப்பாதிப்பு. உங்கள் சுகத்துக்காக
ஆனால் உங்களுக்குக் கஷ்டம். ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள்.
வேதனை தான் மிச்சம். என் செய்ய நெஞ்சு
அடைக்குது. உதடு துடிக்குது. கண் வழியுது.
இடைக்கிடைவந்து போனது போல மீண்டு எழும்பியது
போல எழும்புவீர்கள் என்று தான் இருந்தேன்.
அவசரப்பட்டு விட்டீர்களே! ஏமாற்றி விட்டீர்களே!
நம்ப முடியவில்லை. நிரப்ப முடியாத இடைவெளி
என்னை முந்திக் கொண்டு போய் விட்டீர்களே!
ஏன்? என்ன பாவம் செய்தேனோ? சரி
இவ்வளவு தான் இறைவன் விதித்தது என்றால்
என்ன தான் செய்ய முடியும்? நீங்கள் சிவனடியிலே
நித்தியானந்தப் பெருவாழ்வு பெற சிவனைப்
பிரார்த்திக்கின்றேன். சுபம் உண்டாக.

ஓம் சாந்தி

**அன்பு மனைவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றுப் போல இருக்கிறது...!

1975ம் ஆண்டு அளவில் S.S.C சித்தி அடைந்துவிட்டு வேலை தேடும் நேரம் உதவி செய்ய வேண்டிய உறவினர் ஒதுங்கி நின்ற நேரம் தாய் தந்தை இல்லை என்ன தொழில் செய்வது என ஏங்கி நின்ற நேரத்தில் காலம் சென்ற நவம் அண்ணா அவர்களுடன் புங்கன்குளம் சந்தியில் அமைந்துள்ள சிவசித்தி வைத்திய நிலையத்திற்கு" வேலை தேடிச்சென்று உங்கள் டிஸ்பென்சறியில் ஏதும் வேலைக்கு இடம் கிடைக்குமா என்று கேட்டேன் இவரை அப்போது யாவரும் "பபா" அண்ணை என்றுதான் அழைப்பார்கள்.

"இவர் எனக்குத் தூரத்து உறவு"

இவ்விதம் நான் வைத்திய நிலையத்தில் வேலை செய்துவரும் காலத்தில் ஒரு நாள் தம்பி! நீ ஆயுர் வேதம் படிக்கலாம் தானே என்று கூறினார் எனக்கு விருப்பம் இருக்கவில்லை கல்லூரிப் படிப்பை விட்டு இரண்டு வருடங்கள் கழிந்துவிட்டது இனி என்ன படிப்பது என்று என் மனம் கூறியது.

"ஒருவர் முன்னேற வேண்டும் என்று விதி இருந்தால் உலகம் முழுவதும் ஒன்று திரண்டாலும் அதைத் தடுத்து நிறுத்த முடியாது" என்பது போல என்னை அடிக்கடி தனது காரில் ஸ்ரான்லி வீதியில் இயங்கிவந்த ஆயுள் வேத வைத்தியர் கல்லூரிக்கு அழைத்துச் செல்லுவார் (அப்போது காலம் சென்ற Dr.கெங்காதரன் தலைவராகவும், Dr.ஸ்ரீதேவி பதிவாள ராகவும் இவர் செயலாளராகவும் இருந்த காலம்) அடிக்கடி அங்கு போய் வந்தபடியால் எனக்குப் படிக்க மனம்வந்தது.

எனக்குத் தேவையான உடுப்புக்கள் வாங்கித்தந்து என்னையும் தங்கள் குடும்பத்தில் ஒருவனாக்கி வைத்தியக் கல்லூரியில் சேர்த்துவிட்டார். நானும் உணர்ந்து படித்து 1980ம் ஆண்டு ஒரு வைத்தியனாக வெளிவந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காலங்கள் மாறலாம்

கனவுகள் மறையலாம் ஆனால்

நினைவுகள் என்றும் – அழியாது"

"மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்பது போல நான் குருவின் தங்கை அருந்ததியை விரும்பிவிட்டேன் (இவர் கரைச்சிப் பிரதேச சபை இலவச ஆயுள்வேத வைத்தியசாலையில் வைத்தியராகக் கடமைபுரிந்து ஓய்வுபெற்று விட்டார்) எத்தனையோ தடைகளைத் தாண்டி எனக்குத் திருமணம் செய்து வைத்தார்.

அதன்பின் நான் வைத்திய நிலையம் போட விரும்பிய போது விசுவமடுவில் "வாணி வைத்திய நிலையம் என்ற பெயரில் வைத்திய நிலையத்தை திறந்து தந்தார்.

"வலது" கை கொடுப்பதை இடது அறியாது என்பது போல பலருக்கும் பலவித உதவிகள் செய்துள்ளபோதும் மற்றவர்கட்குத் தெரியாது.

இவர் பல வைத்திய நிலையங்களை தொழில் ஸ்தாபனங்களைத் திறப்பு விழாச் செய்துள்ளார். இவை அனைத்துமே ஆல் போல் தழைத்து, வெற்றிக்கு மேல் வெற்றியைக் குவித்த வண்ணமிருகின்றன.

மழை குளிர் என்ற எக்காலங்களிலும் காலை ஐந்து மணிக்கு எழுந்து குளித்து கடவுள் வணக்கம் செய்து சந்தனப் பொட்டுடன் தினமும் காட்சி தருவார். நிறக்கோட்டுப் போட்டதை ஒரு காலமும் நான் காணவில்லை. இப் படித்தான் மனிதன் வாழ வேண்டு மென்று வாழ்ந்து காட்டியவர் மனித நேயம் மிகுந்த சிறந்த பண்பாளர். யாவருடனும் மிகவும் அன்பாகப் பழகும் தன்மையுடையவர். எத்தனை பிரச்சனையையும் சுமுகமாகத் தீர்த்து வைக்கும் ஒரு தீர்க்கதரிசி. இவரைப்பற்றி எழுதுவதென்றால் ஒரு காவியமே எழுதலாம்.

திருமாலின் நிறத்தை ஒத்த கரிய தோற்றம்

கடமையே கண்ணாக வாழ்ந்த உள்ளம்

எத்தனையே வைத்தியரைப் பயிற்றுவித்து
ஏற்றமுடன் அவர்களை வாழச் செய்து
பலவித பதவிகளை வகித்து வாழ்ந்த
என்னுயிரே நிம்மதியாய் உறக்கம் கொள்க!

ஆயுர் வேதம் மறைந்து விடக் கூடாதென்று
இரத பகல் பாடுபட்டு வெற்றி கண்டு
அவனியிலே ஆயுர் வேதம் தழைக்கவென்று
சங்கடங்கள் பலவற்றைத் தீர்த்து வைத்து
தலைவர் பதவியினைத் தலைமேல் கொண்டு
தரணி போற்ற வாழ்ந்த உள்ளம்

"அன்பினால் அரவனைத்தாய்
அமைதியாய் வாழ்ந்திருந்தாய்
பண்பிலே உயர்ந்து நின்றீர்
பலர் பிணி போக்கியதால்
பாரெல்லாம் உன்புகழ் பேசக் கேட்டேன்!

எந்தனுக்கு ஐயா நீங்கள்!
நண்பனாய் – மந்திரியாய்
நல்லாசிரியனுமாய்
பண்பிலே தெய்வமாய்
பழகுவதில் இனியவனாய்
உறவிலே மைத்துனன் ஆகிவிட்ட தெய்வம் இவர்
நான் இதுவரை வன்னியில் பெற்ற
வெற்றிகளும் இனிமேல் பெறப்போகும் வெற்றிகளும் நீங்கள் எனக்கு போட்ட பிச்சை ஆகும்.

"என் உள்ளம் உள்ளவரை
உங்கள் நினைவு தொடர்ந்திருக்கும்"

**Dr.என்.சிவசுப்பிரமணியம்**
**வாணி வைத்திய நிலையம்**
**விஸ்வமடு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லாமல்... எண்ணாமல் சென்ற தென்ன மாமா???

தந்தையை இழந்த எனக்குத் தந்தையாய் இருந்தீர்கள்
கடமைக்குச் சொல்லும்போது கவனமாய் போய் வாருங்கோ' என்பீர்களே
குடிதண்ணீர் எடுத்து எம் வீட்டுக்கு கொடுப்பீர்களே
உதவியாய் இருப்பீர்களே மாமா
எத்தனை பயணங்கள் உங்களுடன்
எத்தனை கதைகளைப் பகிர்ந்தீர்கள் என்னுடன்
இன்று நீங்கள் இல்லாமல் வெறுமையானது
என் வாகன முன் இருக்கை மட்டுமல்ல
மீண்டும் தந்தையை இழந்த உணர்வுடன் என் நெஞ்சமும் தான்

சற்றுக் குணமடைந்தாலே கிளம்பிடுவீர்கள் பிறர்க்குதவ
'கொஞ்சம் ஓய்வெடுக்கலாமே மாமா' என்றால்
'கொஞ்சம் வேலை இருக்கு' என்பீர்கள்
கடந்த நாட்களைப் போல் ஒரு வாரத்திற்குள்
குணமடைவீர்கள் என்றல்லவோ எண்ணி இருந்தோம்
சொல்லாமல்... எண்ணாமல் சென்ற தென்ன மாமா???

முதல் நாளும் வந்து பார்த்தேனே உங்களை
படுக்கையை வசதியாய் இடம் மாற்றக் கேட்டபோது
'வேண்டாம் வசதியாய் இருக்கிறது' என்றீர்களே
மரணப்படுக்கை உங்களுக்கு வசதியாகி விட்டதா மாமா???
அன்று கூட நித்திரை என்றெண்ணிக் கதைக்கவில்லை
நித்திரையிலேயே நிரந்தரமடைந்தது பின்பு தானே தெரிந்தது எனக்கு
மாமியைக் கூட்டிவர என் வீட்டுக்கு போன எனக்கு
குங்குமப் பொட்டுடன் இருந்தவரைக் கண்டதும் தொண்டை கட்டியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வீட்டுப் பூச்செடிகளும் கேட்கின்றன
ஏன் இன்று நீங்கள் தம் பூக்களைப் பறிக்க வரவில்லை என்று
கடவுளர் மட்டும் அமைதி காக்கின்றனர் எல்லாம் விதிப்படி என்று
ஆயினும் ஏற்க முடியவில்லை எம்மால்
ஏன் இந்த அவசரம் உங்களுக்கு???
சந்தனப் பொட்டிட்ட செந்தளிப் பானவரே...
பொன்னகைக்குப் பதில் புன்னகை அணிந்தவரே...

மாலை வருவதற்குள் அகன்றுவிட்ட எம் வீட்டின் அகல்விளக்கே...
காலையிலேயே அஸ்தமித்த எம் குடும்பச் சூரியனே...
எக்கிழக்கில் நாம் தேட மீண்டும் உங்கள் உதயத்தை???

**அன்பு மருமகன் இ.இராஜ்குமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன சொல்ல அப்பா???

அம்பாளின் பெயர் சூட்டி என்னை
'அம்பாள்' என அன்பாக அழைத்தீர்களே அப்பா
பாச மகள் என்னை நேசமாய் வளர்த்தீர்களே அப்பா
போரின் இடர்களுக்குள்ளும் வன்னியிலும் கூட
படிப்பித்து என்னைப் பல்கலைக்கழகம் அனுப்பினீர்களே அப்பா
வேலைக்குப் போனாலும் வெளியில் போனாலும்
வீட்டுக்கு வந்தும் கூட்டிச் சென்றும் என்
குழந்தைகளைப் பார்த்தீர்களே அப்பா
வீட்டுத் தோட்டம் செய்து சமைக்க
காய்கறி தருவீர்களே அப்பா
தைப்பொங்கலோ, வீட்டுப் பூசையோ, பண்டிகையோ
ஆயத்தம் எல்லாம் செய்து முன்னுக்கு நிற்பீர்களே அப்பா

மழையென்ன வெய்யிலென்ன எம் வீட்டுக்கு
நித்திய தரிசனம் செய்வீர்களே அப்பா
எம் வீட்டின் அதிகாலைப் பறைவை நீங்கள்
உங்கள் முகத்தில் தானே எங்கள் காலைகள் விடிந்திருக்கின்றன
இரு நாட்களுக்கு முன்கூட வந்தீர்களே அப்பா
வெள்ளம் என்றும் பாராது எம்மைப் பார்க்க

'விரும்பியதை சாப்பிடப்போறேன்' என்று
நீங்கள் சொன்ன போது
நீண்டநாள் நீங்கள் இருக்க வேண்டித்தானே
உணவுக் கட்டுப்பாடு செய்தோம்
இப்போது அழுகின்றோம்
இப்படி அவசரப் பயணம் செய்வீர்களென்றால்
விரும்பியதைக் கொடுத்திருக்கலாமே என்று
சுகயீனம் என்றதும் வந்து பார்ப்பதற்குள்
முந்திக்கொண்டு சென்று விட்டீர்களே அப்பா
நீங்கள் நட்ட தென்னையும் மாவும் கேட்கின்றன
ஏன் அப்பா வரவில்லை என்று
ஆதியும் ஆதர்ஷ்..ம் கேட்கின்றனர்.
அம்மப்பா எப்ப வருவாரென்று
என்ன சொல்ல அப்பா???

**அன்பு மகள் இ.அபிராமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையெனும் தெய்வம்...

தந்தை மகற் காற்றும் உதவி அவையத்து
முந்தியிருப்பச் செயல்...

மனம் ஏற்க மறுக்கிறது அப்பா நீங்கள் போயிட்டீங்கள்
என்று...
அழுகை அழுகையா வருது. உங்களைப்பற்றி
எழுத நினைக்கும் போது...
பார்த்துப் பார்த்து எனக்காக எல்லாவற்றையும்
செய்து தந்தீர்...
நல்ல கல்வி தந்து, மருத்துவம் கற்கச் செய்து,
மருத்துவமனை கட்டித்தந்து. திருமணம் செய்துவைத்து
எண்ணிக்கை இல்லை அப்பா நீங்கள் எனக்காகச்
செய்த நன்மை...
சங்கடமான நிலைகளிலும், பிரச்சனைகள் வந்த போதும் ஓடி ஓடி அலுவல்
பார்த்து பிரச்சனைகள் தீர்த்து வைத்தீர்... அப்பா.
யாராலும் உங்களிடத்தை நிரப்ப முடியாது.

அப்பாவுக்கு வருத்தம் வந்திட்டு என்றவுடன்
துக்கம் தொண்டையை அடைத்தது...
நீண்ட காலமாக நோயுடன் போராடி மீண்டும்
வந்தீர்கள் அப்பா...
இம்முறை மட்டும் ஏன் எமை ஏமாற்றிச்
சென்றீர்கள்...
என்னால் முடியவில்லை...
விம்மல் வருகிறது கண்கள் குளமாக...

உங்கள் ஆத்மா சிவனடி சேர பிரார்த்திக்கின்றேன்.

**அன்பு மகன்**
**Dr. ஸ்ரீ. அரவிந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கமுடியுமா மாமாவை...

எனக்கு அவர் மாமா, ஆனால் அவரோ எனை மகளாகவே நினைத்தார்...
"பிள்ளை" என்று கூப்பிட்டு பிள்ளை யாகவே மதித்தார்...
"விருந்தினர்கள் வருவார்கள் சமைக்க வேணும்
என்றவுடன் பிள்ளை நான் என்ன செய்து தர
என்று அவர் கேட்பார்...
கேட்டதுடன் நின்றிடாது பரிவுடனே உதவி செய்வார்...
பிறந்தநாள் வந்தவுடன் பிறருக்கு சொல்லாமல்
பரிசில்கள் பல தந்து வியற்ப்பில் எனை
ஆழ்த்தி வைப்பார்...
ஓடி ஓடி எனக்காக அலுவல்கள் பல செய்வார்
வாடி நிற்கின்றேன் வையகத்தில் நீங்கள்
இல்லையெண்டு...
பயமின்றி நான் இருந்தேன் நீங்கள் உறுதுணையாய்
இருந்ததனால்...
மாமா இருந்தீர்கள் கலகலப்பாக கதைப்பதற்கு, இன்று வெறுமையாக
இருக்கிறது வீட்டுடன் மனசும் தான்...
நினைத்து நினைத்து அழுகின்றேன்
நீங்கள் இல்லை என்றதனால்...

சிவனாகி விட்ட நீங்கள் சிறப்பாக எமை காத்தருளும்...
உங்கள் ஆத்மா மோட்ஷ மெய்த
கடவுளை பிரார்த்திக்கின்றேன்...

பாசமிகு மருமகள்
Dr.அ.நளினி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மப்பா உங்களிடம் சொல்ல வேண்டும்...

பாசத்தோடு முதல் பேரன் என்னை வளர்த்தீர்களே அம்மப்பா...
சாப்பிட மறுக்கும் என்னை சைக்கிளில் வைத்து உருட்டுவீர்களே,
தீபாவளி, வருடப்பிறப்பு பிறந்தநாள் எல்லாம்
உடுப்பு வாங்கித் தருவீர்களே அம்மப்பா...
அன்பாக 'ஆதி' என்று அழைத்து
உடற்பயிற்சி, வீட்டுவேலை எல்லாம்
செய்யச் சொல்லிக் கொடுத்தீர்களே அம்மப்பா
பெரிய விளையாட்டுக்கார் வாங்கித் தந்தீர்களே
அறிவைப் பெருக்க CDகளும் புத்தகங்களும்
வாங்கித் தந்தீர்களே அம்மப்பா...

அம்மப்பா நீங்கள் சொன்னது போல
சொல்வதெழுதலில் நூறு புள்ளிகள்
எடுத்து இருக்கிறேன்
நீங்கள் சொல்லாமலே
ஆங்கிலத்திலும் நூறு புள்ளிகள்
எடுத்து இருக்கிறேன்
உங்களிடம் இதை எல்லாம் சொல்ல வேண்டும்
உங்களுடன் சண்டை போட்டு CD பார்க்க வேண்டும்
உங்களுடன் சேர்ந்து வீட்டு வேலைகள் செய்ய வேண்டும்
எப்ப அம்மப்பா வருவீங்கள்???

அன்புப் பேரன் இ.ஆதிஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்பு அப்பப்பா...

அப்பப்பா என் அப்பப்பா – நீங்கள்
அருமையான அப்பப்பா
பாசத்தை பொழியும் அப்பப்பா – நல்ல
பண்பை ஊட்டியவர் அப்பப்பா
நேசத்திலே பெரியவர் அப்பப்பா – நம்மை
நேர்வழியில் நடத்தியவர் அப்பப்பா
பண்டிகைகள் என்று வந்தாலே – புதிய
ஆடைகள் வாங்கி தந்திடுவார்
ஆசைப்பட்ட எல்லாவற்றையும் – எனக்கு
ஆசையோடு வாங்கி வருவார்
கேசம் நரைத்து விட்டாலும் – நல்ல
கேளிக்கைகள் செய்து மகிழ்வார்
ராசா போலவே இருந்தார் – என்னையும்
ராசா போலவே பார்த்தார்

நேற்றுவரை இருந்த அப்பப்பா – நாம்
போற்றி மகிழ்ந்த அப்பப்பா – இன்று
வேற்று லகம் சென்றுவிட்டார் – என்னை
வேதனையில் வாட விட்டார்
கடவுளாகிவிட்ட அப்பப்பா – என்றும் எமை
காத்தருளும் அப்பப்பா...

**அன்புப் பேரன்**
**அ. ஆகாஷ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்ப அம்மப்பா வருவீங்கள்???...

குட்டிப் பேரன் என்று செல்லமாக என்னை வளர்த்தீங்களே
குழந்தை என்று என்னைக் கொஞ்சுவீங்களே அம்மப்பா...
விளையாடும் போதும் என்னைக் கவனமாய் பார்ப்பீங்களே
நோயாளி ஆன போதும் அ, ஆ... சொல்லித்தந்தீங்களே அம்மப்பா...
பாப்பாப் பாட்டு CD களும் பாலர் பாடப்புத்தகங்களும்
வாங்கித் தத்தீங்களே அம்மப்பா...
விளக்கீட்டுக்கும் கூட்டிச் சென்று காட்டினீங்களே
பாலர் பாடசாலைக்கு கூட்டிப் போய் வருவீங்களே அம்மப்பா

கதை சொல்லி என்னைச் சாப்பிட வைப்பீங்களே
என்னுடன் சேர்த்து விளையாடுவீங்களே அம்மப்பா...
விளையாட்டுப் பொருள் வாங்கித் தருவீங்களே
செல்லமாகக் கூட்டிக்கொண்டு நடப்பீங்களே அம்மப்பா...
பண்டிகைக்கும், பிறந்த நாளுக்கும் உடுப்பெல்லாம்
வாங்கித் தருவீங்களே அம்மப்பா...
அம்மப்பா தீபாவளிக்கு எடுத்த உடுப்பு மாத்த வேணும்
ஊஞ்சல் ஆடேக்க நீங்கள் பார்த்து இருக்க வேணும்
சைக்கிள் ஓடேக்க விழாமல் நீங்கள் பிடிக்க வேணும்
எப்ப அம்மப்பா வருவீங்கள்???

**அன்புப் பேரன் இ.ஆதர்ஷ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது இதயம் சிறப்பாக இருக்க 27 வழிகளை தேடுங்கள்

1. வழக்கமான உணவு நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்பாகப் பசியெடுத்தால் அப்போது பிஸ்கட், கேக், தேநீர் சாப்பிடுவதைத் தவிருங்கள் பசித்தீ மிகவும் எரிந்தால் கலோரி குறைவான பானம் அருந்துங்கள்.
2. புதுப்புது வகையான உணவு வகைகளை கண்டு மயங்காதீர்கள். வழக்க மான உணவே நம்பகமான உணவு என நம்புங்கள்.
3. ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி இவைகளைக் கூடுமானவரை தவிர்த்து, மீன், கோழி இவைகளை அளவோடு உண்ணுங்கள்.
4. தொட்டுக்கொள்ள என சட்னி, சோஸ், ஜாம், ஊறுகாய் போன்ற அனைத்தையும் ருசித்து மாட்டிக் கொள்ளாதீர்கள்.
5. சாக்லேட், ஐஸ்கீறிம் கூடியவரை வேண்டாம்.
6. கொழுப்புச்சத்து குறைவான உணவுகளே சிறந்தது.
7. வாடி, வதங்கிய காய்கறிகளைப் பயன்படுத்த வேண்டாம் அவற்றிலுள்ள விட்டமின் "சி" காணாமல் போயிருக்கும்.
8. தேங்காயெண்ணெய், பாமாயில் தவிர்த்து சூரிய காந்தி எண்ணை, சோள எண்ணெய், ஆலிவ் எண்ணெய் பயன்படுத்தலாம்.
9. மீன்களை பொரிப்பதைவிட வேகவைத்தே உண்ணுங்கள்.
10. பேரீச்சம்பழம், உலர் திராட்சை இவைகளை அடிக்கடி உண்ணுங்கள்.
11. இயன்றவரை உப்பைக் குறையுங்கள் அதுவே உயிருள்ளவரை இதயத் தைக் காக்கும்.
12. எலுமிச்சை, வெங்காயம், பூண்டு,மிளகு, கடுகு, ஜாதிக்காய் இவற்றின் தினமும் சூப் செய்து சாப்பிடுங்கள். உப்பு சேர்க்க வேண்டாம்.
13. தோலுடன் அவித்த உருளைக்கிழங்கு மிகச் சிறந்த நார்ச்சத்து என்பதால், மறக்காமல் சேருங்கள்.
14. வீட்டில் அலுமாரியில் டப்பாக்களில் சேர்த்துவைத்து உண்ணும் "கொரிக்கும்" சமாச்சாரங்களைத் தவிருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. சோறு, ரொட்டி, கூழ், களி இவைகள் அனைத்து வயதினருக்கும் ஏற்ற உணவுகள் அளவுடன் சாப்பிட்டுப் பழகுங்கள்.
16. கூடுமானவரை எதையும் எண்ணெயில் வதக்காமல், வறுக்காமல் வேகவைத்தே முற்றும் வேகாமல் உண்ணுங்கள்.
17. காய்கறிகளை பெரிய துண்டுகளாக வெட்டி சமைக்கவும்.
18. வாரத்திற்கு மூன்று, நான்கு முட்டைகளுக்குள் நிறுத்தி விடுங்கள் இன்னும் வேண்டுமெனில் வெள்ளைக் கருவுக்குத் தடையில்லை.
19. சிகரெட், குடிப்பழக்கம் அபாயகரமானது. இந்த ஞாபகம் வந்தால் வேகமாக பத்து நிமிடம் நடந்தால் போதும்.
20. சிறிய தட்டுக்களில் சாப்பிடுங்கள். அது நிறை சாப்பிட திருப்தியைத் தரும்.
21. நீராவியில் வேகவைத்த பொருள்களே இதயத்திற்கு என்றும் நல்லது.
22. உணவுக்குப் பின் ஏதேனும் ஒரு பழம் சாப்பிடுங்கள்.
23. ஆழ்நிலைத் தியானம், யோகாசனம், நடைப்பயிற்சி இவை தினசரி வேண்டும். முடியாதவர்கள் மெதுவாக நடந்தாவது பாருங்கள்.
24. நெஞ்சு வலித்தாலோ திடீர் மயக்கம் முற்றுகையிட்டாலோ உடனே மருத்துவரைப் பாருங்கள்.
25. ஒற்றைத் தலைவலி இதய நோயின் ரகசிய அறிகுறி என்பதால் ஆரம்பத்திலேயே விரட்ட முயலுங்கள்.
26. உயரத்திற்கேற்ற உடல் எடை வேண்டும் இதில் குறையிருப்பின் பட்டினி கிடக்காமல் கலோரி மூலமே எடையைக் குறையுங்கள்.
27. மாரடைப்பு நோயிருப்பின் அதையே நினைத்துக் கவலையில் ஆழ்ந்து ஒரேபடியாக மூழ்கி விடாதீர்கள் ஓய்வெடுங்கள் உற்சாகம் கொள்ளுங்கள் இதயநயம் உங்கள் கையில்.

மேற்கண்டவைகளை விதியாக எண்ணி முகம் களிக்காமல் இயல்பான முறைகளாக மாற்றிக் கொண்டால், இதயம் ஆரோக்கியமடையும். மனிதன் அதிகம் உண்ணும் சத்தில்லாத உணவுகளில் சீனியும் ஒன்று, உடலுக்கு சக்தி தேவைப்படும் போது மாப்பொருள் உணவுகள் குளுக்கோஸ் ஆக மாற்றப் படுகின்றன. உடலுக்கு எவ்வித சத்தையும் தராத சீனி உடலின் சத்தையும் ஈர்த்துக் கொள்கிறது. சிகரெட்டு, மது முதலியவற்றை விட சீனி ஆபத்தானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்றுநோய், எலும்பு முறிவு, மூட்டு வியாதிகள் உடல் பருமன் இதய நோய்கள், இரத்த அழுத்தம் சரும நோய்கள் விரைவில் முதிர்ச்சி, பித்தக்கல், ஈரல் நோய், சிறுநீரகக் கோளாறு, சொத்தைப் பல், பெண்ணுறுப்பு தொற்று நோய், அளவுக்கு மீறிய சுறுசுறுப்பு, வன்செயல், நீரிழிவு நோய் இவைகள் சீனியால் விளையும் சீதனங்கள், டின் பானங்கள் செயற்கை சத்துணவுகளில் சீனி அதிகம் சேர்க்கப்படுகிறது. குளிர்பானம் ஐஸ்கிறீம், சாக்லேட் இவைகளை குழந்தைகளுக்குக் கொடுப்பதை நிறுத்துவது நல்லது. இனிப்பு அதிகம் உட்கொள்ளும் போது வாயில் உள்ள பாக்டீரியாக்கள் சேர்ந்து அமிலம் உருவாகி அதன் மூலம் எனாமல் அரிக்கப்பட்டு பற்கள் ஓட்டையாகின்றன. மேலும் அதிகமான சீனி ஒருவரின் தசை நார்களைச் சாகடித்து மாரடைப்பு வரை கொண்டு போகிறது.

தினமும் அதிக சீனியை உணவில் சேர்த்தால் அது 92 சதவிகித வெள்ளை இரத்த அணுக்கள் உருவாவதைத் தடுக்கிறது. இந்த வெளளை அணுக்களே அபாயமான பாக்டீரியாக்களை எதிர்ப்பவை என்பதை நாமறி வோம். எனவே தேநீர் கோப்பிகளில் சீனியைக் குறையுங்கள். தேவையற்ற இனிப்புக்கு அடிமையாகி வாழ்நாளை அதற்கு இரையாக்கி விடாதீர்கள்.

## ஒரு பிராத்தனை

எங்கு வேதனை உண்டோ அங்கு ஆறுதல் அழிக்கவும்
எங்கு வெறுப்பு உண்டோ அங்கு அன்பு காட்டவும்
எங்கு கலக்கம் உண்டோ அங்கு நம்பிக்கை ஊட்டவும்
எங்கு அந்தகாரம் உண்டோ அங்கு ஒளிவீசவும்
எங்கு துயரம் உண்டோ அங்கு மகிழ்ச்சி அளிக்கவும்
என்னை உமது கருவிாக பயன் படுத்தும் இறைவா
மற்றவர்களால் நான் ஆறுதல் பெறாவிட்டாலும்
நான் மற்றவர்களை ஆறுதல் படுத்தவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எளிய ஆயுர்வேத மருத்துவக் குறிப்புகள்

1. உடல், பருமன், உடல் எடை குறைய தினமும் இரவில் ஒரு கைப்பிடி கொள்ளு எடுத்து தண்ணீரில் ஊறவைத்து காலையில் எழுந்தவுடன் அதை சாப்பிட்டால் நிச்சயம் உடல் எடை குறையும். தொப்பை, ஊளைச் சதை கரையும்.
2. நீரிழிவை கட்டுப்பாட்டில் வைத்திருக்க – தினமும் இரவில் நான்கு வெண்டிக்காயை துண்டுகளாக்கி இரண்டு டம்ளர் நீரில் ஊறவைத்து காலையில் எழுந்தவுடன் அந்நீரை வடிகட்டி அருந்த நீரிழிவு கட்டுப்பாட்டில் இருக்கும்.
3. முகப்பருக்கள் மறைய –
சாதிக்காயை சிறிது சந்தனத்துடன் சேர்த்து அரைத்து அதை இரவில் முகத்தில் தேய்த்து மறுநாள் காலை கழுவி சுத்தம் செய்து வந்தால் முகப்பருக்கள் மறையும்.
4. முடி உதிர்வதை தடுக்க
வேப்பிலை ஒரு கைப்பிடி எடுத்து நீரில் வேகவைத்து ஒரு நாள் கழித்து நீரை வடிகட்டி அந்நீரைக்கொண்டு தலை முழுகி வந்தால் முடி கொட்டுவது நின்றுவிடும். சொடுகும் நீங்கும்.
5. ஞாபக சக்தி பெருக
வல்லாரை 150g, வசம்பு 15 பொடி செய்து தினமும் தேனுடன் கலந்து உண்டுவர ஞாபக சக்தி பெருகும்.
6. குழந்தைகளிற்கு ஏற்படும் மலக்கட்டு, சளி நீங்க தினமும் இக்கிரி, பச்சை மல்லி, நற்சீரகம், அவித்து பருக்கிவர தீரும்.
7. சிறு நீரக கல் நீங்க
வாளைத் தண்டு சாறு தினமும் அருந்திவர சிறுநீரகக் கல் நீங்கும்.
8. சிறுநீர் பெருக.
வெள்ளரி வித்து, நெல்லிவற்றல் இரண்டையும் சம அளவு எடுத்து நீர் விட்டு காச்சி அந்நீரை வடிகட்டி அருந்திவர தீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோரும் உங்களை விரும்ப ....!

பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும்
புன்னகை உதிர்க்க தவறாதீர்கள்

தகுதி இருந்தாலும் இல்லா விட்டாலும்
பாராட்டுதலை தவிர்க்காதீர்கள்

உண்மையானாலும் பொய்யானாலும்
முதலில் நீங்கள் எதையும் வெளியிடாதீர்கள்

முடிந்தாலும் முடியாவிட்டாலும்
உதவ மாட்டேன் என்று சொல்லாதீர்கள்

விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்
வாய்நிறைய எவரையும் வரவேற்று விடுங்கள்

பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும்
எவரையும் நன்கு உபசரியுங்கள்

## நம்பிக்கை

| | |
|---|---|
| படிப்பில் | நம்பிக்கை இழந்தால்<br>பரீட்சைகள் நம்மைப் பார்த்துச் சிரிக்கும் |
| நட்பில் | நம்பிக்கை இழந்தால்<br>பிரிவு நம்மைப் பார்த்துச் சிரிக்கும் |
| கடமையில் | நம்பிக்கை இழந்தால்<br>கஷ்டம் நம்மைப் பார்த்துச் சிரிக்கும் |
| கட்டுப்பாடுகளில் | நம்பிக்கை இழந்தால்<br>கலாச்சாரம் நம்மைப் பார்த்துச் சிரிக்கும் |
| எதிலும் | நம்பிக்கையோடு இருந்தால்<br>வாழ்வில் எல்லாமே சிறக்கும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வொன்றில் உரையாற்றும் போது ...



லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவ கல்லூரியில்
"மக்கள் மருத்துவன்" சஞ்சிகை வெளியீட்டின் போது ...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வொன்றில் மங்கள விளக்கேற்றும் போது ...



லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவ கல்லூரியின்
புதிய சுன்னாகக் கட்டடத்தில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாடை போர்த்தி விருது பெறும் போது ...




வைத்திய கற்கையை நிறைவு செய்த மாணவர்களின் பட்டமளிப்பு விழாவின் போது ...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமனை புகுதல்

**மங்கலமான மனை**

மனை மங்கலமானது. மங்கல மனை எவ்வாறு உருவாகின்றது என்ற வினா வரும். ஆம்! இதற்கான விடை நமது முன்னோர்களே வகுத்து எமக்குத் தந்துள்ளார்கள். நமது முன்னோரின் வழிமுறைகள் தற்காலத்தில் ஒரு சிலராற் கவனிக்காத நிலையையும் காண்கிறோம். ஆகவே சாஸ்திரம் தெரிந்த நல்ல ஒரு குருவை அணுகி மனை அமைப்பது சம்பந்தமாகத் தகுந்த ஆலோசனை பெற்றிருப்பின் வீடு கட்ட ஆரம்பிப்பது நல்லது.

ஒருவர் வீடு கட்ட நிலம் வாங்குகின்றார் எனக் கொள்வோம். அந்த வெற்று நிலம் ஊறல் நிலமாக இருக்கக்கூடாது. செம்மண் என்றால் நன்று. அங்கே மா, பலா, வேம்பு போன்ற மரங்கள் இருப்பின் நல்லது. அரசு, ஆல்கூடாது. கோயிற்பார்வை வீட்டு நிலத்துக்கு நல்லதல்ல. இவை பொதுவாக மனைகட்டத் தொடங்கும் போது நாம் அவதானிக்க வேண்டிய சில அம்சங்களாகும்.

**ஒருவர் வெற்று நிலத்தில் வீடுகட்ட ஆரம்பிப்பது எப்படி?**

வெற்று நிலம் எனும்போது, அங்கே பலவித சேதங்கள் இருக்கலாம். இதனாற் பெரியவீடுகள் கூடப் பாழடைந்த நிலையில் உள்ளதைக் காணலாம். ஆகவே, வைரவர் சாந்தி, பூஜை முதலிற் செய்து, நிலக் குற்றத்தை நீக்க வேண்டும். அதன்பின்பு, அத்திவாரம் இடலாம். அத்திவாரத்திற்கு முன் நவதானியங்களை முளைக்கவிடவும், பின் பசுவையும் கன்றையும் அங்கு கொண்டுவந்து கட்டவும்.

**அத்திவாரம் இடுவது எவ்வாறு?**

அத்திவாரமிடுவதற்கு உரிய நன் நாள் பார்க்க வேண்டும். அத்திவாரம் இட எழுந்திருப்பு நாள் விசேடமானது. (எழுந்திருப்பு நாள் - வாஸ்து புருஷன் எழுந்திருக்கும் நாள்)

வாஸ்து புருஷன் - கிருகதேவதை

அத்திவாரம் இடும்போது தேவையான பொருட்களாவன:

நண்டு வளையில் இருக்கும் மண்

யானைத்தந்த மண்

குளத்து மண்

புற்றுமண்

நவரத்தினம்

45 நாட்கள் (ஒரு மண்டலம்) பூஜிக்கப்பட்ட வாஸ்த்து இயந்திரம் முதலானவற்றை ஒரு மரப்பேழையுள் வைத்துத் தயார் செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திவாரம் இடமுன் சிவாச்சாரியாரைக் கொண்டு விக்னேஸ்வர பூஜை செய்த பின், குரு ஆசிபெறல் வேண்டும். பின்னர் கட்டிடத்தைக் கட்டுபவரை அழைத்து, அவருக்கு வஸ்திரம், தட்சிணை கொடுத்து உபசரணை செய்தபின் அத்திவாரம் இடுவதற்கான குழியில் தேங்காய் உடைத்து, கற்பூரம் காட்டி, பிள்ளையாரை வழிபட்டு, தாயறையின் நிருதி (தென்மேற்கு) மூலையில் அத்திவாரப் பெட்டியை வைத்து அத்திவாரம் இடலாம். கட்டிடத்தை நிர்மாணிப்பவர் உடனே சீமெந்து கலவையிட்டு, அதனை மூடிவிடுவார். வடகிழக்கிலும் இடலாம்.

**வீட்டுக்கான நிலை வைப்பது எப்படி?**

ஆம்! வலது காலை முன் வைக்கும் வாசல் அல்லவா? ஆதலாற் குருவிடம் சென்று நல்ல நாள் பார்த்தபின், அந்நாளிலே பிள்ளையார் பூஜை வழிபாட்டோடு வீட்டின் கதவுகளுக்கான நிலையை வைக்கலாம். முக்கியமாக வாசற் கதவுகளுக்கான நிலையை வைக்கலாம். முக்கியமாக வாசற் கதவு நிலை, அடுத்து பூஜைஅறையின் நிலை.

**வீட்டு வளை வைப்பது எப்படி?**

வீட்டின் கீழ்ப்பாகம் நிறைவேறியதால் மேற்பாகம் முக்கியமாகின்றது. வீட்டின் மேற்பாகத்தைத் தாங்குவது வளையாகும். ஆதலால் பிள்ளையார் வழிபாட்டுடன் வளை வைக்கும் வைபவத்தைச் செய்யலாம்.

**வீடு வேய்தல் எவ்வாறு செய்யப்படும்?**

பழையகால முறையானது ஓலையால் வீட்டை வேய்தல் ஆகும். ஆனால், இப்போது ஓடு போடுகிறார்கள். ஆகவே, ஆகாய நிழல் வீட்டிற் படாது. வீட்டின் மேற்பாகத்தை மூடும்போது தேங்காய் உடைத்து, கற்பூரம் காட்டி, பிள்ளை யாரை வழிபட்ட பின்பு, ஓடுகளால் வீட்டின் மேற்பாகத்தை மூடலாம்.

**வீடு குடிபுகும் முறை யாது?**

வீடு குடிபுகும் பொழுது இல்லத்தலைவன் குருவிடம் (அந்தணர்) சென்று இல்லத் தலைவியின் நட்சத்திரத்திற்கேற்ப நாள் வைப்பது முதற்படியாக அமைதல் வேண்டும்.

வீடு குடிபுகுமுன் வாசலில் பசுமாடு கட்டி, தூபம் இட்டு, அகன்ற வாயுவையும் விஷ ஜந்துக்களையும் அகற்றல்.

வீட்டைச் சுற்றி மா, பலா, வேம்பு, பூமரங்களை நடல் வேண்டும். வேலையாட்கள், வருவோர், போவோர் பலரும் உலாவிய இடமாகையாலும், இல்லறம் செழிப்பதற்காகவும், அந்நிலத்திலும் புதிதாகக் கட்டப்பட்ட பொருட்களிலுள்ள தோஷங்கள் நீங்குவதற்காகவும், வீடு குடிபுகுமுன் வாஸ்து சாந்தி செய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு குடிபுகும் நாளில் முதலில் சிவாச்சாரியார் பிள்ளையார் வழிபாடு, நவக்கிரக வழிபாடுகளுடன், சிவன் அம்மன் வழிபாடு செய்து, விசேஷமாக மகாலக்ஷ்மி வழிபாடுகளையும் செய்வார். இவ்வழிபாடு பூஜை செய்த கும்பநீரால் இல்லத்தலைவன், தலைவி ஆகியோர் அபிஷேகம் செய்யப்பட்டு புத்தாடை அணிந்து, இறைவழிபாடு செய்வர். பின் முதன் முதலாக அடுப்பு மூட்டி, பால்காய்ச்ச ஆயத்தமாவர். பால் புனிதமானது, வெண்மையானது ஆதலால் இல்லத்தலைவி பாலைப் பொங்கிப் பூஜைக்கு அர்ப்பணிப்பது வழக்கம்.

தமது குல தெய்வக் கோவிலிலோ அல்லது வேறு விசேடம் பெற்ற கோவிலிலோ வீடு குடிபுகுதலுக்குத் தேவையான பொருட்களை முதல் நாளே வைத்து (ஆலயத்தில் ஒருநாள் இருப்பது நன்று) அடுத்த நாள் உரிய நேரத்தில் அர்ச்சனைத் தட்டுடன் சென்று பூஜை செய்து, பின் அனைத்துப் பொருட்களையும் கொண்டு வருதல் வேண்டும். சிறப்பாக, பெண்கள் கொண்டு வருவதே முறை. தெய்வப் படங்கள், மங்கலப் பொருட்கள், பிரதானமாகக் கண்ணாடி என்பவற்றைக் கோவிலிலிருந்து எடுத்து வரும்போது புதுமனையின் வாசலில் ஒரு பசுவைக் கட்டி வைத்து, அதில் முழித்த பின்பே இவற்றைப் புதிய வீட்டிற்குள், ஒரு குறிப்பிட்ட வரிசையில் எடுத்துச் சென்று பூஜை அறையில் வைக்க வேண்டும்.

பூஜைகள் இனிது நிறைவேறியதும் சிவாச்சாரியாருக்கு உபசரணைகள் செய்து, அவரது ஆசியைப் பெற்று வாழும் முறை இன்றும் இலங்கையில் சைவப் பெருமக்கள் மத்தியில் இருந்து வரும் வழமையாகும்.

ஒரு மனையை அமைக்கும்போது சுவாமி அறை, சமையற்கூடம், வாழ்வுக்கூடம், ஓய்வெடுக்கும் அறைகள், கழிவறை என்பவற்றைவிடப் பிரதானமான இடமாகக் கொள்ளப்படுகிறது. எனவே அச்சுவாமி அறையில் அம்மனையின் முக்கிய குடியிருப்பாளராகிய கணவனும் மனைவியும் அன்றே பூஜை செய்து தீபம் காட்டி வழிபடுவர். அத்தோடு அந்த அறையின் திறவுகோல் பூஜையில் வைக்கப்பட்டு, சிவாச்சாரியாரால் தலைவரிடம் கையளிக்கப்படும். அவர் அதனைப் பெற்று, மனைக்கு உரிய அரசியான பெண்ணிடம் கொடுக்க, அவள் அதனைப் பெற்றுக் கொண்டு முதன் முதலாக அந்த அறையைப் பூட்டித் திறப்பாள். சுபமுகூர்த்தத்திலே இது இடம்பெற வேண்டுமென்பதற்காகவே, நல்லநாள் பார்த்துக் குடிமனை புகும் விழா நிகழ்த்தப் பெறும். கொண்டு வந்த முளைக்கும் தேங்காயை வீட்டின் தோட்டத்தில் நடுவர். அன்று இரவு குடிபுகுந்தோர் அவ்வீட்டில் தங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு குடிபுகும் போது கோயிலில் இருந்து கொண்டு செல்லும் பொருட்கள்**

1. குத்துவிளக்குகள் 2
2. நிறைகுடம்
3. படங்கள்
   (பிள்ளையார், லக்ஷ்மி, முருகன் (அவசியம் தேவையான படங்கள்)
4. முகம் பார்க்கும் கண்ணாடி
5. பூமாலையுடன் கூடிய அர்ச்சனைத் தட்டம்
6. படங்களுக்குரிய பட்டுக்கள்
7. நிறைநாழி
8. கற்கண்டு
9. பணப்பெட்டி (இதற்குள் நெல் பரவி, பட்டுத்துணி, நாணயம், மஞ்சள் துண்டு வைக்கவும்)
10. 3 செத்தல் தேங்காய்கள் (தோலுடன் உள்ளது)
11. 3 மஞ்சள் பூசிய தேங்காய்கள்
12. ஒரு புது மண்சட்டியில் உப்பு)
13. புதுச்சட்டியில் முழு மஞ்சள்

**பால்காய்ச்ச தேவையானது**

வாழையிலை, பொங்கற் பாத்திரம், கரண்டி, பால் காய்ச்சும் பாத்திரம், மாவிலை, சந்தனம், குங்குமம், விபூதி, பூமாலை, பூக்கள், அருகம்புல், பால்.

**வாஸ்த்து சாந்தி**

வீடு குடிபுகும்போது செய்யும் சாந்திகளில் இதுவும் ஒன்று. அசுத்தமான பூமியை அக்னியால் தகித்துச் சுத்தமாக்கச் செய்யும் சாந்தியே வாஸ்து சாந்தியாகும். இச்சாந்தியின் போது விக்னேஸ்வர பூசை, புண்ணியாக வாசனம் செய்து வாஸ்து புருஷனையும், பிறதேவதைகளைப் பூசித்து அக்கினி காரியம் செய்வர்.

இதற்கு நீற்றுப் பூசணிக்காயொன்றைப் பலியிடுவர். அதன்பின் வைக்கோல், தர்ப்பை முதலியவற்றால் மனித உருவாகச் செய்யப்பட்ட வாஸ்து புருஷனைப் பூசித்து, அக்கினியில் எரிமூளச் செய்து, வீடு, வீதி முதலிய இடங்களில் இழுத்து வருவர். பின் இதற்கு கும்பநீர் தெளித்து விடுவர். இச் சாந்தியின் பின் கைகால்களைச் சுத்தம் செய்துதான் மற்றக் கிரியைகளைச் செய்ய வேண்டும்.

**வீடு குடிபுகும் போது செய்யும் ஹோமங்களுக்குரிய பொருட்கள்**

அரிசிமா
மஞ்சள் மா
எள்ளு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவதானியம்
நெற்பொரி
ஓமச்சாமான், மருந்துச் சாமான் (தமிழ் மருந்துக்கடைகளிற் கிடைக்கும்)
சமித்துக்கட்டு
நெய்
ஊதுபத்தி, கற்பூரம், சாம்பிராணி, அத்தர்
அரிசி
தேங்காய்
மாவிலை, தலைவாழையிலை
அறுகம்புல்
நாயுருவி
தாமரைப்பூ
பூமாலை, பூச்சரம்
வெற்றிலை பாக்கு, பழவகைகள்
எலுமிச்சம்பழம்
நீற்றுப்பூசணி
வைக்கோற் கட்டு
கும்பத்துப் பட்டு

## பேசுவது எப்படி

தாயிடம் அன்பாக பேசவேண்டும்
தந்தையிடம் பண்பாக பேசவேண்டும்
சகோதரிடம் பாசமாகப் பேசவேண்டும்
சகோதரனிடம் அளவாகப் பேசவேண்டும்
குழந்தைகளிடம் செல்லமாக பேசவேண்டும்
கடவுளிடம் மணம் விட்டு பேச வேண்டும்
எப்போதும் பேசுங்கள் பிறர்மனம் புண்படாதவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஷ்டியப்த பூர்த்தி

**மணிவிழா (60ஆவது வயது)**

மணிவிழா என்பது 60 வயது பூர்த்தியாவதைக் குறிக்கும். ஒரு மனிதனுடைய வாழ்நாளிலே 60ஆவது வயது மிகவும் விஷேசமான தொன்றாகும். 1 மணி 60 வினாடிகள் போல் தமிழ் சாஸ்திரப்படி வெவ்வேறு பெயர்கொண்ட 60 ஆண்டுகள் நிறைவுபெற்று மறுபடி ஆரம்பிக்கும்போது 60 வயது பூர்த்தியாகின்றது. 60 ஆவது வயதன்று பிறந்த நேரத்திற் கிரகங்கள் எந்தெந்த இடத்தில் இருந்ததோ அதே இடங்களில் கிரகங்கள் திரும்பவும் வருகின்றன. அதனாலேயே இது ஒரு மனிதனின் வாழ்நாளில் மிகவும் சிறப்பானதொரு அம்சமாகும். 60 ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததை 'சஷ்டியப்த பூர்த்தி" என்று அழைப்பர்.

60 ஆவது வயதான பின் அவர் உலகப்பந்தங்களை விட்டுவிட முயலவேண்டும். இதை நினைவுபடுத்தவே 60ஆவது வயதில் மனைவியைப் பக்கத்தில் வைத்துப் பக்குவமாக மீண்டும் ஒரு கல்யாணத்தை நடத்திப் புதிய கடமைகளை விளக்குகிறார்கள். இது இந்தியாவில் வழக்கத்தில் உள்ள ஒரு சடங்கு.

ஒரு மனிதன் தனது வாழ்வின் முதல் 30 ஆண்டுகளும் கல்விக்காகவும், பெயர் புகழுக்காகவும் செலவிடுகிறான். 30 முதல் 50 ஆண்டுவரை மக்களுக்காக வாழ்கிறான். பின்பு தனது 60 வயது தொடக்கம் நீண்ட ஆயுளோடு ஆன்மா முன்னேற்றத்திற்காகத் தன் வாழ்நாளைப் பயன்படுத்த வேண்டும் என்பதே இவ்விழாவின் குறிக்கோள்.

இந்த மணி விழாவைத் தமிழ் நாட்டில் உள்ள காலசம்ஹால ஸ்தலமாகிய திருக்கடவூரில் (மார்க்கண்டேயர் சிரஞ்சீவித்துவம் பெற்ற ஸ்தலம் - என்றும் 16) அபிராமிப்பட்டருக்கு அமாவாசையை பௌர்ணமியாகக் காட்டிய ஸ்தலத்தில் கொண்டாடுவது சிறப்பானது. அங்கு "மிருத்யுஞ்ச ஹோமம்" செய்து அந்த அபிஷேக நீரை. மணி விழாக் காணும் தம்பதி தமக்கு நீண்ட ஆயுள் வேண்டி அபிஷேகம் செய்வார்கள். இது சாலச் சிறந்தது.

மனைவியை இழந்தவர்கள் மணி விழாப் போன்ற எந்த சுபகாரியங் களையும் செய்தல் கூடாது என்று நூல்கள் கூறுகின்றன.

**பவள விழா (75 ஆவது வயது) சதாபிஷேகம் (80 ஆவது ஆண்டு)**

மணிவிழாப் போலவே, பவள விழாவும் 75 ஆவது வயதிற் கொண்டாடப் படுகிறது. 75 ஆவது வயதில் மனமுதிர்ச்சி பெற்று ரிஷிகளைப் போற்பக்குவ நிலையை அடைய வேண்டும் என்பதை நினைவுபடுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விழாக்களைக் குல தெய்வத்தின் ஆசியுடன் செய்வதும், அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபடுவதும் சிறப்பானது. ஆயிரம்பிறை கண்டோர் சதாபிஷேக விழா (80 வயது) கொண்டாடுவர். 80 ஆவது வயதில் அட்டதிக்குப் பாலகர்களின் அருளைப் பெறச் சதாபிஷேகம் செய்கிறார்கள்.

90ஆவது வயதில் நவக்கிரகங்களின் ஆசி கிடைக்கிறது. 100ஆவது வயதில் ஐம்புலன்களும் கடவுளிடம் இணைக்கின்றன.

### விழாக்களும் ஆண்டுகளும்

50 ஆம் ஆண்டில் பொன்விழா
60 ஆம் ஆண்டில் மணி விழா (வைரவிழா)
75 ஆம் ஆண்டில் பவள விழா
80 ஆம் ஆண்டில் முத்து விழா
100 ஆம் ஆண்டில் நூற்றாண்டு விழா

### சைவ அபரக்கிரியை

அபரம் என்பது பிந்தியது எனப் பொருள்படும். உடலில் இருந்து உயிர் பிரிந்த பின்பு செய்யப்படும் கிரியை ஆதலால், இது அபரக்கிரியை என்று பெயர் பெறுகிறது. அபரக்கிரியை உத்திராந்திக் கிரியை முதல் வருட சிரார்த்தம் வரை பல கிரியைகளை உடையனவாம். இங்கே கூறப்படும் கிரியைகள் யாவும் சமய தீட்சை பெற்றவர்களுக்கு மட்டுமே செய்யப்படுவதாகும். சமயதீட்சை இல்லாதவர்கட்கு மந்திரமில்லாது. திருமுறையுடன் கிரியை செய்ய வேண்டும். ஆதலால் எல்லோரும் சமயதீட்சை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

### உத்திராந்திக் கிரியை

ஒருவர் உயிர் பிரியும் நிலை அடையும் போது (மரண வேளை) சுற்றத்தவரிடத்து பொருள் இடத்தும் உள்ள பற்றை நீக்கி, விபூதி பூசிச் சிவபெருமானைத் தியானித்துத் தேவாரம், திருவாசகங்களைச் சிவனடியவரைக் கொண்டு பாடக் கேட்க வேண்டும். இவ்வேளை (பசு) கோதானம் செய்வது சிறந்ததாகும்.

அவருடைய மகன் அல்லது சுற்றத்தவருள்ளே சமய தீட்சை உடையவன் மனம் கலங்காது புண்ணிய தலத்து வீபூதி பூசி அவர் உடம்பில் வில்வத்தடி மண்பூசி , அவர் வாயில் கங்கா தீர்த்தம் விட்டு, அவர் தலையைத் தம்மடி மீது வைத்து, அவர் செவியில் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை உபதேசித்து, செவியைக் கையினால் மூட வேண்டும். உயிர் நீங்கிய பின், உடலைச் சுத்தி செய்து அலங்காரம் செய்து, நிலத்தைத் தூய்மைப்படுத்தித் தர்ப்பை பரப்பி தெற்கே தலை இருக்கத்தக்கவாறு வளர்த்தவும், காற்பெருவிரல் இரண்டையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணியாற் கட்டி விடவும். இதேபோல் கைப்பெருவிரல் இரண்டையும் சேர்த்துக் கட்டவும். வாயைத் தலையுடன் சேர்த்துக் கட்டி விடவும் உப்பைப் பொட்டலமாகக் கட்டிப் பிரேதத்தின் மீது வைத்தலும் உண்டு. உடலை வெள்ளைத்துணியால் முழுமையாய் மூடிவிடவும். தலைப்பாகத்திற் குத்துவிளக்கு ஏற்றி வைக்கவும். மனைவி, மக்கள், சுற்றத்தவர் அருகில் இருந்து, தேவார திருவாசகங்களைப் பக்தியுடன் ஓத வேண்டும்.

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களும் தனிஷ்டா பஞ்சமி எனப்படும். இப்பஞ்சமியில் ஒருவர் இறந்தால், இதற்குத் தானம், சாந்தி செய்யின் தோஷம் நிவர்த்தியாகும். (சாந்தி விபரம் பக்கம் 11 ல் உள்ளது)

### சூர்ணோற்சவம் வீட்டில் நடைபெறும் கிரியை

இறந்தவர் வீட்டு முற்றத்தில் பந்தல் அமைத்து, வெள்ளை கட்டி, மாவிலை தோரணம் கட்டல் வேண்டும். இங்கு அமைக்கும் பந்தல் தட்டைப் பந்தலாயும் மேலே வேயப்படும் ஓலை, பச்சை ஓலையாயும் இருக்க வேண்டும். வீட்டு வாயிலிலே மொந்தன் வாழை, குலையுடன் கட்டல் வேண்டும். நிலத்தைப் பசுஞ் சாணத்தால் மெழுகி மண்டபத்தை மூன்றாகப் பிரித்து மாக்கோலமிட்டு, மண்டபத்தின் மேற்கே நடுவில் சிவகும்பமும் சூழ எட்டுக் கும்பமும் வைக்கவும். இறந்தவர் சமய தீக்ஷிதராயின் உருத்திர மூர்த்தியையும், விசேட தீக்ஷிதராயின் ஈசுவரமூர்த்தியையும், நிர்வாண தீக்ஷிதர் , ஆசாரி அபிடேகம் பெற்றவராயின் சதாசிவ மூர்த்தியையும், நடுக்கும்பத்திலும் சூழ உள்ள கும்பங்களில் ஈசானம் முதல் கிழக்கு வரை ஈசானம், குபேரன், வாயு, வருணன், நிருதி, யமன், அக்கினி, இந்திரன் ஆகியோரைப் பூசிக்க வேண்டும். நடுவே அக்கினி காரியத்திற்கென குண்டம் ஒன்று அமைத்து அதற்குக் கிழக்கே உரல் உலக்கையையும், அதற்குக் கிழக்கில் பேரி தாடனத்திற்காகப் பேரியையும் வைக்கவும், உரல், உலக்கைக்கு மாவிலை, கூர்ச்சம், புதிய வஸ்திரம் கட்டி மலர்மாலையால் அலங்கரித்து உரலினுள்ளே அறுகும், மஞ்சள் மாவும் இடவும். உரலைச் சூழ நல்லெண்ணெய், அரப்பு, எலுமிச்சம்பழம், அபிடேகப் பொருட்கள், இறந்தவர் உடலுக்கு அணியும் உடுபுடைவை என்பவற்றை வைக்கவும். உரலுக்குப் பக்கத்தே ஒரு கும்பம் வைத்து, அதிற் பாசுபதாஸ்திர தேவரைப் பூசிக்கும்படி காரணாகமத்தில் உள்ளது. இக்கும்ப சலத்தில் சுண்ணப் பொடியைக் குழைப்பர். குண்டத்திற்கு வடக்கே மண்குடத்திற் சுடலைக்குக் கொண்டு செல்லும் உருத்திர கும்பம் அமைத்தல் வேண்டும். ஸ்நபன கும்பத்திற்குத் தெற்கே புண்ணியாகவாசன கும்பத்தையும் பஞ்ச கவ்வியத்தையம் அமைக்கவும்.

கிரியை செய்வோன் - தந்தைக்கு மூத்த மகன், தாய்க்கு இளைய மகன் கடமை செய்தல் வேண்டும். மகன் இல்லாதபோது மனைவி கணவன், மகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரன், அவர் மகன், தந்தை, தாய், மருமகன், சகோதரி, சபிண்டன், சமானோத கன், சீடன் குரு, தோழன், அரசன் ஆகிய இவர்களுள் முன்னவர் இல்லாத இடத்தில் அடுத்தவர் கிரியை செய்யலாம். மகன், மனைவி, மகள் தவிர்ந்த ஏனையோர் கிரியை செய்யின் அவர்கள் தந்தை அல்லது தாய்க்குக் கடமை செய்தவராய் இருக்க வேண்டும்.

கர்த்தா (கிரியை செய்வோன்) சவரம் செய்து, நீராடி, புதிய வஸ்திரம் இரண்டு அணிந்து, அனுட்டானம் முடித்தல் வேண்டும். குரு, கர்த்தாவிற்குப் பஞ்சகவ்வியம் பருகக் கொடுக்கக்கூடாது. கிரியை நடைபெறும் போது, திருமுறைப் பாடல்களை ஓதுதல் வேண்டும். குரு, அங்க நியாசம், கர நியாசம், சிவோகம் பாவனை செய்து, ஸ்நபன கும்ப பூசை முடித்து, அக்கினி காரியம் முடித்து பூரணாகுதி கொடுத்து கிரியையைப் பூர்த்தி செய்வார். கர்த்தாவிடம் தெற்பொரி கொடுத்து அதைப் பிரேதத்தின்மீது போட்டுக் கற்பூர தீபங்காட்டி பின், பிரேதத்தைக் குளிப்பாட்டுவதற்காக, வீட்டின் பின்புறம் எடுத்துச்சென்று, தலை தெற்காகக் கிடத்தி, ஆசௌசிகன் அரப்பு எண்ணெய் வைப்பர். கர்த்தா மேற்கு முகமாக நின்று நல்லெண்ணெய், அரப்பு என்பவற்றைப் பிரேதத்தின் சிரசில் வைப்பர். பின்பு அரிசிமா, மஞ்சள்மா, பால், தயிர், இளநீர் அபிஷேகம் செய்து, பின் பஞ்சகவ்வியம், கும்பநீரால் அபிஷேகம் செய்ய வேண்டும். கர்த்தா இடது கைமேல் வலது கையை வைத்துப் பிடிக்க, வேறு ஒருவர் உதவியுடன் கர்த்தாவின் புறங் கையினால் அபிஷேகம் செய்ய வேண்டும். பின் அத்தர், பன்னீர் முதலிய வாசனைத் திரவியம் தெளித்து, பிரேதத்தை அலங்காரம் செய்து மண்டபத்திற்கு கொண்டு வரவேண்டும். தலை தெற்கில் இருக்கக்கூடியதாகக் குருக்களுக்கு இடப்புறமாக வைத்து திருநீற்றை நீரிற் குழைத்து, சத்தியோசாதம், முதலாக முழந்தாள், தொப்புள், மார்பு, நெற்றி, சிரசு, புயம் இரண்டு முழங்கை, இரண்டு, மணிக்கட்டுகள், இரண்டு விலாகள், முதுகு, கழுத்து ஆகிய இடங்களில் உரிய மந்திரத்துடன் பூசி, பன்னீராற் கைகழுவி, நீரைப் பிரேதத்தின் சிரசில் தெளிக்கவும். இவ்வேளையில் திருநீற்றுப்பதிகம் ஓதல் வேண்டும். சந்தனம் குங்குமத் திலகமிட்டு பூமாலை சாத்தவும்.

**சுண்ணம் இடித்தல்**

பேரிதாடனம் செய்து. அதன்பின் உரலிற் பூமி தேவியையும், உலக்கையில் மேரு மலையையும் பூசித்து (வையகமெல்லாம் உரலாக மாமேருவென்றும் உலக்கை நாட்டி) அறுகு, மஞ்சள்மா என்பவற்றை உரலில் இட்டு எண்பத்தொரு பது மந்திரம் சொல்லி, மூன்றுதரம் இடித்துப் பின் திருவாசகத்தில் உள்ள திருப்பொற் சுண்ணப்பாடல் பாடி இடித்தல் வேண்டும். பஞ்சபுராணம் பாடி நிறைவு செய்து வெற்றிலையில் சுண்ணப்பொடியை எடுத்து உரலுக்குப் பக்கத்தில் உள்ள கும்ப நீர் விட்டுக் குழைத்து, கர்த்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றியில் (பொட்டிட்டு) அணிந்து, பிரேதத்தின் இரண்டு கண்களிலும் சாத்தி, மிகுதியை உடல் முழுவதிலும் தெளித்து விடுக. சுண்ணம் இடிக்கும் போது இறந்தவரின் பேரப்பிள்ளைகள் முதலானோர், பிரேதத்தைச் சூழ நின்று தீபங்கள் பிடிப்பர்.

சுண்ணம் இடித்தல் பிரேத ஸ்நானத்திற்கு முன் நிகழ்வது தான் முறையானது. நம்மவர்களின் ஆசாரக் குறைவு கருதி, பிரேத சுத்தியின் பொருட்டு சிவகும்ப ஸநானம் முடித்து, அதன்பின்பே சுண்ணப்பொடி தெளிக்கப்படுகிறது.

இறந்தவர் நற்கதி அடைய வேண்டித் தானம் கொடுத்தலும், பிரேத யாத்திரையின் பொருட்டு, யாத்திரா தானமும் நிறைவு செய்து, குருக்களுக்குத் தட்சணை கொடுக்கப்படும்.

மனைவி, மக்கள், சுற்றத்தவர் (பெண்கள்) இடப் புறமாகச் சுற்றி வந்து வாய்க்கரிசி இடுவர். (வாய்க்கரிசி - பச்சை அரிசியும் தேங்காய்த் துருவலும் சேர்த்தது). மனைவி, மக்கள் பிரேதத்தின் பூவடிகளிற் பூப்போட்டு வணங்கு வர். கணவன் இறந்தால் மனைவி, மக்கள் பிரேதத்தின் பூவடிகளிற் பூப்போட்டு வணங்குவர். கணவன் இறந்தால் மனைவி தாலியைக் கழற்றிப் பிரேதத்தின் நெஞ்சில் வைக்க வேண்டும். சுமங்கலி இறந்தால், நிறை நாளியை (தீபம், நெல்நிறைந்த 'கொத்து எனும் அளவுக்கலம்" சேர்) பிரேதத்தின் கையால் தொடச்செய்து, வீட்டின் உள்ளே வைக்க வேண்டும். தேங்காய், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் என்பவற்றைச் சேலை முந்தானையில் முடிந்துவிடவும். பிரேதத்தின் கீழே உள்ள துணியையும் மேலே உள்ள துணியையும், சேர்த்து பிரேதத்தை மூடி, தலைப்பகுதியில் ஒரு முடிச்சிடவும், கீழே உள்ள ஆர்க்கைத் துணியால் மூன்றிடத்தில் கட்டவும்.

யாகத்திற்குரிய மரங்களிற் பச்சை மரத்திற் கட்டப்பட்ட பாடையிற் பச்சைத் தென்னை ஓலைப் பன்னாங்கிற் பிரேதத்தை வைக்கவும். பாடை கமுக மரத்தாற் கட்டப்படும். பெண்கள் பாடையை இடமாக மூன்று முறை சுற்றி வந்தபின், பிரேதம் மயானத்துக்குக் கொண்டு செல்லப்படும். கால்கள் முன்பாக முதல்வரப் பிரேதத்தை எடுத்துச் செல்ல வேண்டும். கர்த்தா கும்பத்துடன் முன்னே செல்ல, புகையுடன் கூடிய நெருப்புக் கலத்தை மூன்று காலுடைய உறியில் வைத்து, குனிந்த தலையுடன் சுற்றத்தவர் பின்னேவர, வர்ததியம் சங்கு ஒலிக்கத் திருமுறைப் பாடல்கள் பாடியவாறு, அஸ்திர மந்திரத்துடன், பொரி தூவியவாறு சுடலையை அடைந்து, தலை தெற்கே இருக்குமாறு பாடையை இறக்குக.

வடக்குத் தெற்காக விறகுகளை அடுக்கி, அந்த சிதாஸ்தானத்தில் தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்கே இருக்கப் பிரேதத்தை வைத்துச் சுற்றத்தவர் வாய்க்கரிசி போடவும். சுமங்கலி இறந்தால் அவரின் கணவன் முந்தானையில் முடிந்த தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் என்பவற்றை எடுத்து வைத்து, தேங்காயை உடைத்து தாலியை அவிழ்த்து கழற்றி) எடுக்கவும். கர்த்தா சிவகும்பத்தை இடது தோளில் வைத்து இடப்புறமாகச் சுற்றி வந்து, தலைப்பாகத்தில் வைத்து, அதன் கழுத்துவரை உடைத்தெடுத்து, கும்பநீரில் அரிசியை நனைத்துக் காசுடன் தற்புருஷ மந்திரத்தால் வாய்க்கரிசி இடவும். குடத்தையும் கொள்ளியையும் கொண்டு இடமாக மும்முறை சுற்றி வரவும். ஒவ்வொரு முறையும் குடத்தில் ஒவ்வொரு துவாரம் செய்து ஒழுகும் நீரை சிதையில் தெளிக்கவும். தலைமாட்டில் தெற்கு நோக்கி நின்று கொள்ளியை வைத்து குடத்தை தனக்கு முன்பக்கத்திற்குப் போட்டு உடைக்கவும். பின் கால்மாட்டிற் சென்று பவித்திரம், நமஸ்காரம் செய்து திரும்பிப் பாராமல் நீர்க்கரையை அடைந்து நீராடி, நிவாபாஞ்சாலி தருப்பணம் செய்து கொள்ளவும்.

நிவாபாஞ்சலி தருப்பணம், பிதிரர் பொருட்டு இரு கைகளாலும் செய்யப்படும் சல தருப்பணமாகும். இது பாஷான உத்தியா பனத்திலும் செய்யலாம். சுடலையில் இருந்து வீட்டுக்கு வரும்போது, ஒரு சிறிய இரும்புப் பொருள் கொண்டுவர வேண்டும். ஏனெனிற் பேய், பிசாசுகள் தொடராம லிருக்க இரும்புக் கத்தியைக் கொண்டு வருவார். சுற்றத்தவரோடு வீட்டு வாயிலுக்கு வந்ததும் வேப்பிலை கடித்து உமிழ்ந்தபின் ஒரு கல்லில் ஏறி உலக்கையைக் கடந்து கைகால் கழுவி, பின் நீராடி, வீட்டைச் சுத்தம் செய்யவும். தூய்மையாய் தயாரித்த சோறு கறி முதலியவற்றை இறந்த வருக்குப் படைத்து, தீபமேற்றித் திருமுறை பாடிய பின்னர், உரிமைக் காரருடன் உணவை உண்ணவும், ஆசௌசிகள் (ஞாதிகள்) அல்லாதோர் அங்கு உணவு உண்டால், அவ் ஆசௌசம் முடியும் வரையும் ஆசௌசம் காக்க வேண்டும். அந்தியேட்டிவரை தினமும் இரவில் தீபம் ஏற்றி, நீர் நிரம்பிய பாத்திரம் ஒன்றையும் வைத்துத் திருமுறைப் பாராயணம் செய்தல் வேண்டும். தாம் உண்பதற்குமுன் பிதுர்பாகம் திருவிளக்கடியிற் படைத்துத் தியானித்து ஆன்மப் பிரீதிக்கு வேண்டியபின் உணவருந்த வேண்டும்.

### அஸ்தி சஞ்சயனம் (காடாத்து)

தகனம் செய்த அன்று அல்லது மூன்றாம், ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம் நாட்களிலும் எலும்புகளை எடுக்கலாம். அங்கு அக்கினி தணிந்திருந்தால் சிவாக்கினி மூட்டிப் பிராயச்சித்தம் ஓமம், தத்துவ ஓமம், செய்யவும், அக்கினி தணியும் வரை நீரை ஊற்றவும். அபிஷேகப் பொருட்களால் காலில் இருந்து உச்சிவரை அபிஷேகம் செய்யவும். பின் சத்தியோசாதனம் முதலாம் பஞ்சப்பிரம மந்திரங்களைக் கூறி, முழந்தாள், தொப்புள், மார்பு, நெற்றி, தலை ஆகிய இடங்களில் திருநீறு பூசி, சந்தனம், பூ முதலியவற்றைச் சாத்தி, தூபதீபம் காட்டியபின், முழந்தாள் முதலிய ஐந்து இடங்களிலும் சத்தியோசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனம் முதலான மந்திரம் கூறி எலும்புகளை சேகரித்து எடுத்து, முக்காலியில் உள்ள பால் நிரம்பிய பாத்திரத்தில் ஒலி உண்டாகாதவாறு போட்டு, பாத்திரத்தின் வாயைப் புதிய துணியால் மூடிக் கட்டவும். மிகுதியாயுள்ள எலும்புச் சாம்பலை அள்ளி, அவ்விடத்தைச் சுத்திசெய்து, பண்படுத்தி, நவதானியம் விதைத்து, பால் தெளித்து, குளிரப்பண்ணி, வெற்றிலை, பாக்கு, பழம், நெற்பொரி, றொட்டி, வடை (கோது நீக்கப்படாத உழுந்தில் செய்தது) முதலியவற்றைப் பூத பிரேத பைசாசங்களின் பொருட்டு நிவேதித்து, திருமுறை ஓதி, வழிபாடு செய்த பின்னர், எலும்பையும் சாம்பலையும், சமுத்திரம் முதலிய நீர் நிலைகளில் விடவும். அஸ்தியை அந்தியேட்டிக்கோ, அல்லது காசிக்கோ கொண்டு செல்லவென்று எடுத்து வைப்பது முறையல்ல. வீட்டிற்கு வரும்போது வாசலில் வேப்பிலை மென்று உலக்கையைக் கடந்து வருதல் வேண்டும்.

### அஸ்தி சஞ்சயனத்தின் போது கொண்டு செல்பவை

அரிசிமாவைப் பிசைந்து 7 றொட்டிகள் செய்து கொண்டு போகவேண்டும். அத்தோடு பால், தயிர், மண்முட்டி ஒன்று, வாளி, கத்தி, வாழையிலை, தீவர்த்தி, பழவகை, இளநீர், பாக்கு, வெற்றிலை, பூஜைக்குரிய பொருட்கள்.

### தனிஷ்டா பஞ்சமி சாந்தி

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களில் இறந்தால் தோஷமுண்டு. இதற்குச் சாந்தி செய்ய வேண்டும்.

விட்டிற் பூர்ண கும்பம், தண்ணீர், பசு, தீபம் இவற்றை மூன்றுநாள், இரண்டு நாள் அல்லது ஒரு நாளாவது பாதுகாக்க வேண்டும். நீற்றுப் பூசணிக்காய கட்டுதல், வீட்டில் உள்ளவர்கள் கையில் நூல் கட்டுதல் முதலியன நடைமுறையில் உள்ள வழக்கம். பிரேதத்தைச் சுடலைக்கு எடுத்துச் செல்லும்போது கமுகம் பிள்ளை ஒன்றும் பிரேதத்தோடு கொண்டு செல்லும் வழக்கமும் உண்டு. சனிக்கிழமை பிரேத தகனம் செய்ய நேரிட்டாற் பிரேதத்துடன் கமுகம்பிள்ளை எடுத்துச் செல்வர்.

சுப நட்சத்திர சுப வாரத்தில், பஞ்சமி சாந்தி செய்யப்படும். அல்லது அந்தியேட்டி அன்று இரவு சாந்தி செய்யலாம். ஆசாரியர் நித்திய கருமம் முடிந்தபின், புண்ணிணயாக வாசகம் பஞ்சகவ்வியம் ஸ்தானசுத்தி செய்வார். பின் விக்கினேஸ்வரரைப் பூசித்து யமன் பிரதிமையைத் தானம் செய்க.

எருமை வாகனத்துடன் யமனை வெள்ளி அல்லது செப்புத் தகட்டில் வரைந்து சந்தனம், புஷ்பங்கள் சாத்தி, சோடச பூஜை செய்ய வேண்டும். பசு, த்ருணம், சலம் இவைகளை வைத்து, இறந்த நட்சத்திர சாந்தி தானங்களைச் செய்க. அவிட்டத்திற்கு வெண்கலப் பாத்திரமும், சதயத்திற்கு எள்ளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரட்டாதிக்கு வஸ்திரமும் (ஆடை), உத்தரட்டாதிக்கு வெல்லமும், ரேவதிக்கு வெள்ளியும் தானம் செய்க.

வீட்டின் நடுவில் இரண்டு படி நெல் பரவி, ஒருபடி அரிசியும் அரைப்படி எள்ளும் காற்படி உழுந்தும் பரவி அதன் மேல் கும்பம் வைத்து, அதில் லக்ஷ்மியை ஆவாகனஞ் செய்து லக்ஷ்மி பிரதிமையை வைத்துப் பூசித்து கிழக்கு முதல் ஈசானம் வரை, திக்கு பாலகர்களைக் கலசங்களிற் பூசித்து, நைவேத்திய தூபதீபம் கொடுத்து, அவரவர் மந்திரங்களை ஆயிரம் அல்லது ஐந்நூறாவது செபித்து, கும்பத்திற்கு மேற்கே அக்கினி உண்டாக்கி, அதில் லக்ஷ்மிக்கும் திக்குப் பாலகர்களுக்கும் ஆகுதி செய்க. நவக்கிரக ஓமம் செய்து, கர்த்தாவை கிழக்கு முகமாக இருத்தி, கும்ப நீரால் அபிஷேகம் செய்து, பஞ்சகவ்வியம் பருகக் கொடுக்கவும். பின் தானம் கொடுத்து, ஆசாரியரைப் பூஜை செய்யவும். இது அபரக்கிரியா வீதி வியாக்கியானத்திற் கூறப்பட்டது. இக்காலத்தில் நடைமுறையில் உள்ள சாந்தி மேல்வருமாறு:

அந்தியேட்டி அன்று, இரவு வீட்டு முற்றத்திற் பந்தலிட்டு வெள்ளை கட்டி, மாவிலை தோரணத்தால் அலங்கரித்து, நிலத்தை மெழுகிச் சாந்தியை ஆரம்பிப்பர்.

விக்கினேஸ்வரர் பூஜை , புண்ணியயாகவாசனம், பஞ்சகவ்விய பூஜை முடித்து, முறத்தில் (சுளகு) அரிசிமா, மஞ்சள்மா, கரிமா, இலை (பச்சை) மா, செங்கல் (சிவப்பு) மா இவற்றால், சிதாஸ்தான பதம் வரைந்து, இதிற் பஞ்ச தத்துவங்களையும் பூசித்து, அரிசிமா அல்லது தர்ப்பையினாற் செய்த புத்தளிகையை (உருவம்) வைத்து, இறந்த நட்சத்திரத்திற்குரிய மந்திரங்களால் பூசித்து, அக்கினி உண்டாக்கி, ஆகுதி, பலி, பூர்ணாகுதி கொடுத்து நிறைவு செய்து, முறத்துடன் புத்தளிகையைச் சுடலைக்குக் கொண்டு சென்று தகனம், செய்து சாம்பலை நீர்நிலைகளில் கரைத்து வீட்டிற்கு வந்து நீராடி, அனுட்டானம் முடித்த பின் சிவன், வர்த்தனி, லக்ஷ்மி, நவக்கிரக தேவர்களையம் பூசித்து கர்த்தாவிற்கு, சிவன் வர்த்தனி கும்பநீரால் அபிஷேகம் செய்ய வேண்டும். அதன் பின் தானம் கொடுக்கவும்.

வெண்கலமாயின் ஐந்து பலமும், எள் எனின் இரண்டு படியும், வஸ்திரம் எனின் இரண்டும், வெல்லமாயின் பத்து பலமும், வெள்ளி எனின் ஒரு பலமும், தானம் செய்யவும், அவிட்டத்திற்கு ஆறு மாதம், சதயத்திற்கு மூன்று மாதம், பூரட்டாதிக்கு ஒன்றரை மாதம், உத்தரட்டாதிக்கு ஒரு மாதம், ரேவதிக்குப் பதினைந்து நாட்கள் தோஷமாகும்.

### எட்டுச் செலவு

எட்டுச் செலவு என்ற கிரியை பத்ததி, ஆகமங்கள் ஆகியவற்றிற் குறிப்பிடப்படவில்லை. தேச வழமையில் உள்ள கிரியையாகும். இறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளில் இருந்து ஏழாம் நாளிற் செய்யப்படும். தேவை கருதி ஐந்தாம் நாளிற் செய்வதும் உண்டு. இறந்தவர் விரும்பி உண்ட உணவு வகை யாவும் படைக்கும் பேருணவுப் படையல் படைத்து, தீபம் காட்டி, அவ்வளவு வகைகளிலும் சிறு பகுதியை எடுத்து, தீப்பந்தம், இளநீருடன் சந்தியில் வைக்கும் வழமை உண்டு. இது பகல் வேளையில் நடைபெறும். சில இடங்களில் இரவு வேளையில் நடத்துவர். இதில் மாமிச உணவு, மதுபானம் என்பன படைத்தல் தவறு. இறந்தவருடைய ஆன்மா சிவலோக யாத்திரை செய்யும் போது, கடமை செய்தவரும், வீடும் புனிதமாக இருக்க வேண்டும் என்பதால் 31 நாட்களும் மாமிச உணவைத் தவிர்க்க வேண்டும். எட்டுச் செலவுவரை வீட்டில் எண்ணெயில் பொரித்த உணவு வகைகள் தயாரிப்பதில்லை.

## அந்தியேட்டி

அந்தியேட்டி என்பது இறுதியாகச் செய்யப்படும் யாகம் எனப் பொருள்படும். அந்தியேட்டியினால் சமய ஆசாரம், அனுட்டானத்தில் ஏற்பட்ட குறைகள் நிவர்த்தியாகும்.

அந்தியேட்டி - சமய அந்தியேட்டி, விசேட அந்தியேட்டி, நிர்வாண அந்தியேட்டி என மூன்று வகைப்படும். இது சமய, விசேட, நிர்வாண தீட்சை உடையவர்களுக்கு, அவர்கள் பெற்ற தீட்சை வகையிற் செய்யப்படும். விசேட, நிர்வாண அந்தியேட்டியும், சைவ ஆசாரம் உடைய புலால் உண்ணாத சமய தீட்சை உடைய சைவர்களுக்கும் செய்யப்படும். சமய அந்தியேட்டியும் பிரேதத்திற் சுடலையிற் செய்யப்படும். ஏனையோருக்குச் செய்யப்படும் சமய அந்தியேட்டி, ஆசௌச முடிவில் 31 ஆம் நாளிற் செய்யப்படும். இதை இக்காலத்தில் தர்ப்பை சுடுதல் என்பர். மகன் தவிர்ந்த ஏனையோர் கடமை (கொள்ளி வைத்தல்) செய்தால், அந்தியேஷ்டி (தர்ப்பை சுடல்) நாள் பார்த்துத்தான் செய்ய வேண்டும். நந்தை, பத்ரை, திரயோதசி தவிர்ந்த திதிகளுள், செவ்வாய், வியாழன், வெள்ளி தவிர்ந்த வார லக்கினங்களும், திரிபாத நட்சத்திரம் தவிர்ந்த ஏனைய நட்சத்திரங்களிலும் பாபக்கிரகம் பலமுண்டான சமயத்தில் இக்கருமம் செய்யலாம். (காலவிதானம்) நந்தை - பிரதமை, ஷஷ்டி, ஏகாதசி; பத்ரை - துதியை, ஸப்தமி, துவாதசி, திரிபாத நட்சத்திரம், கார்த்திகை, உத்தரம், உத்தராடம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி) 26 ஆம் நாளுக்கு மேல் 31 ஆம் நாள் வரையில் அந்தியேட்டி செய்யலாம்.

சுடலை, ஆற்றங்கரை, குளக்கரை, சமுத்திரக்கரை, வீடு (கிணற்றடி) ஆகிய இடங்கள் அந்தியேட்டி செய்வதற்கு உகந்த இடங்களாகும். ஒன்பது முழம் முதல் குறைந்த பட்சம் ஐந்து முழ நீள அகலங் கொண்ட மண்டபம் அமைத்தல் வேண்டும். இம்மண்டபத்திற்கு பதினாறு அல்லது பன்னிரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது நாலு கால்கள் அமைய வேண்டும். மேலே வெள்ளை கட்டி, விதானம், தோரணம், பூமாலைகளால் அலங்கரித்து நான்கு திசைகளிலும் வாயில் அமைத்து, தெற்கில் பிரதான வாயில் அமைத்து சாணத்தினால் நிலத்தை மெழுகி மண்டபத்தை ஒன்பது பதமாக்கவும்.

நடுப்பதத்தில் ஓம குண்டமும், வடமேற்கில் சிவகும்பமும், வடகிழக்கில் வர்த்தனி (பாசுபதாஸ்திர) கும்பமும், தென்மேற்கிற் பஞ்சகவ்விய மேடையும், தென்கிழக்கிற் சிதாவஸ்து தானம் (பிரேத தகன இடம்) ஆகியவற்றையும் சுற்று வேதிவையில் (மண்டபத்தின் சுற்றுப்புறத்தில்) தசாயுத கும்பங்களை யும் அமைத்துக் கொள்ளவும்.

சீதாவஸ்து தானத்தை வடக்குத் தெற்காக நீண்ட சதுரமாக்கி, இரு பத்தைந்து பதமாகப் பிரித்து, நடுப்பதம் ஐந்திலும் மஞ்சள் மாவும், தென் மேற்கில் நாலு பதத்தில் வெள்ளை மாவும், தென்கிழக்கில் நாலு பதத்தில் சிவப்பு மாவும், வட கிழக்கில் நாலு பக்கத்திற் கறுப்பு மாவும், வடமேற்கில் நாலு பதத்தில் பச்சை மாவும், வடக்கில் உள்ள ஒரு பதத்திற் சிவப்பு மாவும், மேற்கில் உள்ள ஒரு பதத்தில் வெள்ளைமாவும், தெற்கில் உள்ள பதத்திற் கறுப்பு மாவும், கிழக்கில் உள்ள ஒரு பதத்தில் மஞ்சள் மாவும் இட்டுக் கொள்ளவும்.

புத்தளிகை (பிரேதம் போலச் செய்யும் தருப்பை) முப்பத்தாறு தர்ப்பைக ளால் முறுக்கி, இடப்பக்கமாக முடிந்து, ஐவைந்து தர்ப்பைகளால் கைகளும், பதினமூன்று தர்ப்பைகளாகப் பிரித்து கால்களையும் ஆக்க வேண்டும்.

ஆசாரியார் நீராடிச் சந்தியாவந்தனம் முடித்து, தெற்கு வாயிலால் மண்டபத்துட் புகுந்து, சிவகும்ப வேதிகைக்குத் தெற்கே வடக்கு நோக்கி இருந்து, கர்த்தாவிற்குத் திருநூறு கொடுத்து, சங்கற்பம் செய்து கொண்டு, சளீகரணம், பூதசுத்தி, மந்திர சுத்தி, அந்தர்யாகம், சிவகஸ்தம் செய்து, சிவோகம் பாவனை முடித்து, ஞானகட்க தாரணம் செய்தல் வேண்டும். பஞ்சகவ்விய பூசை முடித்து, யாக மண்டபத்தையும், கர்த்தாவையும் புத்தளிகையையும் பஞ்சகவ்வியத்தால் (புரொட்சித்தல்) தெளித்தல் வேண்டும். சூர்ணோற்சவம் செய்து, சுண்ணப்பொடி சாத்திப் புத்தளிகைக்கு அபிஷேகம் செய்ய வேண்டும். பதினெட்டு சமஸ்காரங்களையும் மனத்தினாலே செய்து, நெற்பொரி முதலியனவற்றை மண்டபத்தில் தூவி, மிகுதியை ஈசானத்தில் பாசுபதாஸ்திர வர்த்தனி ஆசனத்தில் இடவும்.

**சிதாவஸ்து பூஜை**

நடுப்பதம் ஐந்திலும் பிருதுவி தத்துவத்தையும், பிரம்மாவையும் தென்மேற்கு மூலையில்

நான்கு பதத்திலும் அப்பு தத்துவத்தையும், விஷ்ணுவையும் தென்கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலையில்
நான்கு பதத்திலும் தேயு தத்துவத்தையும், உருத்திரனையும் வடமேற்கு மூலையில்
நான்கு பதத்திலும் வாயு தத்துவத்தையும், மகேஸ்வரனையும், வடகிழக்கு மூலையில்

ஆகாச தத்துவத்தையும் சதாசிவனையும் வடக்கில் உள்ள ஒரு பதத்தில், குபேரனையும் மேற்கில் உள்ள ஒரு பதத்தில், வருணனையும், தெற்கில் உள்ள ஒரு பதத்தில், யமனையும், கிழக்கில் உள்ள பதத்தில், இந்திரனையும், பூசித்து பழம், தாம்பூலம், நிவேதித்து, நீராஞ்சனம் செய்தல் வேண்டும்.

வர்த்தனி பூஜை செய்து, பாசுபதாஸ்திர பூஜைசெய்து, ஞானவாளை ஒப்புக் கொடுத்து, யாகத்தைக் காத்து ரட்சிக்கும்படி வேண்டியபின், தசாயுத பூஜை செய்ய வேண்டும். வட கிழக்குத் திசை முதல் கிழக்குத் திசை வரையுள்ள எட்டுக் கும்பத்திலும் சூலம், கதை, துவசம், பாசம், கட்கம், தண்டு, சக்தி, வச்சிரம் ஆகியவற்றையும், வடகிழக்கில், தெற்கில் உள்ள கும்பத்திற் பத்மத்தையும், தென்மேற்கில், தெற்கில் உள்ள கும்பத்திற் சக்கரத்தையும் பூசித்து, தசாயுத தேவர்களிடம் யாகம் முடியும் வரை பாதுகாக்க வேண்டும் என சிவாஞ்சையைத் தெரிவித்தல் வேண்டும். பின்னர் சிவகும்ப பூஜை சிவாக்கினி காரியம், பிராயச்சித்த செபம், நாடீசந்தானம், மிருதக தீட்சை செய்து சீதாவாஸ்து தானத்தில் பூசித்த ஐவகை மாவையும் இட்டு, அதன் மேற் புத்தளிகையை வைத்து வாய்க்கரிசியிட்டு, கொள்ளி வைத்துக் குடம் உடைத்து, தகனம் செய்த பின்னர், காடாற்றி, புத்தளிகைச் சாம்பலை ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொள்ளவும்.

## நக்னதானம்

இறந்தவருக்கு ஏற்படக்கூடிய பசி, தாகம், குளிர் (ஆடை இல்லாத குறை) போன்றவற்றை நீக்கும் பொருட்டுச் செய்யப்படும் தானம் நக்னதானம் ஆகும். குடும்பத்தவராய் உள்ள ஆசாரியாருக்கு அரிசி, வஸ்திரம் முதலியவற்றைத் தானமாகக் கொடுக்க வேண்டும். உயர்தீட்சை உடையோருக்கு, பிரேத தகனம் செய்த உடன் இத்தானம் கொடுக்கப்படும்.

## துர்மரணப் பிராயச்சித்தம்

இயற்கையாக உயிர்பிரியாது தன் உயிரைத் தானே மாய்த்துக் கொள்ளல் அல்லது வேறு ஏதுக்களால் உயிர்பிரிதல் துர்மரணம் எனப்படும். நீரில், நெருப்பிற்பாய்தலால், நஞ்சு உண்டலால், பாம்பு கடித்தலால், ஆயுதங்களால், விலங்குகளால் ஏற்படும் இறப்பு துர்மரணமாகும்.

இது புத்திபூர்வம், அபுத்திபூர்வம் என இருவகைப்படும். புத்திபூர்வம் தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் உயிரைப் போக்கிக் கொள்வது. அபுத்திபூர்வம் எதிர்பாராத விதமாக உயிர் பிரிதல். அபுத்திபூர்வ துர்மரணத்திற் சாதாரண மரணம் போலவே கிரியையும் ஆசௌசமும் கொள்ளப்படும். இதில் தேகம் பின்னப்பட்டிருந்தால் ஆசௌச முடிவில், பிரதித்தேகத்தில் (புத்தளிகையில்) புனர்தகனம் அந்தியேட்டி செய்ய வேண்டும். புத்திபூர்வ துர்மரணத்தில் சாதாரண அக்கினியில் தகனம் செய்து ஒருவருடம் அல்லது ஆறு மாதம் அல்லது மூன்று மாத முடிவில், இறந்த திதியில் தர்ப்பையாற் செய்யப்பட்ட பிரதித் தேகத்தில் அந்தியேட்டி செய்து கொள்க. துர்மரணமடைந்தோர் பைசா ரூபத்தில் அலைவர். ஆதலால் பைசாச புவனத்திற்கு அதிபதியாகிய வைரவருக்குச் சாந்தி செய்த பின்பே அந்தியேட்டி செய்யப்படும்.

**பாஷாணத்தாபனம்**

இறந்தவருடைய ஆன்மாவைக் கல்லிலே பூசித்தல் பாஷான பூஜை எனப்படும். (பாஷாணம் - கல்) இதிற் செய்யப்படும் கிரியைகள் ஆன்மாவின் பசி, தாகம், நீங்கும் பொருட்கள், பிரேத வடிவம் நீங்கும் பொருட்டும், ஆன்மாவின் உணவு விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டுமேயாகும்.

இக்கிரியை வீட்டில் மண்டபம் அமைத்து விரிவாகச் செய்யலாம். பிரேதத்தில் அந்தியேட்டி செய்பவர்கள், விட்டிலே பாஷாணத் தாபனம் செய்து, விரிவாகப் பூஜை நிகழ்த்துவர். இக்காலத்தில் தர்ப்பை சுடுதல் நிறை வெய்தியதும் அந்தியேட்டி மடத்திலேயே இக்கிரியை நிகழ்கிறது.

மண்டபத்தில் வேதிகை அமைத்து, வேதிகையில் வடக்குமுகமாக ஒரு கும்பம் வைத்து, அதில் இறந்தவர் தீட்சைக்கு ஏற்றது போல, உருத்திரர், ஈசுவரர், சதாசிவர் என்பவரில் ஏற்றவரைப் பூசித்தல் வேண்டும். ஒரு பாத்திரத்திலே கல்லினைக் கூர்ச்சங் கட்டி வடக்கு முகமாக வைத்து, அதில் இறந்தவருடைய ஆன்மாவை ஆவாகனம் பண்ணி, எண்ணெய், அரிசிமா முதலான அபிடேகத் திரவியங்களால் அபிடேகம் செய்து, வஸ்திரம் சாத்தி, பூஜைதர்ப்பணம் செய்தல் வேண்டும். தர்ப்பணம் வாசோதகம், திலோதகம், குசோதகம் என மூன்று வகையுண்டு. புதுச் சேலையோடு சேர்த்துத் தர்ப்பணம் செய்வது, வாசோதகம். எள்ளுடன் சேர்த்துச் செய்வது திலோதகம், தர்ப்பையுடன் சேர்த்துச் செய்வது குசோதகம். தர்ப்பணம் முதல்நாள் மூன்றும் இரண்டாம் நாள் நான்கும் என்ற வகையில் ஆசௌச முடிவுநாள் வரை செய்தல் வேண்டும். முப்பது நாள் ஆசௌசிகள் 525 தர்ப்பணம் செய்தல் வேண்டும். நாளுக்கு ஒன்றாக ஆசௌசக் கணக்கிற் பிண்டம் இடல் வேண்டும்.

நவசிராத்தம், ஏகோத்தர விருத்தி, தர்ப்பணம், சங்கிதா சிராத்த தானம் என்பன முறைப்படி செய்தல் வேண்டும். மூன்றுக்கும் தட்சணை கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவசிரார்த்தம்**

இது முதல்நாட் தொடங்கி, ஒற்றித நாட்களிற் செய்யப்படுவது. ஒழுக்கமுள்ள அந்தணர் ஒருவரை அழைத்து, இறந்தவருடைய ஆன்மா நற்கதியடைய வேண்டியதானம் கொடுத்து, அவரிடம் தான, பல தீர்த்தத்தை வாங்கிப் பாஷாணத்தின் மீது விடுவதன் மூலம், இறந்த ஆன்மாவிற்கு, பிரேதத் தன்மை நீங்கி நற்கதி கிடைக்கும்.

**சங்கிதா சிரார்த்தம்**

பதினொரு மந்திரங்களில் நேத்திரம் ஒழிந்த பத்து மந்திரங்களைப் பத்து சீலமுள்ள அந்தணர்களில் ஆவாகித்து, அவர்களுக்குச் செய்யும் தானமாகும். இதனால் தீட்சையின் பின் ஏற்பட்ட ஆசார அனுட்டானக் குறைகள் நீங்கும். உருத்திரபலி இட்டு அதன்பின் பிரபூத பலி எனப்படும் பேருணவு படைத்து, தீபாராதனை, தோத்திரம் செய்தல் வேண்டும். இறந்தவர்மேல் பாடப்பட்ட சரமகவி (கல்வெட்டு) பாடி, சுற்றத்தவர் பூவும், நீரும், இட்டு, அஞ்சலி செலுத்தல் வேண்டும்.

கல்லிலே பூசித்த ஆன்மாவைக் கும்பமூர்த்தியிடத்தும், கும்ப மூர்த்தியை அதற்குரிய இடத்திலும் ஒடுக்கி, கும்பம், கல், பிண்டம், சாம்பல் முதலியவற்றை வாத்திய ஒலியுடன் சமுத்திரம் முதலான நீர் நிலைகளில் விடுக.

நீர் நிலையில் மார்பளவு தண்ணீரில், வடக்கு முகமாக நின்று, பிண்டத்தை முதலிலும், கும்பத்தை அடுத்தும் பாஷாணத்தைப் பின்னருமாக விட வேண்டும். நீராடிவிட்டு வீட்டிற்கு வரவேண்டும்.

வீட்டு வாசலில் வேப்பிலையைத் தின்று துப்பி, ஆசமனம் செய்து, அக்கினி, தண்ணீர், கோமயம், வெண்கடுகு இவைகளைத் தொட்டு உலக்கையைக் கடந்து, கால்கை கழுவி, வீட்டினுட் செல்லவும்.

இதுவரை கூறிய கிரியைகள் சைவக் குருக்கள் செய்வதும் மேற்பட்ட வீட்டுக் கிரியைகளைப் பிராமணக் குருக்கள்மாரும் செய்வதும் நடைமுறையில் உண்டு.

**துடக்குக்கழிவு**

எமக்கு ஆசௌசம் முப்பது இரவுகள் முப்பத்தோராம் நாட் காலையில் தான் துடக்குக் கழிவு நிகழ வேண்டும். சைவ போசனமுடையவர்கள் வேறு மாமிசம் உண்பவருடன் கலப்பின்றி இருந்தால் பதினாறாம் நாளில் ஆசௌசம் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தியேட்டி செய்பவர்கள் வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்ற பின்னர் வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்து அனைவரும் நீராடி பிராமணக் குருக்களைக் கொண்டு புண்ணியாக வாசனம் செய்து ஆசௌசம் நீக்கலாம். இதன் பின்னர் தான் பாஷாண (கல்லடி)ப் படையலுக்கு உணவு தயாரித்தல் வேண்டும். ஆசௌசம் நீங்கிய மறுநாளில் ஏனைய கிரியைகளை செய்யலாம்.

### வீட்டுக்கிரியை

வீட்டு முற்றத்தில் மெழுகி பூரணகும்பம் (நிறைகுடம்) வைத்து, தீபம் ஏற்றி பிள்ளையார் பிடித்து வைத்து, வாயிலில் மாவிலை கட்டவும். வீட்டுக் கிரியைகளில் முதலில் சங்கல்பம் செய்து, விக்கினேஸ்வர பூஜை, தீபதேவி பூஜை, பஞ்ச கௌவிய, வருண கும்ப பூஜை என்பன நிறைவேறிய பின் கர்த்தாவிற்கு பஞ்சகவ்வியம் பருகக் கொடுக்கப்படும்.

### அனுஞ்ஞை

ஒரு வாழை இலையில் மூன்று தர்ப்பை, பவித்திரம், எள்ளு, தாம்பூலம், உபவீதம், காசு என்பவற்றை, கர்த்தா தலையில் வைத்து இடப்புறமாக மூன்று முறை சுற்றி, இன்ன வருடம், அயனம், ருது , மாதம், பட்சம், நட்சத்திரம், திதி, வாரம் கூடிய சுப தினத்திலே இன்னாருக்குச் சிரார்த்தம் செய்கின்றேன். அதற்கு அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று குருவினிடம் வேண்ட அவர் அதிகாரம் தந்தோம் என்று கட்டைத் தர்ப்பையைக் கர்த்தாவிடம் கொடுக்க, அதைக் கர்த்தா இடுப்பிற் சொருகிக் கொள்வர். பின்னர் வலது கை மோதிர விரலிற் பவித்திரத்தையும் வலத்தோளில் உபவீதத்தையும் அணிந்து கொள்ளவும்.

### சூரிய பூசை

சிவப்பு நிறப் பூவும் நீரும் கொண்டு, மூன்று முறை ஆத்ம பிரதட்சணம் செய்து, சூரிய மூர்த்தியை வணங்கிச் செய்யப்போகும் சிரார்த்தத்திற்குச் சாட்சியாக இருந்து அருள வேண்டுமெனப் பிரார்த்தித்து, முற்றத்தில் வைக்கப்பட்ட கும்பத்திற் பூவையும் நீரையும் போட்டு வழிபடவும்.

தந்தைக்கு அல்லது தாய்க்கு இடபதானம், ஏகோதிட்டம், பஞ்சதச (பதினைந்து) மாசியம், சோதகும்ப சிரார்த்தம், சபிண்டீகரணம் என்பன செய்யப் போகின்றேன் என்று சங்கற்பம் பண்ணிக் கொள்ளவும்.

### இடபதானம்

இறந்தவருடைய தான தருமங்களின் பலனைத் தருமத்தின் வடிவாயுள்ள இடபத்தின் மூலமாகச் சிவபெருமானிடம் சேர்க்கும் பொருட்டு இடபதானம் செய்யப்படும். இடபம் (ஆண்மாடு) தானம் செய்ய வசதிப்படாத இடத்து, ஒரு தாம்பாளத்தில் அரிசியைப் பரப்பி, அதில் இடபத்தின் வடிவை எழுதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்மேல் தேங்காய் வைத்து, கர்த்தா அத்தாம்பாளத்தை நாலு திசையிலும் இழுத்து உரிய மந்திரங்களைக் கூறித் தட்சணையுடன் அதை ஓர் அந்தணருக்குத் தானமாகக் கொடுக்கவும்.

**ஏகோதிட்டம்**

இது இறந்தவர் ஒருவரை மட்டும் குறித்துச் செய்யப்படும் தானமாகும். அந்தணர் ஒருவரை அழைத்து, மேற்கு முகமாக ஆசனத்தில் இருத்தி, அவருக்கு ஸ்நானத்திற்கு வேண்டிய நல்லெண்ணெய், அரப்பு, எலுமிச்சம் பழம் கொடுத்து நீராடிய தாகப்பாவனை செய்து, வேட்டி, சால்லை, சந்தனம், பூ என்பவற்றைச் சாத்தி, அரிசி, மரக்கறி என்பவற்றைக் கொடுத்துப் பூசிக்கவும்.

தரையைச் சுத்தம் செய்து, வாழை இலை போட்டு, ஒரு தருப்பையைத் தெற்கே நுனி இருக்கும் வண்ணம் வைத்து, ஒரு பிண்டம் இடவும். பச்சை அரிசிமா, உழுந்துமா, எள், பால், தயிர், நெய், தேன், வாழைப்பழம் ஆகிய எட்டு, பொருட்கள் சேர்த்து உருட்டிப் பிண்டம் செய்யப்படும். கர்த்தா தெற்கு முகமாக இடது முழந்தாளையும் இடது கையையும் ஊன்றியிருந்து, கைமாறிப் பிண்டம் இடவும், சந்தனம், பூ சாத்தி, வெற்றிலை, பாக்கு, பழம், இளநீர், நைவேத்தியம், நிவேதித்து, தர்ப்பணம் செய்து நமஸ்காரம் செய்து கொண்டு, தமது சக்திக்கு ஏற்றவாறு தானம் கொடுக்கவும். இத்தானத்தினால் ஆன்மா உலக வாழ்வில் ஓரளவு திருப்தியடையும். இதில் இருபத்திநாலு தானங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

அவையாவன: பவித்திரம், பூனூல், கமண்டலம், உருத்திராக்கம், பாதுகை (மிதியடி), தண்டம், கௌபீனம், வீபூதிப்பை, யோபபட்டம், குடை, குல்லாய், மேல்வஸ்திரம், (சால்வை), வஸ்திரம், பொன், மோதிரம், இரத்தினம், நெய், வெண்ணெய், பசு, பூமி, போசனத்திற்கு வேண்டிய பொருட்கள், சர்வ தானியங்கள், சர்வ அலங்காரப் பொருட்கள், தாசீ, தாசர்கள் என்பனவாம். ஏகோதிட்டம் ஏற்ற குருவிற்கு தானம், தட்சணைகளைக் கொடுத்து, வழி அனுப்பி, மஞ்சள் நீர் தெளித்து, இடத்தைச் சுத்தம் செய்து கர்த்தா கை, கால் கழுவி அல்லது நீராடி வந்து பஞ்ச கவ்வியம் பருகிக் கொள்ளவும்.

**மாசியம்**

இறந்த வருடத்தில் மாதந்தோறும் செய்யப்படும் சிரார்த்தமே மாசிகமாகும். இது மாதந்தோறும் இறந்த திதியிற் செய்யப்படும். முதல் மாதத்திற்குரிய மாசிகம் ஏகோதிட்டம் என்ற பெயரில் முதலிற் செய்யப்பட்டது. இரண்டாம் மாதம் தொடக்கம் பதினொரு மாத மாசிகமும், ஊனமாசிகம், ஊனதிரிபட்ச மாசிகம், ஊனசாண் மாசிகமும், ஊன ஆப்திக மாசிகமும் ஆகப் பதினைந்து மாசிகம் செய்தல் வேண்டும்.

1. ஊனமாசிகம் - இறந்தநாள் முதல் இருபத்தேழு நாளின் மேல்மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களுட் செய்யப்படுவது

2. ஊனதிரிபட்ச மாசிகம் - அவ்வண்ணம் நாற்பதாம் நாள் முதல் நாற்பத்தைந்தாம் நாளுக்கிடையிற் செய்யப்படுவது
3. ஊனசாண் மாசிகம் - மேற்கூறப்பட்டபடி நூற்று எழுபதாம் நாள் முதல் நூற்றெண்பதாம் நாட்களுக்கிடையில் செய்யப்படுவது
4. ஊன ஆப்திக மாசிகம் - அவ்வாறே முந்நூற்றைம்பதாம் நாள் முதல் முந்நூற்றைம்பத்தைந்தாம் நாட்களுக்கிடையிற் செய்யப்படுவது.

மாதந்தோறும் செய்யும் பதினொரு மாசிகங்களும் இறந்த திதியிற் செய்யப்படும் ஊன மாசிகங்கள் நான்கும் தோஷங்கள் இல்லாத நாளிற் செய்ய வேண்டும். வெள்ளிக்கிழமையிலும் நந்தை, சதுர்த்தசி, அமாவாசை என்னும் திதிகளிலும், கார்த்திகை, ஆயிலியம், பூரம், கேட்டை, மூலம், பூரட்டாதி என்னும் நட்சத்திரங்களிலும் திரிபுஷ்கரயோகம், துவிபுஷ்கர யோகம் என்பவற்றிலும் ஊனமாசிகம் செய்தல் ஆகாது.

(துதியை, சப்தமி, துவாதசி என்னும் திதிகளும் கார்த்திகை, உத்தரம், உத்தராடம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி என்னும் நட்சத்திரங்களும் ஞாயிறு, செவ்வாய், சனி என்னும் வாரங்களுமாகிய மூன்றும் கூடுவது திரிபுஷ்கர யோகம். இரண்டு கூடுவது துவிபுஷ்கரயோகம்)

பதினைந்து மாசிகங்களும் செய்ததன்மேல் வருட முடிவிற்றான் சபிண்டீகரணம் செய்தல் வேண்டும். ஆயினும் கர்த்தாவின் அசௌகரி யங்களை உத்தேசித்து ஆசௌச முடிவிற் பதினைந்து மாசிகங்களையும் செய்து முடிப்பர். இப்படிச் செய்தாலும், பின்னரும் உரிய காலத்தில் மாசிகங் களைச் செய்வது சிறந்ததாகும்.

### சோதகும்ப சிரார்த்தம்

இது நீர் நிரம்பிய பாத்திர (உதகம் - நீர்) தானமாகும். இறந்த ஆன்மாவின் தாகம் தீரும் பொருட்டு, இறந்த நாள் முதல் வருடம் முந்நூற்றி அறுபத்தைந்து நாளிலும் இத்தானம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்ய வசதி ஏற்பட்டதால் இப்போது சபிண்டீகரணத்தின்முன் சோதகும்பதானம் நடைபெறும்.

### சபிண்டீகரணம்

பண்டங்களை ஒன்று சேர்த்தல் சபிண்டீகரணம் ஆகும். இதிலே பிதிர் வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும், மாத்ரு வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும் நிமித்த (இறந்தவருக்கு)ருக்கு ஒரு பிண்டமும் இடப்படும். நிமித்த பிண்டத்தைப் பிதிர் பிண்டத்துடன் சேர்ப்பதால் இறந்த உயிர் பிரேதத்தன்மை நீங்கிப் பிதிர்த்தன்மையும் சிவலோகப் பேறும் அடையும். சபிண்டீகரணத்தின் மேற் செய்யும் சிரார்த்தங்களில், நிமித்த பிண்டம் இன்றி பிதிர்ப் பிண்டம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று இட்டுச் செய்ய வேண்டும்.

சபிண்டீகரணம் பார்வண விதானம், ஏகோதிட்ட விதானம் என இருவகைப்படும். பார்வண விதானம் பிதிர்தேவர் மூவரைக் குறித்துச் செய்யப்படுவது. ஏகோதிட்ட விதானம் குறித்த பிதிர், தேவர் ஒருவரைக் குறித்துச் செய்யப்படுவது.

தந்தை, தாய் தந்தையின் சகோதரன், அவன் மனைவி, பேரன், பேத்தி ஆகியோருக்குச் செய்யும் சபிண்டி பார்வண விதானமாய் அமையும். மனைவி, கணவன், சகோதரன், மகன், மகள், மாமன், மாமி, ஆகியோருக்குச் செய்யும் சபிண்டி ஏகோதிட்ட விதானமாய் அமையும். தந்தை தாயாருக்குச் சபிண்டி செய்யும்போது பேரன், பேத்தி உயிருடன் இருந்தால் ஏகோதிட்ட விதானமாகச் செய்ய வேண்டும்.

வீட்டுக்கிரியையைப் பொதுவாகச் சபிண்டீகரணம் என்று சொல்லும் வழக்கு இப்போது உண்டு. ஏகோதிட்டம், பதினைந்து மாசிகம், சோதகும்ப சிரார்த்தம் என்பவற்றைச் செய்த பின்பே சபிண்டீகரணம் செய்ய வேண்டும். இது ஒரு வருட முடிவில் செய்யத்தக்கது. எனினும் இடையில் ஏற்படும் வசதியீனங்களைக் கருதி ஆசௌசம் நீங்கிய மறுதினத்திற் செய்யலாம். இதிலே நாலு பகுதிகளுண்டு.

1. சிவனடியார் பொருட்டு இருவர் - நந்திதேவர், மகாகாளர் (விசுவதேவர்)
2. பிதிர்த்தேவர் பொருட்டு மூவர் - கந்தர், சண்டர், கணாதீசர்
3. அதிதி அப்பியாகதர் இருவர் - முன் அறியப்படாதவர் அப்போது அங்கு வந்தவர்
4. நிமித்தர் - இறந்தவர் பொருட்டு ஒருவர்

இவ்வாறு எண்மர் அமர்த்தப்படுவர். எண்மர் கிடைக்காத போது ஒவ் வொரு பகுதிக்கும் ஒருவராக நால்வரையேனும், விசுவதேவருக்கு ஒருவர் பிதிர்த் தேவருக்கு ஒருவராக இருவரை யேனும் அமர்த்தலாம். ஒருவரே அமையும்போது புயங்களில் விசுவதேவரையும், தோளுச்சியிற் பிதிர்த் தேவர் களையும் பூசிக்கலாம்.

இவர்களைச் சகல உபசாரங்களும் செய்து, வீட்டினுள் அழைத்து வந்து, தர்ப்பை ஆசனத்தில் விசுவதேவர், அதிதி அப்பியாகதரைக் கிழக்கு முகமாகவும், பிதிர்த்தேவர்களை வடக்கு முகமாகவும், நிமித்தரை மேற்கு முகமாகவும் அமர்த்துக. அவர்கள் முன் பாத்திரத்தில் எள்ளும் இட்டு, பூசிக்கவும். பூனூலை வலமாக இட்டு விசுவதேவரையும், இடமாக இட்டுப் பிதிர்த்தேவரையும் பூசிக்க வேண்டும். நிமித்தரையும், பின் அதிதி அப்பியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரையும் பூசித்து வஸ்திரம், அரிசி, காய்கறி தானம், தட்சணை கொடுக்கவும். அவர்கள் முன்னிலையிற் சாணத்தால் மெழுகி, வாழையிலையில் தெற்கு நுனி யாகத் தர்ப்பைகளை வைத்து எள்ளுச் சிதறிக் கர்த்தா, தெற்கு நோக்கி இடது முழந்தாள், இடது கையை ஊன்றியிருந்து, வடக்கிலிருந்து தெற்காக முதல் வரிசையில் பிதிர்வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும், இரண்டாவது வரிசையில் மாதுரு வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும், கிழக்கில் மூன்றாவது வரிசையில் நடுவில் இறந்தவர் (நிமித்தர்) குறித்து ஒரு பணிடமும் இடுக. நிமித்த பிண்டம் சற்று நீண்டதாய், நுனி வளைந்து மற்றப் பிண்டங்களைத் தீண்டுவதாய் அமையும்.

பிண்டத்திற்கு மஞ்சள், சந்தனம், பூவும் சாத்தவும். இறந்தவர் ஆணாகில் வேட்டியும், பெண்ணாகில் சேலையும் பிண்டத்திற்குச் சாத்துக. பிண்டத்திற்கு மேற்கே அன்னம், கறிவகை, தயிர், பாயசம், பலகாரம், பழவகை, வெற்றிலை, பாக்கு என்பவற்றைப் படைக்கவும். இளநீரை, வெட்டித் திறந்து வைக்கவும். பின்னர் தூபதீபம் காட்டி வழிபாடு செய்யவும். கர்த்தாவும் உறவினரும் பூவும் நீருமிட்டு வழிபட்ட பின் திருமுறை பாடி, சரமகவி பாடித் தர்ப் பணம் செய்யவும். நிமித்த பிண்டத்தில் சாத்திய பூவை எடுத்துப் பிதிர்ப்பிண்டத் திற் சேர்க்கவும். இதனால் இறந்தவர் பிதிர்களுடன் சேர்ந்தார் எனக் கொள்ளப் படும். பின்னர் சகல பிதிர் தேவர்களையும் உத்வாசனம் செய்து, பிண்டங் களைப் பசுவிற்குக் கொடுக்கவும். அல்லது சமுத்திரத்தில் விடவும்.

வடக்குத் தெற்காக மூன்று பாத்திரமும், கிழக்கில் ஒரு பாத்திரமும் வைத்து, அவற்றுள் அர்க்கியம் (நீர், சந்தனம், பால், எள்ளு, தர்ப்பைநுனி, பூ) இட்டு மூன்று பாத்திரத்துள்ளும் பிதிர்த்தேவரையும், தனிப்பாத்திரத்தில் நிமித் தரையும் பூசித்து நிமித்தருக்குரிய பாத்திரத்தில் உள்ள அர்க்கிய சலத்தை பிதிர் தேவருக்குரிய மூன்று பாத்திரத்தில் உள்ள சலத்துடன் சேர்க்கும் நிகழ்வு அர்க்கிய சம்யோசனம் எனப்படும்.

பின்னர் குருவிற்குத் தட்சணை கொடுத்து, ஆசீர்வாதம் பெற்ற பின், குரு, கர்த்தாவிற்கு மஞ்சளால் திலகமிட்டு அதன்மேல் அட்சதையை வைத்து விடுவார். குருவை வீட்டுவாசல் வரை சென்று வழியனுப்பி, உறவினர், நண்பருடன் உணவு உண்ணவும்.

### ஆப்திகம் (ஆட்டைத்வசம்)

ஓர் ஆண்டு முடிவிற் செய்யப்படும் சிரார்த்தமாதலால் இது ஆட்டைத் திவசம் எனப்படும். இறந்த திதியிற் செய்யும் இந்தச் சிரார்த்தத்துடன் இறந்த வரைக் குறித்துச் செய்யும் அபரக்கிரியைகள் நிறைவுறும். முக்கியமாக கவனிக்க வேண்டியது இறந்த திதி, பட்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருட சிரார்த்தம்

சிராார்த்தமென்பது சிரத்தையுடன் செய்யப்படுவது எனப் பொருள் கொள்ளப்படும். வருடந்தோறும் இறந்த திதியில் தந்தை தாயாரைக் குறித்துச் செய்யப்படுவது சிரார்த்தமாகும். மகன் தந்தைக்குச் செய்யும் சிரார்த்தத்தில் தந்தை, பேரன், பூட்டன் ஆகிய மூவருக்கு மூன்று பிண்டமும், தமது வம்சத்தில் உள்ள பிதிர்கள் எல்லோருக்குமாக ஒரு பிண்டமும் இடல் வேண்டும். தாயாருக் குச் சிரார்த்தம் செய்யும்போது தாய், தகப்பனின் தாய், பேரனுடைய தாய் ஆகிய மூவருக்கு மூன்று பிண்டமும் தமது வம்சத்தவருக்கு ஒரு பிண்டமும் இடல் வேண்டும்.

சிரார்த்தம் அன்ன சிரார்த்தம், ஆடசிரார்த்தம், இரணிய சிரார்த்தம், தருப்பண ரூப சிரார்த்தம் என நான்குவகைப்படும். சிரார்த்தம் செய்ய மறந்தாலோ அல்லது திதி தெரியாமல் இருந்தால் அம்மாதத்தில் வரும் அமா வாசையில் தர்ப்பணம் செய்யலாம். அல்லது புரட்டாதி மாதத்தில் வரும் மாளய பட்சத்தில் செய்யலாம். சிரார்த்தம் செய்ய முடியாவிடில் ஆலயம் சென்று மோட்ச அர்ச்சனை செய்து வழிபடலாம். படையலுக்குச் சக்கரைச் சாதம், பழங்கள், சோறுகறி, காய்ச்சிய பால், பலகாரம் வைக்க வேண்டும்.

## அன்ன சிரார்த்தம்

தம் மரபிலோ அன்றித் தம்மில் உயர்ந்த மரபிலோ உள்ள தீட்சை பெற்றவரை அழைத்து நிமித்தம் தானத்திலிருத்தி, குறித்த தானத்திற்கு உரியவராகப் பூசித்து, அமுது படைத்து, உண்பித்துச் செய்யும் சிரார்த்தமாகும். இதில் அன்னம், எள் பானீயம் (நீர்) தயிர், பால், தேன், நெய், வாழைப்பழம் ஆகிய பொருட்கள் சேர்த்துப் பிண்டமிடல் வேண்டும்.

## ஆம சிரார்த்தம்

உணவிற்குப் பதிலாக அரிசி, காய்கறி வகைகளைப் படைத்துச் செய்யும் சிரார்த்தமாகும். இதில் அரிசிமா, உழுந்துமா, எள், பால், தயிர், தேன், வாழைப்பழம் ஆகிய பொருட்கள் சேர்த்து உருட்டிப் பிண்டமிடல் வேண்டும். இவ்வெட்டுப் பொருட்களும் அட்டாங்கமெனப்படும்.

### இரணிய சிரார்த்தம்

அன்ன சிரார்த்தம், ஆமசிரார்த்தம் செய்ய வசதியில்லாத போதும் தகுதியானவர் கிடைக்காத போதும் பணத்தை வைத்துச் செய்யப்படுவது இரணிய சிரார்த்தமாகும்.

### தருப்பணரூப சிரார்த்தம்

இது அமாவாசையிற் செய்யப்படுவதாகும். அன்ன சிரார்த்தத்தில் அன்னபிண்டமும், ஆமசிரார்த்தத்தில் ஆமபிண்டமும் இடல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னசிரார்த்தத்தில் ஆமபிண்டமும், ஆமசிரார்த்தத்தில் அன்னபிண்டமும் இடுதல் குற்றமாகும்.

அன்னசிரார்த்தம் அபராணதிற் செய்தல் வேண்டும். ஆமசிரார்த்தம் சாங்கவகாலத்திற் செய்து, போசனம் அபராணத்திலும் செய்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| பிராதக்காலம் | - | சூரிய உதயம் முதல் ஆறுநாழிகை வரை |
| சங்கவ காலம் | - | அதன்மேல் பன்னிரண்டு நாழிகைவரை |
| மத்தியானம் | - | அதன்மேல் பதினெட்டு நாழிகைவரை |
| அபராணம் | - | அதன்மேல் இருபத்திநாலு நாழிகைவரை |
| சாயான்னம் | - | அதன்மேல் முப்பது நாழிகைவரை |

சூரிய உதயம் காலை ஆறுமணியாயின்

| | | |
|---|---|---|
| பிராதக்காலம் | - | காலை 6.00 - 8.24வரை |
| சங்கவ காலம் | - | அதன்மேல் - 10.48வரை |
| மத்தியானம் | - | அதன்மேல் பகல் 1.12 வரை |
| அபராணம் | - | அதன்மேல் மாலை 3.36வரை |
| சாயான்னம் | - | அதன்மேல் மாலை 6.00வரை |
| சிவபெருமான் | - | அபிஷேகத்தாலும், |
| விஷ்ணு | - | அலங்காரத்தாலும், |
| பிதிர்கள் | - | தர்ப்பணத்தாலும் மகிழ்வர். |

**சிரார்த்தவகைகள்**

| | | |
|---|---|---|
| நித்திய சிரார்த்தம் | - | நாள்தோறும் பிதிரைக் குறித்துச் செய்யப்படும் தர்ப்பணம் |
| நைமித்திய சிரார்த்தம் | - | தந்தை, தாயார் இறந்த மாதம், திதியில் வருடம் தோறும் விதிப்படி செய்வது. |
| காமிய சிரார்த்தம் | - | அமாவாசை, சூரியகிரகணம், சந்திர கிரகணம், விதிபாதயோகம், உத்த ராயணம், சித்திரை விஷீ மாதப் பிறப்பு, வைகாசி வளர் பிறைத்திருதியை, கார்த்திகை வளர்பிறை நவமி, புரட்டாதி தேய் பிறைத் திரயோதசி, மாசி அமாவாசை ஆகிய தினங்களிற் புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, பிதிர்தர்ப்பணம் செய்து அதிதிகள் சுற்றத்தாரோடு போசனம் செய்வது. இது தீர்த்த சிரார்த்த மெனப்படும் |
| விருத்தி சிரார்த்தம் | - | இது நாந்தி சிரார்த்தம் என்றும் கூறப்படும். சீமந்தம், சாதக கர்மம், நாமகரணம், அன்னப் பிராசனம், விரதம், விவாகம், கிருகாரம்பம், |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருகப்பிரவேசம் போன்ற சுபகருமங்களில், பிதிர் தேவர்களைக் குறித்துச் செய்யும் சிரார்த்தம் விருத்திச் சிரார்த்த மாகும். பிதிர்களின் ஆசீர்வாதம் பெறும் பொருட்டுச் செய்யும் இச்சிரார்த்தம் மங்கள சிரார்த்தம் எனவும் கூறும்.

காயா சிரார்த்தம் - காயாவில்செய்து பிண்ட மிட்டு பிதிர்களைக் திருப்திப் படுத்துவதால் ஏழு கோத்திரத்தில் உள்ள நூற்றியொரு குலமும் விருத்தியாகும். (பிதாவின் குலம் இருபது, மனைவி குலம் பதினாறு, சகோதரி குலம் பன்னிரண்டு, மகன் குலம் பதி னொன்று, பிதாவின் சகோதரி குலம் பத்து, மாதாவின் சகோதரி குலம் எட்டு, ஆகக்குலம் நூற்றொன்று).

காசி காஞ்சி, மாயை, மதுரை, அவந்தி, அயோத்தி, துவாரகை ஆகிய முத்தித்தலம் ஏழிலும் ஏனைய புண்ணியதலங்களிலும் சிரார்த்தம் செய்வது மிகுந்த புண்ணியமாகும்.

## ஆசௌக காலத்தில் சிரார்த்தம் வரின்

சனன மரண ஆசௌசத்திற் சிரார்த்த தினம் வந்தால் ஆசௌசம் நீங்கும் நாளில் சிரார்த்தம் செய்தல் வேண்டும். விதவை தான் வீட்டுக்கு விலக்காயிருக்கும்போது, தன் கணவனுடைய சிரார்த்தம் வந்தால், ஐந்தாம் நாள் சிரார்த்தம் செய்யக் கடவுள். சிரார்த்தத்திற்குப் பாகம் பண்ணத் தொடங்கிய பின், ஆசௌசம் வந்தால் அது கர்த்தாவைப் பற்றாது.

## சிரார்த்தத்திற்கு ஆகுந்திரவியங்கள்

நெல்லரிசி, கோதுமை, யவம் (நெல்) சிறுபயறு, உழுந்து, எள்ளு, சர்க்கரை, வெல்லம், தேன், நல்லெண்ணெய், பசுப்பால், பசுத்தயிர், பசுநெய், சிகைக்காய், மிளகு, சீரகம், மஞ்சள், கடுகு, உப்பு, புளி, வாழையிலை, வாழைத் தண்டு, வாழைக்காய் வாழைப்பழம், மாங்காய், மாம்பழம், பலாக்காய், பலாப்பழம், தேங்காய், இளநீர், பாகற்காய், முள்ளிக்காய், கெக்கரிக்காய், வெள்ளரிக்காய், புடலங்காய், அவரைக்காய், நெல்லிக்காய், எலுமிச்சம்பழம், சிறு கிழங்கு, பெருவள்ளிக்கிழங்கு, இஞ்சிக் கிழங்கு, கீரை, முல்லையிலை, முசுட்டையிலை, காரையிலை, பிரண்டையிலை, சேப்பந்தண்டு, சேப்பங்கீரை, சேப்பங்கிழங்கு, கருவேப்பிலை, வெற்றிலை, பாக்கு, ஏலம், சுக்கு, கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி. (மிளகாய், கத்தரிக்காய் பூசணிக்காய், பயிற்றங்காய் கொடுக்கலாமென சில நூல்கள் கூறுகின்றன)

## சிரார்த்தத்திற்கு ஆகாத திரவியங்கள்

கடலை, துவரை, வெண்கடுகு, பெரும்பயற்றங்காய், பீர்க்கங்காய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திக்காய், முருக்கங்காய், பூசணிக்காய், கத்தரிக்காய், சுரக்காய், வாழைப்பூ, முள்ளங்கி, வெங்காயம், வெள்ளைப்பூடு, எருமைப்பால், எருமைத்தயிர், எருமைநெய், ஆட்டுப்பாய், ஆட்டுத்தயிர், ஆட்டுநெய்.

**சிராா்த்தத்திற்கு ஆகும் பத்திர புஷ்பம்**

வில்வம், துளசி, அறுகு, சம்பகப்பூ, தாமரைப்பூ, புன்னைப்பூ, முல்லைப்பூ, நந்தியாவட்டைப்பூ, மரிக்கொழுந்து, வெட்டிவேர், எட்டிப்பூ.

**ஆகாத புஷ்பம்**

மகிழம்பூ, தாழம்பூ, அலரிப்பூ, சிறுசண்பகப்பூ, கர்த்தாவும் சிரார்த்தத் தின் பொருட்டு வரிக்கப்பட்டவரும் சிரார்த்த தினத்திலும் முதற்றினத்திலும் மறு தினத்திலும் சவரம் செய்துகொள்ளுதல், மீண்டும் புசித்தல், வழிநடத்தல், பாரஞ் சுமத்தல், கோபம், பொய், காமம் இவைகள் தவிர்த்து விரத நியம முடையவராய் இருத்தல் வேண்டும். விரத நியமம் தப்பிப் புணர்ச்சி முதலிய வற்றைச் செய்தவர் நரகத்தில் வீழ்ந்து வருந்துவர். கர்த்தா இம்மூன்று தினத் திலும் எண்ணெய் தேய்த்துக் கொள்ளும், பரான்மை புசித்தலும், வெற்றிலை பாக்கு உண்ணலும், மருந்து உண்ணலும் ஆகாவாம். சிரார்த்த தினத்தில் வீட்டிலே தயிர் கடைதலும் நெற்குற்றுதலும், பிச்சை போடுதலும், எண்ணெய், நெல் முதலிய பொருட்களைக் கொடுத்தல், வாங்குதலும் ஆகாவாம்.

சிரார்த்த தினத்திலே, திருகோவிலிலே, கடவுளுக்குத் தன்னால் இயன்றமட்டும் அபிஷேகம், பூஜை, திருவிளக்கேற்றுதல் முதலியன செய்தல் வேண்டும். பசுவிற்குப் புல்லுப்போடல் வேண்டும்.

சிரார்த்தம் நடக்கும்போது வேதத்தையும் திருமுறைகளையும் புராண இதிகாசங்களையும் தரும சாத்திரத்தையும் சிரார்த்தம் வாங்குவோருக்குக் கேட்கும்படி படிப்பித்தல் வேண்டும். இது பிதிர்களுக்கு மிகப் பிரியமாகும்.

சிரார்த்தத்திலே கண்ணீர்விடுதலும், கோபித்தலும், பொய்சொல்லு தலும், துரிதஞ் செய்தலும், சிந்திய அன்னத்தைக் காலாலே மித்தலும், இலை யிலே அன்னத்தைத் தூவிப் பரிமாறலும் ஆகாவாம். சிரார்த்தமேற்பவர் நன்று, தீது என்று பேசாது திருப்தியோடு ஏற்றல் வேண்டும்.

சிரார்த்தத்திற்குப் பொருள் இல்லாதவன் காய், கனி, கிழங்கு, எள் இவையேனும் சற்பிராமணருக்குக் கொடுத்து நமஸ்காரம் செய்து, திலதர்ப் பணம் பண்ணிக் (திலம் - எள்ளு) கொண்டு தான் திருப்தியாகப் போசனம் பண்ணல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாளயம்**

மாளயம் என்பது பிதிர் கர்மமாகும். இது மஹாளயம் என்று பெயர் பெறும். இது ஒரு பொது சிரார்த்த (திவசம்) மாகும்.

புரட்டாதி மாத அபரபக்கப் பிரதமை முதல் அமாவாசை வரையுள்ள காலம் மாளய பட்சமாகும். பிதிர்களைத் திருப்திப் படுத்தவும் அவர்கள் நற்கதி யடையவும் பிதிர்க்கருமங்கள் செய்ய வேண்டும். இல்லறத் தானுக்குரிய கருமங்களிற் பிதிர்க்கடனும் ஒன்று. ஐவேள்விகளில் பிதிர்யக்ஞமும் (பிதிர் வேள்வி) ஒன்று.

**'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க நானென்றாங்**
**கைம்புலத்தா றோம்பறலை'**

என்பது திருக்குறள். பிதிர்களின் உறைவிடம் தென்திசை. ஆதலால் தென்புலத்தார் என்று பெயர் பெறுவர்.

சூரியன் தெற்கு நோக்கிச் சஞ்சரிக்கும் தெட்சணாயன காலத்தின் நடுப் பகுதி புரட்டாதி மாதமாகும். இக்காலம் சூரியன் பூமிக்கு நேரே நிற்கும் காலம். சந்திரனும் (அபரபக்கத்தில்) தென் பாகத்திற் பொருந்தியிருக்கிறது. இக்காலம் பிதிர் கருமங்களுக் கேற்றதாகக் கொள்ளப்படும்.

ஒருவர் இறந்த தினத்திற் சிராா்த்தம் (திவசம்) செய்தல் வேண்டும். இறந்த தினம் தெரியாவிட்டால் அந்த மாதத்தில் அமாவாசை அன்று செய்தல் வேண்டும். அல்லது மாளய பட்சத்திற் செய்கொள்ளலாம். தெரிந்தோ தெரியாமலோ சிராா்த்தத்தைச் செய்யாது விட்டவர்கள், மாளய பட்சத்திற் பிதிர்க் கருமம் செய்தல் வேண்டும்.

இந்தப் பட்சம் முழுவதும் பிதிர்க்கருமம் செய்தால் வருடம் முழுவதும் செய்த பலன் கிடைக்கும். பிரதமையில் தனசம்பத்தும் துவிதியையில் பிரஜாலாப மும், திருதியையில் வளர்ச்சி லாபமும், சதுர்த்தசியில் சத்துரநாசமும், பஞ்சமி யின் சம்பத்தும், சஷ்டியிற் புகழும், சப்தமியில் கணாதி பத்தியமும், அட்டமியிற் சிறந்த புத்தியும், நவமியில் ஸ்திரீசம்பத்தும், தசமியில் இஷ்டசித்தியும், ஏகாதசி யில் வேதசித்தியும், துவாதசியில் பிரஜாவிருத்தியும், தியோதசியிற் பசு விருத்தியும், சதுர்த்தியிற் புஷ்டியும் அமாவாசையில் தீர்க்க ஆயுளும் கிடைக்கும். யந்திரங்களால் இறப்போருக்குச் சதுர்த்தசியிற் பிதிர்க்கருமம் செய்வது சிறந்தது.

இப்பட்சத்தில் வரும் பரணி அட்டமி, கஜச்சாயை எனப்படும். கஜச்சாயை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்படுவது புரட்டாதி மாதத்தில் எந்த வாரத்திலாவது மக நட்சத்திர மும் திரயோதசித் திதியும் கூடிவருவது இது ஒரு புண்ணிய காலமாகும். இக்காலத்திற் செய்யும் கருமத்திற்கும் பலன் அதிகம்.

பிதிர்க் கருமங்கள் ஆற்றச் சிறந்த தலங்களாக அயோத்தி, மதுரை, மாயாபுரி, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை, என்பன அமைந்துள்ளன. காயாவிற் செய்யப்படும் சிரார்த்தம் மிகவும் விசேடமானதாகும். திரயோதசியிற் செய்யும் சிரார்த்தம் காயாசிரார்த்தத்தையொக்கும்.

நாம் அனுப்பும் தபாற் காசுக் கட்டளை போன்றவற்றை தபாற் கந்தோரில் இருப்பவர்கள் உரியவர்களிடம் கொண்டு சென்று கொடுப்பர். இதுபோலப் பிதிர்க்கருமத்திற் செய்யப்படும் தர்ப்பணம், தானம் முதலியவற்றின் பலன்களை உரியவர்கள் இருப்பிடம் அறிந்து அவர்களிடம் சேர்ப்பிப்பர். பிதிர்த் தேவதைகள் ஸ்கந்தர், சண்டர், கணாதீதர் என்போர் பிதிர்த் தேவதைகளாவர். சமய விசேட நிர்வாண தீட்சிதருக்குச் சாந்தர், சதாசிவர், ஈசர் என்போர் பிதிர் தேவைகளாகும். பிதாவின் உயிர் ஸ்கந்த பதத்தில் ஸ்கந்த சொரூபமாகவும், பாட்டனுடைய உயிர் சண்டபதத்தில் சண்டசொரூபமாகவும், முப்பாட்ட னுடைய உயிர் கணாதீதபதத்திற் கணாதீத சொரூபமாகவும் இருக்கும். இக்காலத்தில் விரதமமிருந்து பிதிர்த்தர்ப்பணம், தானதர்மம், சாதுக்கள், அடியவர், ஏழைகள் ஆகியோருக்கு அமுதளித்தல் போன்றன செய்தல் வேண்டும். அபரக் கிரியை யாவும் இடப்புறமாகவும் பாதத்திலிருந்து சிரசுவரை பரியந்தமாகவும் செய்ய வேண்டும். கர்த்தா தெற்கு நோக்கியே கிரியைகள் இறந்தவர்களுக்குக் காட்டும் தூபம், தீபம் செய்ய வேண்டும். யாவும் இடப்புறமாகச் செய்யவேண்டும். தலை வாழையிலையின் நுனி தெற்கே பார்க்க வேண்டும். அபரக் கிரியைகளின் போது தோரணங்கள் கட்டப்படும் முறைகள்.

**மரண வீட்டில் அபரக் கிரியைகளைச் செய்வதற்கு வேண்டிய பொருட்களின் விபரம்**

இந்நாளிற் கிரியை செய்யும்போது சைவக் குருக்களே இவற்றைக் கொண்டு வருவார்.

| | |
|---|---|
| நெல்லு | விபூதி |
| பச்சை அரிசி | சந்தனம் |
| பயறு | குங்குமம் |
| உழுந்து | அபிஷேகக்கூட்டு |
| எள்ளு | மஞ்சள்மா |
| தேங்காய் | அரிசிமா |
| தேங்காயெண்ணெய் | அபிஷேகத் திரவியம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பன்னீர் | குடம் 1 |
| நெய் | குத்துவிக்கு |
| தேன் | உரல், உலக்கை |
| நல்லெண்ணெய் | அறுகம்புல்லு |
| அரப்பு | மாவிலை, வாழையிலை |
| லவரந்தர் | கோசலம், கோமயம் |
| அத்தர் | பால், இளநீர் |
| ஊதுபத்தி | மான்தோல் |
| சாம்பிராணி | தட்டம் |
| தசாங்கம் | வேட்டி, சால்வை (கிரியை செய்வோருக்கு) |
| நெற்பொரி | வாழைப்பழம் |
| நவதானியம் | எலுமிச்சம்பழம் |
| கழிநூற் பந்து | பழவகைகள் |
| விளைவுகூடம் | பாக்கு |
| சமித்துக்கட்டு | வெற்றிலை |
| பட்டுத்துண்டு | (இறந்தவருக்கு வேட்டி சால்வை அல்லது சேலை, குருக்கள் வேட்டி, சால்வை சட்டை) |
| கும்பவேட்டி 1 | கத்தி, தோரணம், கயிறு |
| முட்டி 2 | தீப்பெட்டி |
| சட்டி 2 | ௱ வெள்ளைத்துணி (புதியது) |
| செம்பு 13 | |

இப் பொருட்களைக் கிரியை செய்யும் குருக்களும் கொண்டு வருவார். அவரிடம் ஆலோசித்துச் செய்யவும்.

## அந்தியேஷ்டிக் கிரியைகளுக்குத் தேவைப்படும் பொருட்கள்

| | |
|---|---|
| நெல்லு | |
| பச்சை அரிசி | 2 தானத்திற்கு அரிசி, மரக்கறி |
| பயறு | செங்கல் - 1 |
| உழுந்து | வைக்கோல் 1 கட்டு |
| எள்ளு | கத்தி |
| தேங்காய் 20 | தீப்பெட்டி |
| கழிநூல் பந்து | வெற்றிலை பாக்கு |
| பஞ்சவர்ண நூல் | வாழைப்பழம் |
| விபூதி | எலுமிச்சம்பழம் |
| குங்குமம் | பழவகைகள் |
| சந்தனம் | அறுகம்புல்லு |
| பன்னீர் | பால், தயிர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிஷேகத் திரவியம்
நவதானியம்
நெற்பொரி
நெய்
சமித்துக்கட்டு
ஊதுபத்தி
விளைவுகூடம்
சாம்பிராணி
அரிசிமா
மஞ்சள்மா
நல்லெண்ணெய்
அரப்பு
குருக்கள் வேட்டி, சால்வை
கும்பவேட்டி
வேட்டி
பட்டுத்துண்டு
சிகப்பு பச்சை
பச்சை மா (புல்லாந்தி
இலையை உலர்த்தி இடித்து
எடுப்பது)

சிவப்புமா (செங்கல் தூள்)
கரிமா (கரியில் இடித்து எடுப்பது

இளநீர்
வாழையிலை
மாவிலை
முட்டி 2
சட்டி 1
உரல், உலக்கை
தேய்காயெண்ணெய்
சில்லறைப்பணம்
செம்பு 12
குடம் 1
குத்துவிளக்கு
தட்டம்
மான்தோல்
பூ மாலை, சரப்பந்து
அமுது
பலகார வகைகள்
1படி பச்சை அரிசி பொங்கல்
3படி அரிசியிற் சோறு

கறிவகை
தென்னோலைத் தோரணம்
கயிறு
1m வெள்ளைத் துணி (புதியது)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருட சிரார்த்தத்திற்குத் தேவைப்படும் பொருட்கள்

மாவிலை
அறுகம்புல்
பூக்கள்
வாழைப்பழம்
எலுமிச்சம்பழம்
சக்கரை சிறியது
இஞ்சி 1 துண்டு
கறுப்பு எள்
நல்லெண்ணெய் 1 போத்தல்
தலைவாழையிலை 5
நெய்
தேன்
கற்பூரம்
ஊதுபத்தி
இளநீர்
பால்
தயிர்
தேங்காய் 3
பச்சை அரிசிமா
சிறிது உளுத்தம் மா, மஞ்சட்தூள்
ஐயருக்கு வேட்டி சால்வை
தானத்திற்கு அரிசி, மரக்கறி, உப்பு, புளி, பருப்பு, மிளகாய்த்தூள்
அரப்பு
சாம்பிராணி
விபூதி
சந்தனம்
குங்குமம்
நூற்பந்து

வாசலில் நிறைகுடம் குத்துவிளக்கு வைக்க வேண்டும். தர்ப்பணம் செய்யுமிடத்தில் படம்வைத்து மாலை அணிவித்து ஒரு குத்துவிளக்கு ஏற்றி வைக்கவும். கும்பம் வைக்க ஒரு செம்பு, பச்சை அரிசி, கம்பமாலை, பிண்டத்திற்கு ஒரு மாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குத்து விளக்கில் தீபம் ஏற்றுவதன் பலன்கள்

ஒருமுகம் ஏற்றினால் - மத்திம பலன் கிடைக்கும்
இரு முகம் ஏற்றினால் - குடும்ப ஒற்றுமை பெருகும்
மூன்று முகம் ஏற்றினால் - புத்திர சுகம் தரும்
நான்கு முகம் ஏற்றினால் - பசு, பூமி, பாக்கியம் தரும்
ஐந்து முகம் ஏற்றினால் - செல்வம் பெருகும்

குத்து விளக்கினைத் திங்கள், வியாழன் மாலை வேளையில் தேய்த்துச் சுத்தம் செய்ய வேண்டும். மாலையில் வீட்டிற் பூஜை அறையில் அகல்விளக்கு ஏற்றிப் போதுமான எண்ணெய் விட்டு விளக்கு ஸ்தோத்திரம் கூறவேண்டும். வீட்டில் உள்ள குழந்தைகளையும் உடன் வைத்துக் கொள்ள வேண்டும். இதனால் வாழ்வில் எல்லா வித துன்பங்களும் நீங்கும்.

தீபம் எரிந்து கொண்டிருக்கும் பொழுது விளக்கை வாயால் ஊதி அணைப்பதோ, திரியைக் கையால் நசுக்கி அணைப்பதோ, கூடாது. மெல்லத் திரியைப் பின்னுக்கு இழுத்து அது எண்ணெய்க்குள் அமிழ்ந்து சமனப்படுமாறு செய்ய வேண்டும். இப்படிச் செய்ய முன் இரண்டு சொட்டுப் பாலை, தீபத்தின் இரு புறமும் வைக்க வேண்டும்.

எரியும் விளக்கு, கற்பூரம், மெழுகுவர்த்தி ஆகியவற்றை வாயால் ஊதி அணைக்கக் கூடாது. ஊதுபத்தியைக் கொளுத்தினால் அது எரியும் பொழுது அதை அணைக்க வாயால் ஊதக்கூடாது. திருவிளக்கு ஏற்றும் பொழுது ஒரு தட்டில் அரிசியை நிரப்பி அதன் மேல் விளக்கினை வைத்து மஞ்சள், குங்குமம், பூ வைத்து தீபம் ஏற்றித் தீபவழிபாடு செய்தல் சிறப்பு.

நீர் நிரம்பிய பாத்திரத்தைப் பூஜை அறையில் வைப்பது சிறப்பு. தாமரை நூல் விளக்கேற்றி வழிபட்டால் அதன் ஆன்மிக சக்தி ஆறுமணி நேரம் நீடிக்கும். பசுநெய் தீபம் ஏற்றினால் அத்தீபம் குளிர்ந்த பின் 12 மணிநேரம் அதன் ஆன்மிக சக்தி நீடிக்கும்.

வீட்டில் நறுமணம் தரும் ஊதுபத்திகளை ஏற்றி வைத்தால் தீய எண்ணங்கள், தோஷங்கள், திருஷ்டி, காற்று கருப்பு ஆகியவை வீட்டை நெருங்காது. இரண்டு ஊதுபத்தி ஏற்றி வைத்தால் அதன் ஆன்மிக சக்தி மூன்று மணிநேரம் வீட்டில் நிலவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் விளக்கேற்றியதும் வாசல் நிலையின் மேற் சுத்தமான குங்குமத்தைத் (மஞ்சள், குங்குமம்) தினமும் இடுவது சிறப்பு. இதனால் வீட்டிற்குள் எந்தத் துர்ததேவதைகளும் நுழையமுடியாது.

காலையில் குளித்து விட்டு குத்து விளக்கின் 5 முகங்களையும் ஏற்றிக் கடவுள் வழிபாடு செய்வது எல்லாச் சுகங்களையும் தரும். பெண்கள் மாலையில் வீட்டில் விளக்கேற்றி வைத்தவுடன் வீட்டை விட்டு வெளிக்கிளம்பிச் செல்லக் கூடாது.

## விளக்கேற்றத்தக்க எண்ணெய்கள்

எல்லாத் தேவதைகளுக்கும் நல்லெண்ணெயால் விளக்கேற்ற வேண்டும். குலதெய்வத்திற்கு வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், பசு நெய் ஆகிய மூன்றும் கலந்து விளக்கேற்ற வேண்டும்.

ஸ்ரீமகாலெட்சுமிக்குப் பசு நெய்யால் விளக்கேற்ற வேண்டும்.
ஸ்ரீ நாராயணனுக்கு நல்லெண்ணெய் விளக்கேற்ற வேண்டும்.
ஸ்ரீ ருத்திரருக்கு இலுப்பெண்ணெய் விளக்கேற்ற வேண்டும்
ஸ்ரீ பராசக்திக்கு இலுப்பெண்ணெய், தேங்காய் எண்ணெய், வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய், பசுநெய் ஆகிய ஐந்தையும் கலந்து விளக்கேற்ற வேண்டும்.

நல்லெண்ணெய் விளக்கேற்றினால் சகல பீடைகளும் விலகும். கடலை எண்ணெய் விளக்கேற்றக் கூடாது. அப்படி ஏற்றினால் கடன் தொல்லை, பயம், பீடை, துக்கம் ஏற்படும்.

## படுத்து உறங்குதல்

**"தன் ஊர் கிழக்கு தான்**
**தங்கின ஊர் மேற்கு என்றும்**
**வேட்டகம் தெற்கு என்றும் உனக்குச் சொன்னேன்**
**வேண்டா ஊர் வடக்கு"**

**–இது பழம்பாடல்**

எக்காரணத்தைக் கொண்டு வடக்குப் பக்கம் தலை வைத்துப் படுக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரக் கோவையிலிருந்து ஒரு பாடல்

**"கிழக்குங் கால் கைகூப்பித் தெய்வம் தொழுது**
**வடக்கொடு கோணந் தலைசெய்யார் மீழ்கோழ்**
**உடல் கொடுத்துச் சேர்தல் வழி"**

படுத்து உறங்கும் பொழுது இறைவனைக் கைகூப்பித் தொழ வேண்டும். இரண்டு திசைகள் சேரும் மூலை வடக்கில் தலைவைத்துப் படுக்கக்கூடாது. மேற்போர்வையை உடல் முழுவதும் போர்த்திக் கொண்டு உறங்குவது நல்லது.

தான் வசிக்கும் வீட்டிற் கிழக்கே தலைவைத்து இடப்புறம் உடல் கீழே இருக்குமாறு அல்லது மல்லாந்து படுக்கவும். இதனால் காந்த சக்தியானது வடபுறமிருந்து முதுகுத் தண்டு, வலது கைப்பகுதி, மூட்டு, தோள்ப்பட்டைக்கு வரும். இதனால் முதுகுத் தண்டு வலுவடையும். கை, கால்களில் வீக்கம், வலி வராது. கூன் விழாது.

இடது புறம் படுப்பதால் இதயம் சுகமாக இயங்கும். சுவாசம் இலகுவாக வெளிவரும். மல்லாந்து படுத்து அதிகநேரம் தூங்கக் கூடாது. இது சீரணத் திற்கு இடையூறாக இருக்கும். சிறுநீரகங்கள் மீது அழுத்தம் ஏற்படுத்தும். ஆண்களுக்கு கனவு மூலம் விந்து வெளியாகும்.

பகலில் தூங்கக் கூடாது அது ஆயுளைக் குறைக்கும். உடல் பெருந்து விடும். பகல் உணவிற்குப் பின் சற்று ஓய்வெடுத்துக் கொள்ளலாம். இதனால் டென்ஷன் குறையும். ஆனால் அது நல்ல உறக்கமாக இருக்கக் கூடாது.

இடது புறமாக ஒருக்களித்துக் கால்களைச் சுருட்டி மடக்காமல் உறங்க வேண்டும். இதயத்திற்கும் அதன் பாகங்களுக்கும் தேவையான பிராண வாயுவும். இரத்தமும் சுலபமாகக் கிடைக்க இடது புறம் ஒருக்களித் துப்படுத்தால் உதவுகிறது. எளிதில் மலம் கழியவும் வழிசெய்கிறது.

நாம் விடும் மூச்சுக் காற்று இடது நாசியில் (மூக்கில்) ஓடும் போது அதற்குச் சந்திரகலை என்றும், வலது நாசியில் ஓடும் போது சூரியகலை என்றும் கூறப்படுகிறது. சந்திரகலை - குளிர்ச்சி, சூரியகலை - உஷ்ணம்.

நாம் வலது புறம் ஒருக்களித்துப்படுத்தால் இடது நாசியிலும், இடது புறம் ஒருக்களித்து படுத்தால் வலது நாசியிலும் சுவாசம் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடது புறம் சாய்ந்து படுக்கும் பொழுது சூரியகலையின் சுவாசம் உடலுக்கு உஷ்ணத்தைக் கொடுத்து உண்ட உணவு எளிதிற் சீரணமாக வகை செய்கிறது. களைப்பையும் நீக்குகிறது.

வலதுபுறம் சாய்ந்து படுத்தாற் சந்திரகலை சுவாசித்தால் உடலிற் குளிர்ச்சி ஏற்பட்டு உண்ட உணவு சீரணமாகத் தாமதமாகிறது. உடலில் மந்தத் தன்மையும், தலைவலியும் ஏற்படும். வெறுந்தரையிற் படுக்கக்கூடாது. பாய் போன்ற விரிப்பின் மீது தான் படுக்க வேண்டும். மனதையும் உடலையும் இளைப்பாற்றுவது உறக்கம் மட்டும் தான். உறக்கத்திற்கு ஏற்ற காலம் இரவு தான். இரவில் பின்பகுதி உறங்குவதைக் காட்டிலும் முன்பகுதி உறங்குவது ஆரோக்கியத்திற்கு நல்லது.

கழுத்திற்கும், தோளுக்கும் மத்தியிலிருக்கும் அளவினதாகிய உயரத்தில் இலவம்பஞ்சு தலையணையைத் தலைக்கு வைத்துப்படுத்தால் கால் முதல் தலைவரை உள்ள எந்தப் பக்கத்து நரம்புகளும் சமனாக இருக்கும். சிரசைப் பற்றிய நோய்கள் தீரும்.

தலையணையை மிக உயரமாக வைத்துக் கொள்ளக் கூடாது. இரவில் முன்பாகத் தூங்கி அதிகாலையில் எழுவதே உடலுக்கும், மனதிற்கும் நன்மையைத் தரும். சாப்பிட்ட உடன் தூங்கக்கூடாது. சாப்பிட்டுக் குறைந்தது இரண்டு மணி நேரம் கழித்தே உறங்க வேண்டும்.

சிறிய குழந்தைகள் பதினைந்து முதல் இருபது மணி நேரம் உறங்கலாம். குழந்தைகள் பன்னிரெண்டு மணிநேரம் உறங்கலாம். இளைஞர்கள் எட்டு மணி நேரம் உறங்கலாம். முதியோர்கள் ஆறுமணி நேரம் உறங்கலாம்.

இரவிற்படுப்பதற்கு முன் கட்டாயம் சிறுநீர் கழித்துவிட்டு கை, கால்களை கழுவிக் கொண்டு அது காய்ந்த பின்னரே படுக்க வேண்டும். எக் காரணத்தைக் கொண்டும் கால், கை, ஈரம் காயும் முன்பாகப் படுக்கக் கூடாது.

## தினசரி வாழ்வில் உறக்கம்

ஒவ்வொருவரும் கடுமையாக உழைப்பது போல் தேவையான அளவு உறங்க வேண்டும். குறைந்தது ஆறு மணிமுதல் அதிகம் எட்டு மணி நேரம் உறங்கலாம். எனினும் சூரிய உதயத்திற்கு முன் படுக்கை விட்டு எழ வேண்டும். அதற்குத் தகுந்தாற் போல் இரவில் தூங்க ஆரம்பிக்கும் நேரத்தை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலருக்கு படுத்தவுடன் தூக்கம் வராது. அரைமணி நேரம் ஒரு மணி நேரம் ஆகும். தூக்க மாத்திரை போட்டுக் கொள்பவர் பலர். தொடர்ந்து தூக்க மாத்திரை சாப்பிடுவதன் மூலமும் தூக்கம் வராமல் தவிப்பவர் பலர். உடலுக்கும், மூளைக்கும் சேர்ந்தாற் போல் ஓய்வு கிடைக்க வழிசெய்வது உறக்கம்.

உறக்கம் நமக்குப் புத்துணர்ச்சி அளித்து மீண்டும் வேலை செய்யச் சக்தியையும், உற்சாகத்தையும் அளிக்கிறது. தேவையில்லாத எண்ணங்கள், பலத்த சிந்தனை, தூக்கம், பயம் போன்ற உணர்ச்சிகள் தூக்கத்திற்கு எதிரிகள்.

படுக்கச் செல்லும் முன்பாக திகிற் காட்சிகள், சண்டைக் காட்சிகள் ஆகியவற்றை டெலிவிஷனிற் பார்க்கக்கூடாது. பிறருடன் வாக்குவாதம் சண்டையிட்டு விட்டு உடனே படுக்கக்கூடாது.

உறங்கும் இடம் காற்றோட்டம் உள்ளதாயும், எவ்வித சத்தங்களும் தாக்காத இடமாக இருக்க வேண்டும். மெல்லிய இசை கேட்பதும் உறக்கத்தை உண்டு செய்யும். இரவில் வெது வெதுப்பான நீரிற் குளித்து விட்டுப் படுத்தாலும் உறக்கம் வரும்.

குளிக்க இயலாவிட்டால் கை, கால் முகம் ஆகியவற்றைக் குளிர்ந்த நீராற் கழுவிப் படுத்தால் உறக்கம் வரும். வயிறு புடைக்கச் சாப்பிட்டு விட்டு இரவிற் படுக்கக் கூடாது. சற்று நடை பழகிவிட்டு வயிறு இலேசானவுடன் படுத்தால் உறக்கம் வரும்.

பாலில் தேன் சேர்த்து அருந்தி விட்டுப் படுத்தாலும் உறக்கம் வரும் பகலில் உணவுக்குப் பிறகு சற்றுப் படுக்கலாம் ஆனால் நல்ல தூக்கம் போடக் கூடாது. உடல் முழுவதும் ரிலாக்ஸ்டாக மனதில் எவ்வித எண்ணங்களுமின்றி படுத்திருந்தால் பகலில் எஞ்சிய நேரமும் முழுமையாகப் பயன்படும். டென்ஷன் இருக்காது. வெளிர் நிறத்திற் படுக்கை, தலையணை, விரிப்பு, போர்வை இருத்தல் நல்லது.

## முக்காடிட்டுப் போர்த்திக் கொள்ளுதலும் அதனால் வரும் வியாதியும்

படுத்து உறங்கும் பொழுது சிலர் முக்காடிட்டு முகத்தையும் மூடிக்கொண்டு தூங்குவார்கள் இதனால் வெளிக்காற்று உள்ளேயும் உட்காற்று வெளியேயும் செல்லமுடிவதில்லை. முக்காடு போட்டுக் கொண்டு தூங்கும் பொழுது முக்கடிற்குள் இருக்கும் அசுத்தமான காற்றை மூக்குத் துவாரங்கள் வழியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளுக்கிழுத்து அதை மறுபடி வெளியிடுகிறோம். முதலில் உள்ளிழுக்கும் பொழுது சுத்தமான காற்றானது கெட்டு வெளிவந்து வெளியிலிருக்கும் சுத்தக் காற்றையும் கெட்ட காற்றாக்குகிறது. அந்த அசுத்தக் காற்று வெளியிற் போக முடியாமல் முக்காட்டிற்குள்ளேயே உள்ளது. மறுபடியும் மூச்சு இழுக்கும் பொழுது முக்காட்டிற்குள்ளிருக்கும் அசுத்தக் காற்றையே உள்ளுக்கிழுத்து மறுபடியும் வெளியே விடுகிறோம் இவ்வாறு மறுபடி அசுத்தக் காற்றை உள்ளுக்கிழுத்து வெளிவிடுவதாற் பலவித வியாதிகள் வருகின்றன. எனவே இரவில் ஒரு ஜன்னலையாவது திறந்து வைத்துக் கொண்டு, கழுத்து வரை தான் போர்த்திக் கொண்டு தூங்கக் வேண்டும்.

## கவனிக்க வேண்டிய 7 விடயங்கள்

| | | |
|---|---|---|
| கவனி | : | உன் வார்த்தைகளை |
| கவனி | : | உன் செயல்களை |
| கவனி | : | உன் எண்ணங்களை |
| கவனி | : | உன் நடத்தையை |
| கவனி | : | உன் இதயத்தை |
| கவனி | : | உன் முதுகை |
| கவனி | : | உன் வாழ்க்கையை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலமான வாழ்க்கைக்கு
# சுலபமான சித்த வைத்தியக் குறிப்புகள்

1. கோதுமை கஞ்சி மாதவிடாய் காலங்களில் சாப்பிட அக்காலங்களில் ஏற்படும் உடல் சோர்வு நீங்கி பலம் பெறும்.
2. மெலிந்த உடல் பெருக்கமடைய கடலை நேந்திரம் வாழைப்பழம், பசும்பால் தினமும் சாப்பிட்டு வர பயன்கிட்டும்.
3. பீட்ரூட் கிழங்கை அடிக்கடி சேர்த்து வர உடல் வளர்ச்சி நன்கிருக்கும். நரம்பு தளர்ச்சி நாளடைவில் சரியாகும்.
4. துளசி விதைகளை தூள் செய்து சாப்பிட்டு வந்தால் நரம்புகளில் ஏற்படும் வலி குணமாகும்.
5. வல்லாரை குடிநீர் ஞாபக சக்தியை தூண்டும்.
6. பிரம்மபத்திரம் கோரக்கர் மூலிகை இரண்டும் நீர் சிறிது பருக (மாதம் ஒரு முறை) உடல் கட்டும் ஆயுள் நீடிப்பும் உண்டாகும்.
7. உடல் உஷ்ணத்தை தணிக்க தினமும் ஆட்டுப்பால் சாப்பிட்டு வர குளிர்ச்சி பெறும்.
8. உடல் உறுதி பெற அவலுடன் நெய் சேர்த்து சாப்பிட்டு வர உடற் சோர்வு நீங்கி உறுதிபடும்.
9. உழுத்தம் பருப்பு உணவுகளை சேர்த்து வருவதால் இடுப்பு பகுதி நரம்புகள் பலம் பெறும்.
10. எலுமிச்சை சாதம் வாரத்தில் மூன்று நாள் காலையில் சாப்பிட பித்தத்தைத் தணிக்கும்.
11. கருங்குருவை அரிசி சமைத்து சாப்பிட்டு வர உடல் நஞ்சு நீங்கும்.
12. கேழ்வரகு கூழ் அடிக்கடி சாப்பிட்டு வர உடல் உறுதி பெறும்.
13. சிறு பசலைக்கீரை உண்டு வர சிற்றின்ப வேட்கை அதிகமாகும்.
14. சேப்பக்கிழங்கு நரம்புகளை பலப்படுத்தும்
15. தக்காளிக்காய் சாப்பிட்டு வர உடல் வீக்கம் குறையும். தோல் நோய் குணமாகும்.
16. தயிர் சாதம் காலை வேளையில் சாப்பிட்டு வர உடல் சூட்டை தணித்து உற்சாகத்தை கொடுக்கும்.
17. நோய் எதிர்ப்பு சகதி அதிகம் தரவல்ல பப்பாளி பழம் அடிக்கடி உண்ணுதல் நலம்.
18. உளுந்து தைலம் உடல் முழுக்கத் தடவி அழுத்திப் பிடித்து விட நரம்பு தளர்ச்சி சரியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. விக்கல் குணமாக விரலி மஞ்சள் ஒரு துண்டை சுட்டு கரியாக்கி உண்ணலாம்.

20. சித்திராப்பாலாடை கீரையை பருப்புடன் சேர்த்து உணவுடன் உண்டுவர வாய்ப்புண், உதடு வெடிப்பு குணமாகும்.

21. வாய்ப்புண், பல்வலி குணமாக கொள்ளுக்காய் வேளை வேரை கொதிக்க வைத்து வாய் கொப்பளிக்க சரியாகும்.

22. வாய்ப்புண் குணமாக அகத்திக்கீரை மற்றும் மணத்தக்காளிக்கீரை சமைத்து சாப்பிட்டால் இரண்டு நாளில் குணமாகும்.

23. அத்தி இலை அடிக்கடி உண்ண உதட்டுப் புண், வாய்ப்புண் குணமாகும்.

24. மாதுளம்பழம் அடிக்கடி சாப்பிட்டு வந்தால் ஞாபகசக்தி, எலும்பு உறுதி, பற்கள் உறுதிபடும்.

25. வாய் வீச்சத்தை போக்கி விட தினமும் கோதுமை புல்லை மென்று துப்பிவிட துர்நாற்றம் விலகும்.

26. பிரயான் பாலைத் தடவி வர பல் ஆட்டம், பல்வலி, ஈறுவீக்கம் குணமாகும்.

27. முன்னைக்கீரையை பருப்புடன் சேர்த்து சமைத்து சாப்பிட பசி மந்தம், மயக்கம் தீரும்.

28. புளியாரை கீரை உணவுடன் சேர்த்து வர மூல வாயு, பித்தம், சுவையின்மை, மயக்கம் தீரும்.

29. முள்ளிக்கீரையை அடிக்கடி உணவுடன் சேர்த்து உண்டுவர பசியின்மை மாறி நன்கு பசி உண்டாகும்.

30. ஆதொண்டை இலையை நெய்யில் வதக்கி துவையலாக்கி உணவுடன் உட்கொள்ள சுவையின்மை, பசியின்மை நீங்கும்.

31. சீரகத்தை வறுத்து பொடி செய்து வாழைப்பழத்துடன் சாப்பிட்டால் சுகமான நித்திரை வரும்.

32. நெல்லிக்காய் சாறு 1 அவுன்ஸ் குடித்தால் எப்படிப்பட்ட கிறுகிறுப்பும் குணமாகும்.

33. வேப்பம் பூவை வறுத்து பொடி செய்து பருப்புடன் ரசத்துடன் கலந்து சாப்பிட வாந்தி நிற்கும்.

34. கர்ப்ப கால வாந்திக்கு லவங்க பொடியை நீரில் கலந்து 1/2மணிநேரம் ஊறவைத்து வடிகட்டி பருகினால் வாந்தி நிற்கும்.

35. குமட்டல் நீங்க வெற்றிலைக் காம்பை வாயில் அதக்கினால் சரியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொள்ளும் எமது பாசமிகு குடும்பத் தலைவர் அமரர் வைத்திய ரத்னா Dr.சுப்பிரமணியம் ஸ்ரீவிக்கினேஸ்வரா அவர்கள் சிவனடி சேர்ந்த செய்திகேட்டு உடன் வந்து உதவியவர்களிற்கும், நேரடியாகவும் தொலைபேசி வாயிலாகவும் ஆறுதல் கூறியவர்களிற்கும், கண்ணீர் அஞ்சலிகள், மலர் வளையங்கள், பதாகைகள் மூலம் தமது அஞ்சலிகளைச் செலுத்தியவர்களிற்கும், இறுதி ஊர்வலத்தில் மயானம் வரை வந்து இறுதி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் அனைத்து கிரியைகளும் சிறப்புற நடாத்த உதவிய சகலருக்கும் கீரிமலை புனித தீர்த்தத்தில் கிரிகைகளில் பங்குபற்றிய அனைவரிற்கும் மற்றும் அந்தியேட்டி சபிண்டீகரண தினத்திற்காக எம்முடன் தோளோடு தோள் கொடுத்து அனைத்து கடமைகளிலும் உதவிபுரிந்த அவைருக்கும் இன்று நடைபெறும் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் ஈடுபட்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் நன்றி கூறத் தவறிய அனைத்து நெஞ்சங்களிற்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளையும் வணக்கங்களை யும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வார்த்தைகளே இல்லாத வடிவம்
அளவுகோலே இல்லாத அன்பு
சுயநலம் இல்லாத இதயம்
எவர்க்கும் உதவும் நெஞ்சம்
வெறுப்பைக் காட்டாத முகம்...

அப்பா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org